# அபூர்வப் பிறவிகள்

ஆசிரியர்

(மாறன்)

அன்னை
தமிழியல் துறை.

## கார்த்திகேயினி பிரசுரம்

[illegible] :: புதுக்கோட்டை சமஸ்தானம்

முதல் வெளியீடு : ஜனவரி 1947

உரிமை பதிவு
செய்யப்பெற்றது.

விலை ரூ. இரண்டரை.
(தபால் செலவு தனி)

காமராசர் பல்கலை
அவ்வை
தமிழியல் துறை

அச்சிட்டோர் :

பாப்பா பிரஸ்
இராயவரம்

# சமர்ப்பணம்

எனது ஹாஸ்யக் கற்பனையை வளர்ப்பதற்கு உதவியளித்த என் **சைக்கிளு**க்கு இந்நூல் சமர்ப்பணம்



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

# முன்னுரை

வேடிக்கையான ஒரு சம்பவத்தைப் பார்த்தால், அதைப் பிறரிடம் சொல்லி மகிழ வேண்டுமென்று நமக்குத் தோன்றுகிறதல்லவா? இதே போல என் மனதில் உருவெடுத்த ஹாஸ்யக் கற்பனைகளை வாசகர்களுக்குச் சொல்ல விரும்பிக் கதைகளாக எழுதினேன். எனது ஹாஸ்யக் கதைகளில் வரும் அபூர்வப்பிறவிகளில் சிலவற்றை நேயர்கள் நேரிலேயே பார்த்திருக்கலாம். இன்னும் சிலவற்றைக் கற்பனை உலகில் தான் கண்டு ரசிக்க முடியும்.

இந்தத் தொகுதியில் உள்ள கதைகள் யாவும் எனது சொந்தக் கற்பனைகள். மாரீசச் சரக்கு அல்ல. எனது கற்பனைக் கடலில் விளைந்த முத்துக்கள். இவற்றில் சுண்டு முத்துக்களும் உண்டு; சொட்டை முத்துக்களும் இருக்கலாம். வாசகர்கள் தங்கள் ரசனைக்கேற்றபடி இவைகளின் தராதரத்தை மதிப்பிட்டுக் கொள்ளவும்.

அபூர்வப்பிறவிகள், கார்மேக சுந்தரி, யுக்தி பலித்தது ஆகிய மூன்று கதைகளும் "ஆனந்தவிகட"னில் வெளியானவை. "வசந்தம்" சாந்தசாமியின் ஜாதகம், இல்லறமும் துறவறமும், பாவமா பழியா?, கார்விடு தூது, ஹாஸ்ய நடிகன், ஆகிய கதைகளைப் பிரசுரித்தது. காதல் வேண்டாம், தீபாவளி இரகசியம், இன்ஷ்யூரன்ஸ் ரங்கு, "நவயுவ"னில் வந்தவை. என் சைக்கிள், கோவில் பூனை இவைகள் முறையே "தமிழர"சிலும், "இந்திரா"விலும் பிரசுரமானவை. இக்கதைகளைப் புத்தகமாக வெளியிட அனுமதித்த பத்திராதிபர்களுக்கு எனது நன்றி. என் கதைகள் புத்தகமாக வெளிவருவதில், ஆர்வம் கொண்ட எனது நண்பர்களுக்கும், பதிப்பாசிரியருக்கும் எனது அன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மாறன்"

திருச்சி
27—11—46

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | அபூர்வப் பிறவிகள் | ... | 1 |
| 2. | கார்மேக சுந்தரி | ... | 10 |
| 3. | பழியா? பாவமா? | ... | 22 |
| 4. | ஹாஸ்ய நடிகன் | ... | 29 |
| 5. | வீண் பிரயத்தனம் | ... | 49 |
| 6. | கலியுகக் கணபதி | ... | 60 |
| 7. | தீபாவளி இரகசியம் | ... | 69 |
| 8. | கார்விடு தூது | ... | 81 |
| 9. | இல்லறமும் துறவறமும் | ... | 93 |
| 10. | யுக்தி பலித்தது | ... | 103 |
| 11. | காதல் வேண்டாம் | ... | 108 |
| 12. | இன்ஷ்யூரன்ஸ் ரங்கு | ... | 115 |
| 13. | வசீகரண மோதிரம் | ... | 140 |
| 14. | சாந்த சாமியின் ஜாதகம் | ... | 148 |
| 15. | சைக்கிளின் காதை | ... | 168 |

தி. க. சண்முகம் நூலகம்.

# அபூர்வப் பிறவிகள்

முருகேசனுக்கு அவன் பெற்றோர்கள் இட்ட பெயர், அவன் வீட்டில் மட்டும் தான் வழங்கி வந்தது. ஊரில் சுக்குச் செட்டி என்பதுதான் அவனைக் குறிக்கும் பெயர். சுக்குக்கும் செட்டிக்கும் எவ்வளவு சம்பந்தம் உண்டோ, அவ்வளவு சம்பந்தம் முருகேசனுக்கும் மூளைக்கும் உண்டு. அவனுக்கு ஏற்ற "பேயுமானவர் கலாசாலை" யிலேயே முதல் பாரத்தில் சேர்ந்தான். மூன்று வருஷத்திற்கு மேல் எந்தப் பையனையும் ஒரே வகுப்பில் வைத்திருக்கக் கூடாதென்பது அந்தக் கலாசாலையின் முக்கிய சட்டங்களில் ஒன்று. அந்தச் சட்டத்தின் ஆதரவின்கீழ் முருகேசன் இரண்டாவது பாரத்தில் தேறி மூன்றாவது பாரத்தை அடைந்தான்.

பல தடவை தோல்வி யடைந்தவன்தானே வெற்றியின் இன்பத்தை அதிகமாக உணர்வான்? எனவே, முருகேசன் மூன்றாவது பாரத்துக்கு மாற்றப்பட்டவுடன் தலைகால் தெரியாமல் குதித்ததில் ஆச்சரியமில்லை. அவன் தேறினதில் அவனைவிட அவன் தகப்பனார் ரங்கநாத முதலியாருக்கு

அதிக சந்தோஷம். தம் குமாரன் பரீக்ஷையில் தேறிவிட்ட இந்த அபூர்வ சம்பவத்தை அவர் தம் நண்பர்கள் ஒவ்வொருவரிடமும் சொல்லி மகிழ்ந்தார்.

புதுப் புத்தகங்களை முருகேசன் அடிக்கடி திருப்பினுன். அதிலுள்ள படங்கள் அவனுக்கு அழகாகஇருந்தன. பாடங்களின் முதல் வாக்கியங்களைத் தனக்குத் தெரிந்த பாஷையில் படித்துப் பார்த்தான். அவன் புஸ்தகமும் கையுமாக இருந்ததைப் பார்த்தால், "சுக்குச் செட்டி இந்த வகுப்பில் முதல் வருஷத்திலேயே தேறிவிடுவான் போலிருக்கிறதே" என்று மற்றவர்கள் ஆச்சரியப்படும்படி இருந்தது.

கோடை விடுமுறை கழிந்து, பள்ளிக்கூடம் திறந்தது. முருகேசன் அன்றையதினம் என்றுமில்லாத அலங்காரத்தோடு தன் பழைய இடத்தில் போய் உட்கார்ந்தான். பரீக்ஷையின் முடிவு தெரிவிக்கப்பட்டது. தன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் தானும் தேறி விட்டதாகவே நினைத்துக் குதித்தான் முருகேசன். மற்றவர்கள் சொன்ன பிறகுதான் அவன் தேறவில்லை என்பது அவனுக்குத் தெரிய வந்தது. ஒவ்வொரு வருஷமும் அவன் அவ்வாறு மற்றவர்களிடம் கேட்டுத்தான் தன் பரீக்ஷை முடிவைத் தெரிந்துகொள்வது வழக்கம்.

ரங்கநாத முதலியார் தம் மகனுடைய வரவை எதிர்பார்த்த வண்ணம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். பையன் முகத்தைத் தொங்கவிட்டுக்

கொண்டு வருவதிலிருந்தே அவருக்கு விஷயம் விளங்கி விட்டது. தன் தகப்பனர் பக்கத்தில் வந்தவுடன் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். முதலியார், "முத்தய்யா பிள்ளைதானே ஹெட்மாஸ்டர்? நான் சொன்னல் அவர் கேட்பார். உன்னைப் பாஸ் பண்ணிவிடச் சொல்லுகிறேன்" என்று அவனைத் தேற்றினர். பின்பு அவர் பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கு உண்டான முஸ்தீபுகளைச் செய்ய ஆரம்பித்தார்.

மத்தியானச் சாப்பாடு முடிந்தது. அவர் பெஞ்சு மாஜிஸ்திரேட்டாக இருந்தபோது அணிந்து கொள்ளும் உடைகளோடு பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டார்.

முக்கால்வாசி தூரம் போனதும் அவருக்கு ஒரு யோசனை தட்டுப்பட்டது. உடனே முருகேசனைப் பார்த்து, "அடே பையா! நடந்து போனல் அவர் கௌரவமாக எண்ணமாட்டார். வீட்டுக்குப் போய் அங்கிருந்து வண்டியில் ஏறிவருவோம்" என்று சொல்லிக் கொண்டே இருவரும் வீடு திரும்பினர்கள்.

மறுபடியும் சகுனம் பார்த்தபின், இருவரும் வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள். வண்டி பள்ளிக்கூடம் போய்ச் சேருவதற்குள் பத்துத் தடவை நிறுத்திப் பையனை வீட்டுக்கு அனுப்பி, பொடிடப்பி, கடியாரம், மூக்குக் கண்ணடி, பவுண்டன் பேன, செருப்பு இவற்றை ஒவ்வொன்ருக எடுத்து வரச் சொன்னர். வண்டி பள்ளிக்

கூடத்தின் பக்கத்தில் போய் நின்றது. முதலியார் வண்டியை விட்டுக் கீழே இறங்கினர். உடனே திரும்பவும் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு, "பையா! அறை வீட்டில் 'வாக்கிங் ஸ்டிக்' (கைத் தடி) வைத்திருக்கிறேன். எடுத்துக்கொண்டு ஓடி வா" என்று சொல்லி முருகேசனை வீட்டிற்கு அனுப்பினர்.

முருகேசன் சாவியை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு ஓடினன். அறையைத் திறந்தான். மூலையில் இரண்டு தடிகள் இருந்தன. எதைக் கொண்டு போவதென்று முருகேசனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. முடிவில் இரண்டையும் எடுத்துக் கொண்டு போனன்.

இரண்டு தடிகளையும் முருகேசனையும் பார்த்தார் ரங்கநாத முதலியார். அவருக்குத் தம்மையறியாமலே சந்தோஷமுண்டாயிற்று. "ஏண்டா இரண்டையும் எடுத்துக்கிட்டு வந்தாய்? ஏதாவது ஒன்றைத்தானே கொண்டுவர வேண்டும்!—நல்ல வேளையாக 'எதை எடுத்துக் கொண்டு வர?' என்று கேட்பதற்கு ஒரு தடவை வந்து விட்டுப் போகாமல் இரண்டையும் எடுத்துக் கொண்டு வந்தாயே. அந்த மட்டிலும் புத்திசாலிதான்! இந்தப் புத்திசாலித் தனமெல்லாம் பரீக்ஷை எழுதும்போது எங்கே போய்விட்டது? அதிருக்கட்டும், ஹெட்மாஸ்டர் அறையில் இருக்கிருரா என்று பார்த்து விட்டுவா" என்ருர்.

முருகேசன் ஹெட்மாஸ்டர் அறைக்குப் போனன். போகும் வழியில் ஹெட்மாஸ்டரைச்

சந்தித்தான். முருகேசன் சொன்னால் சொன்ன படி நடப்பவன் அல்லவா? ஆகையால் அவர் அறையில் இல்லை என்பதை நேரில் பார்த்து விட்டுத் தகப்பனாரிடம் வந்து, "அவர் அறையில் இல்லை" என்று சொன்னான்.

சற்று நேரம் கழித்து முருகேசனை அவன் தகப்பனார் திரும்பவும் அனுப்பினார். இந்தத் தடவை அவன் போய் விட்டு வந்து, "இருக்கிறார்" என்றான்.

ரங்கநாத முதலியார் வாக்கிங் ஸ்டிக்கை வண்டிக்காரனிடம் கொடுத்து நன்றாகத் துடைத்து வாங்கிக் கொண்டு கம்பீரமாக நடந்து ஹெட்மாஸ்டர் அறைக்குப் போனார்.

ஹெட்மாஸ்டர் அவரைக் கண்டதும், "வாருங்க, இப்படி நாற்காலியிலே உட்காருங்க! ஏது இப்படி வந்தது?" என்று விசாரித்தார்.

"இல்லை மாப்பிளே, (இரண்டு நாள் பழகினவர்களையும் முதலியார்வாள் இந்தமாதிரி பந்துத்துவத்தோடுதான் அழைப்பது வழக்கம்) இவன் நம்ம பையன்........"

"அடடா! அப்படியா சங்கதி? எனக்குத் தெரியாதே! எங்கே படிக்கிறான்? இந்தப் பள்ளிக்கூடத்திலே சேர்க்க வேண்டுமா?" என்று கேட்டார்.

ஹெட்மாஸ்டருக்கு ஞாபக மறதி அதிகம். அவர் சில சமயங்களில் துஷ்டப் பையன்களை

அடிப்பதற்காகத் தம் அறைக்குக் கூட்டிக் கொண்டு போவார். பின்னால் சென்ற பையன் பயந்துகொண்டு அறையின் வாசலில் நிற்பான். அவர் தம் நாற்காலியில் உட்கார்ந்ததும் வாசலில் நிற்கும் பையனைப் பார்த்து "ஏண்டா தடியா, மணியடித்த பிறகும் வகுப்பிற்குப் போகாமல் எங்கே நிற்கிறாய்? உனக்கு இங்கு என்ன வேலை? ஒரு அணா அபராதம். போ, வகுப்பிற்கு" என்று அதட்டி விரட்டுவார்.

புதிதாகப் பள்ளிக்கூடத்தில் சேர வரும் பையன்கள் அவருடைய அறையில் நின்றுகொண்டிருக்கும்போது, "வாத்தியாரிடம் ஏண்டா துஷ்டத்தனம் பண்ணினே?" என்று அவர்களைப் பிரம்பினால் வெளுத்து விடுவார்.

எவ்வளவோ சிரமப்பட்டு ரங்கநாத முதலியார், முருகேசன் தம்முடைய மகன் தான் என்பதையும், அவன் மூன்றாவது பாரத்தில் தவறி விட்டதையும், அவனை எப்படியாவது நான்காவது பாரத்திற்கு அனுப்பிவிட வேண்டுமென்பதையும் தெரிவித்தார்.

"இதற்காகவா நீங்கள் இங்கே வந்தீர்கள்? தான் இன்னானென்று பையன் ஒரு வார்த்தை சொன்னால் போதாதா? நான் பாஸ் போட்டிருப்பேனே!" என்று மழுப்பினார் ஹெட்மாஸ்டர்.

"மூந்தாநாள் பையன் உங்களிடம் வந்து 'நான் ரங்கநாத.......' என்று ஆரம்பிப்பதற்குள் நீங்கள் 'ரங்கநாதனை ஏண்டா அடிச்சே? போய்ப்

பெஞ்சிமேலே ஏறி நில்' என்று சொல்லித் துரத்தி விட்டீர்களாம்'' என்றார் முதலியார்.

அதற்கு ஹெட்மாஸ்டர் "அப்படியிருக்காதே! பையன் ஞாபக மறதியாய் உங்களிடம் சொல்லி யிருப்பான். நீங்கள் போங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். கவலைப்பட வேண்டாம். பையன் கெட்டிக்காரன்தான். ஏதோ இந்த வகுப்பில் தவறிவிட்டான். அதனால் என்ன? பரவாயில்லை. நான்காவது பாரத்திலேயே வைத்து விடுகிறேன்'' என்று சொல்லியவுடன், முதலியாருக்குப் பரம திருப்தி உண்டாயிற்று.

அவர் பையனைக் கூட்டிக்கொண்டு வெளியே போகையில் ஹெட்மாஸ்டர், "முருகேசா, நாளை என்னை வந்து பார்'' என்று சொல்லி அனுப் பினார்.

மறுநாட் காலை முருகேசன் பள்ளிக்கூடத் திற்குப் புறப்பட்டான். ஹெட்மாஸ்டர் அறையினுள் சென்று, "குட்மார்னிங் ஸார்'' என்று சொல்லி விட்டு நின்றான். அவன் நின்றுகொண்டிருப்ப தைப் பார்த்தவுடன் ஹெட்மாஸ்டருக்குக் கோபம் வந்து விட்டது. "சாக்பீஸ் வேண்டுமானால் பியூ னிடம் போய்க் கேட்கிறதுதானே! இங்கே வந்து ஏன் தொந்தரவு பண்ணுகிறாய்? நீ மானீட்டர் வேலைக்கு லாயக்கில்லை, போ! வாத்தியாரை வரச் சொல், நில்லாதே'' என்று சீறி விழுந்தார்.

தான் இன்னும் அங்கே நின்றால் பிரம்பை எடுத்து வெளுத்து விடுவாரென்று பயந்து

முருகேசன் வீட்டுக்குத் திரும்பிவிட்டான். தன் தகப்பனரிடம் நடந்த விஷயங்களைச் சொன்னன். "ஏதோ அவசரமாக வேலை பார்த்துக்கொண்டிருக்கும்போது நீ போயிருப்பாய். சரி, இருக்கட்டும், நாளைக்கு இந்தக் கடிதத்தை அவரிடம் கொண்டு போய்க்கொடு. உன்னைக் கட்டாயம் நான்காவது பாரத்திற்கு அனுப்பி விடுவார்" என்று சொல்லி ஹெட்மாஸ்டருக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார்.

மறுநாள் முருகேசன் கடிதத்தைக் கொண்டு போய் ஹெட்மாஸ்டரிடம் நீட்டினன். அவர் அவனுடைய முகத்தைப் பாராமலே கடிதத்தைப் பிடுங்கிக் கிழித்து வீசி விட்டார். முருகேசன் திகைத்து நிற்கையிலேயே, "பள்ளிக்கூடம் திறந்து இரண்டு நாளைக்குள்ளே என்னடா லீவ் லெட்டர்? லீவு கிடையாது. போடா வகுப்புக்கு........என்ன? இன்னும் முழித்துக் கொண்டு நிற்கிருயா? பியூன்! இவனைக் கொண்டுபோய் வகுப்பில் விட்டு விட்டு வா" என்று உத்தரவிட்டார்.

பின்பு முருகேசன் பியூனிடம் நல்ல வார்த்தை சொல்லித் தப்பிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

முருகேசன் அந்த வருஷமும், அடுத்தவருஷமும், அதற்கடுத்த வருஷமும் மூன்ருவது பாரத்திலேயே வாசித்து வந்தான். மூன்ருவது வருஷத்தில் கட்டாயத் தேறுதல் உண்டு என்ற சட்டமும் முருகேசன் விஷயத்தில் விதி விலக்காயிற்று. அந்த வகுப்பை விட்டு மேலே போக முடியா

தென்ற நிச்சயம் அவனுக்கு ஏற்பட்டு விட்டதால் அவன் அந்தப் பள்ளிக்கூடத்தையே விட்டு விட்டான்.

ரங்கநாத முதலியார் யாரைக் கண்டாலும், "இந்தப் 'பேயுமானவர் கலாசாலை' ரொம்பக் கெட்டுப் போச்சு, ஸார். பையன்களை நாலு வருஷமாக ஒரே வகுப்பில் வைத்திருந்தால் பள்ளிக்கூடத்தின் பெயர் ஏன் இப்படிக் கெட்டுப் போகாது?" என்று சொல்லித் தம் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வார். அதோடு பையன்களை ஒவ்வொரு வருஷமும் மேல் வகுப்புக்கு அனுப்புகிற பள்ளிக்கூடத்தில் தான் தம் பையனைச் சேர்க்கப் போகிறாராம், அப்படிப் பட்ட பள்ளிக்கூடம் அகப்படா விட்டால் அந்த மாதிரி ஒன்றைத் தாமே ஆரம்பிக்கப் போவதாகவும் சொல்லுகிறார்.

முருகேசனைப் போன்ற மாணவர்கள் ஆயிரக் கணக்காக இருக்கையில் அவருடைய எதிர்காலப் பள்ளிக்கூடத்தில் பையன்களுக்குக் குறைவு இருக்குமா?

# கார்மேக சுந்தரி

சந்நியாசியாக ஆவது மிகவும் கஷ்டமென்று தான் வேதாந்திகள் சொல்லுகிறார்கள். ஆனால் பஞ் சாமிர்தம் இதற்கு மாறுபட்ட அபிப்பிராயம் உடை யவர். அவர் தினசரி க்ஷவரத்தை இரண்டு மாதம் நிறுத்தினார். தாடி தானாகவே வளர்ந்து விட்டது. செங்குளத்துத் தண்ணீரில் இரண்டு தடவை குளித்த காரணத்தால் அவருக்குக் காவி வஸ்திரம் எளிதாகக் கிடைத்தது. இன்னும் உருத்ராக்ஷ மாலை ஒன்றுதான் பாக்கி. அதைப் பற்றி அவர் கவலைப்படவே யில்லை. ஏனென்றால் ஜனங்கள் அது இல்லாமலிருக்கும் போதே அவருக்கு சுவாமி கள் பட்டத்தைச் சூட்டி விட்டார்கள்.

பஞ்சாமிர்தத்துக்குப் பட்டினத்தார் பாடல்கள் அக்ஷரப் பாடம். எந்த எழுத்து எந்த இடத்தில் இருக்கிறதென்று அவரால் சொல்ல முடியும். தாயு மானவரைத் தலைகீழாகவே ஒப்புவிப்பார். தம் மனைவியின் ஞாபகம் வரும் வேளைகளில் அவருக்குத் தோன்றாத் துணைவனாக உதவுவது பட்டினத்தார் பாடல்கள் தான். அதில் பெண்களைப் பற்றிச் சொல்லியிருப்பவற்றை உடனே எடுத்து அலசி

வியாக்கியானம் பண்ண ஆரம்பித்து விடுவார். பஞ்சாமிர்தம் வாயைத் திறந்து விட்டால் கூட்டத்திற்குப் பஞ்சமே கிடையாது.

"காயமே இது பொய்யடா; காற்றடைத்த பையடா!" என்பார் பஞ்சாமிர்தம். கூட்டத்திலுள்ளவர்கள் மூக்கின் மேல் விரலை வைத்துக் காற்று இருக்கிறதா என்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வார்கள். அல்லது தங்கள் வாய்களைத் திறந்து கொண்டு சுவாமிகள் சொல்லியபைக்கு அதுதான் வாய் என்பதைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டுவார்கள்.

ஹிஸ் ஹோலினஸ், நித்யானந்த, பரமானந்த, யோகீஸ்வர, பஞ்சாமிர்த அடிகளின் மதிப்பு ஒவ்வொரு படியாக உயர்ந்து கொண்டே வந்தது. அவர் பெரிய தத்துவ ஞானியென்பது பொதுஜன அபிப்பிராயம். அவரிடம் ஏதோ சித்து இருக்கிறதென்று சிலர் நம்பினுர்கள். இரண்டொருவர் அவருக்கு இரசவாதம் கூடத் தெரியும் என்ற வதந்தியை இரகசியமாக எல்லோரிடமும் பரப்பி வந்தார்கள்.

அவ்வூரிலுள்ள பாடாவதி லிங்கம் பிள்ளைக்கும் இந்த இரசவாதச் செய்தி எட்டிற்று. "பணம் காய்க்கிற மரம் இருக்கிறது" என்று யாராவது சொன்ஞல் "அது பவுனைக் காய்க்குமா?" என்று கேட்பார் பாடாவதி லிங்கம். அவருக்குக் கூடிய சீக்கிரம் யோகம் அடிக்கப் போவதாகச் சில

நாளைக்கு முன் எமகண்ட ஜோசியர் சொல்லியிருந்தார். அதற்காகவே அவர் நாலைந்து இரும்புப் பெட்டிகளுக்கு ஆர்டர் செய்திருந்தார். பஞ்சாமிர்த சுவாமிகளைப் பற்றி அவர் கேள்விப் பட்டவுடனேயே, ஜோஸ்யம் தம் விஷயத்தில் பலித்துவிடு மென்ற நம்பிக்கை அவருக்கு உண்டாயிற்று. பஞ்சாமிர்தத்தை எப்படியாவது குல்லாப் போட்டு இரசவாத வித்தையைக் கற்றுக் கொள்ளத் தீர்மானித்து விட்டார் அவர்.

மறுநாள் பாடாவதி லிங்கம் பஞ்சாமிர்தத்தினிடம் போய்க் கைகட்டி வாய் பொத்தி அடியார்க்கடியாராகக் குழைந்து கொண்டு நின்றார். அப்போது ஸ்ரீலஸ்ரீ பஞ்சாமிர்தம் "இரு கை தலைமேல் வைத்தழும் மைந்தரும் வீடு மட்டே" என்னும் பாட்டைப் பதம் பதமாகப் பிரித்து உள்ளங்கை விளக்கெண்ணையென விளக்கி உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார். பஞ்சாமிர்தத்தின் கை அசைவுக் கேற்றபடி பாடாவதி லிங்கத்தின் தலை ஆட ஆரம்பித்தது. சுவாமிகளுக்குப் பிள்ளையவர்களின் மீது அளவு கடந்த சந்தோஷம் உண்டாயிற்று. வியாக்கியானம் முடிந்ததும் அவர் "தாங்கள் யாரென்று அறியலாமோ" என்று கேட்டார்.

"அடியேன் பெயர் பாடாவதி லிங்கம். அடியேனுக்கு இந்த ஊர் தான். தங்களைப் பற்றி நான் ரொம்பக் கேள்விப் பட்டேன். ஏதோ சுவாமிகள் சொல்வதைக் கேட்கலாமென்று தான் வந்தேன். தாங்கள் சொன்ன பிறகு தான்

பட்டினத்தார் பாட்டுக்கள் இவ்வளவு பெரிதென்று எனக்குத் தெரிகிறது. அடடா! எவ்வளவு நீளம்! எவ்வளவு அகலம்! ஒரு பாட்டைப் படிக்க ஒரு நாள் பூராவும் காணாது போலிருக்கே! தங்களைப் போன்ற ஞானிகள் தான் அதற்கு வியாக்கியானம் செய்ய முடியும்...."

"இல்லை, இல்லை, யாரும் சாதாரணமாகப் படித்து அறிந்து கொள்ளலாம்! படிக்கும் போது மட்டும் மனதில் ஒரு விதக் கவலையும் இருக்கக் கூடாது. அவ்வளவு தான். வேண்டுமானால் நீங்கள் தினமும் இங்கே வரலாமே, உங்களுக்கு எல்லாம் நன்றாக விளங்கும்படி செய்யலாம்."

"உத்தரவு! சுவாமியிடம் ஒன்று கேட்டுக் கொள்ள வேண்டுமென்று அடியேனுக்கு ஆசை. கேட்கலாமோ?"

"தாராளமாகக் கேட்கலாமே."

"தாங்கள் என் குடிசைக்கு எழுந்தருளி இரண்டு நாள் தங்கியிருந்து எனக்கு வேதாந்த மார்க்கங்களைத் தெளிவு படுத்தவேண்டும். இதற்குத் தாங்கள் மறுக்கவே கூடாது."

"அதற்கென்ன? அடியார்களது வேண்டுகோளை நான் மறுக்கமுடியுமோ? பிறருக்கு எந்த நேரத்திலும் உதவி செய்யத்தானே இந்த ஜன்மம் எடுத்தது! அப்படியே செய்வோம். இப்போதே போவோமா?"

"தங்கள் சித்தம், என் பாக்கியம்."

பிள்ளையவர்கள் முன்னே நடக்க, பஞ்சாமிர்தம் தாடியை உருவி விட்டுக்கொண்டு பின்னே சென்றார். வழி முழுவதும் 'சிவ சிவ' என்ற முணு முணுப்பை அவர் விடவில்லை. வீட்டுக்கு வந்ததும் பிள்ளையவர்கள் சுவாமிகளுக்கு ஒரு அறையைக் காலி பண்ணிக் கொடுத்தார்.

சுவாமிகளுக்கு ஆகாரம் பாலும் பழமுந்தான். பூஜை செய்வதும் கண் மூடித் தியானம் பண்ணு வதும்தான் அவருடைய முக்கிய வேலைகள். பிள்ளையவர்கள் வந்தால் இடை இடையே பட்டினத்தார் பாடல்களுக்கு வியாக்கியானம். இவ்வாறு இரண்டு நாள் கழிந்தது.

மூன்றும் நாள் மத்தியானம் பிள்ளையவர்களின் மகள் கார்மேகசுந்தரி தலையைச் சிக்கெடுத்துக் கொண்டே சாமியார் இருந்த அறைக்கு எதிரே தற் செயலாக வந்தாள். உள்ளேயிருந்த பஞ்சாமிர் தத்தின் ரூபலாவண்யத்தைக் கண்டுசொக்கி அவள் இருபத்தேழு விநாடிகள் அதேயிடத்தில் நின்று விட்டாள். காலடிச் சத்தம் கேட்டுப் பஞ்சாமிர்தம் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தார். எதிரே நின்ற உருவம் ஒரு பேய்போல அவருக்குக் காட்சி யளித்தது. உடனே சட்டென்று கண்களை மூடிக் கொண்டு பிரணவ மந்திரத்தை 'மட மட' வென்று உச்சரித்தார்.

கார்மேகசுந்தரி சுற்றுமுற்றும் பார்த்து விட்டு அறையினுள் புகுந்தாள். " சாமி, இந்தத் தாடியை நாளைக்கே எடுத்துவிட வேண்டும். நான் உங்களைக்

காதலித்துவிட்டேன். நீங்கள் என்னைக் கட்டாயம் கலியாணம் செய்துகொள்ள வேண்டும். என் வேண்டுகோளுக்கு இணங்க நீங்கள் மறுத்தால் நான் அடுத்த வீட்டுக் கிணற்றில் விழுந்து விடுவேன். என் அப்பாவின் சம்மதத்தைப் பற்றி உங்களுக்குக் கவலைவேண்டாம்" என்று ஒரே மூச்சில் சொல்லிவிட்டு வெளியே போய் விட்டாள்.

"உபதேசம் பண்ணப் போன இடத்தில் உடும்பு பிடித்து இழுத்ததாம்" என்பது போல் சாமியார் வில்லங்கத்தில் மாட்டிக் கொண்டார். அவர் கடவுள் தியானத்தைத் தற்காலிகமாக நிறுத்தி விட்டுத் தமக்கு நேரிடப்போகும் கலியாண விபத்தை எப்படித் தடுப்பது என்ற ஆராய்ச்சியில் இறங்கினர்.

கார்மேகசுந்தரி பாடாவதி லிங்கம் பிள்ளையின் ஏக புத்திரி. அவள் மீதுள்ள பாசத்தாலேயே அவர் அவளை வெகுகாலமாகக் கலியாணம் செய்து கொடாமலிருந்தார். ஊரார் பழிப்பதை உத்தேசித்து முந்தின வாரம் அவளை ஒரு புருஷனுக்கு நிச்சயம் செய்தார். அவள் காதலித்ததாகச் சொன்ன கங்காள ராமன் தான் அந்தப் புருஷன். கலியாணம் நிச்சயமானதிலிருந்து கங்காளராமன் பிள்ளையவர்களின் வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தான். அவன் பஞ்சாமிர்தத்தை அதிகமாகக் கவனிக்கவேயில்லை.

கார்மேகத்தை நினைத்தாலே பஞ்சாமிர்தத்துக்குக் கதி கலங்கிற்று. இந்திர லோகத்தையே இனமாகக் கொடுத்தாலும் அவளைக் கலியாணம் செய்து

கொள்ளக் கூடாதென்பது சுவாமிகளின் தீர்மா னம். தாம் அவ்வாறு மறுப்பதனுல் ஒரு வேளை அவள் உயிரை விட்டு விட்டால், பெண் பழி தம்மை வந்து சேருமே என்று அவர் பயந்தார். என்ன செய்வதென்று அவர் திகைத்துக் கடைசியில் அங் கிருந்து ஓடிவிடுவதென்று தீர்மானித்து விட்டார்.

மறுநாள் காலை பஞ்சாமிர்தம் மறைந்து விட்ட செய்தி வீட்டுத் தீ போல் வெளியே பரவிற்று. இத னுல் பக்தர்கள் துக்கசாகரத்தில் மூழ்கித் திளைத்தார் கள். கார்மேகசுந்தரி துயரக்கடலின் ஆழத்தையே கண்டுவிட்டாளென்று சொல்ல வேண்டும். அவள் அன்று முழுதும் குளிக்கவேயில்லை. ஏனென்ருல், தான் பெருக்கிய கண்ணீர் வெள்ளத்திலேயே அவள் தலை முழுகி விட்டதாகச் சொல்லிவிட்டாள்.

பாடாவதி லிங்கம் தம் மகளைத் தேற்றிப் பார் த்தார். பயனில்லை! காதலனைக் காணுதிருக்கும் ஒரு காதலியை யாரால் தான் தேற்ற முடியும்! அவளுடைய பழைய காதலன் கங்காள ராமன் கூட வந்து சொல்லிப் பார்த்தான். "நான் பஞ்சாமிர் தத்தைப் பார்த்தா லொழியத் தூங்கமாட்டேன்!" என்று சொல்லிவிட்டுத் தன் கட்டிலில் போய்ச் சாய்ந்து கொண்டாள். பின்பு அநேகர் எழுப்பி னுர்கள். அவள் எழுந்திருக்கவேயில்லை.

அன்று இரவு கார்மேகசுந்தரி சில நகைகள் ரூபாய்களுடன் வீட்டைவிட்டு ஓடிப்போய் விட் டாள். இது கங்காள ராமனுக்குத் தெரிந்தது. பிர யாண முஸ்தீபுகளுடன் அவன் கார்மேகத்தைத்

தேடப் புறப்பட்டான். சாமியார் கார்மேகத்தை ஏறிட்டுப் பார்க்க மாட்டாரென்பதும், கடைசியில் அவள் தன்னையே கலியாணம் செய்து கொள்ள வேண்டி வருமென்பதும் கங்காளனுக்குத் தெரியும். அதனால் அவளைத் தேடுவது தன்கடமை யென்று அவன் எண்ணினான்.

பஞ்சாமிர்தம் தான் தீர்மானித்தபடி அன்றைய இரவு புறப்படும் ரயிலில் ஏறித் திருச்சியில் வந்து இறங்கினார். அவர் அங்கே போனதை எப்படியோ தெரிந்துகொண்ட கார்மேக சுந்தரி மறுநாள் திருச்சிக்கு வந்து சேர்ந்தாள். அவள் தன் ஜாகைக்கு வருவதற்குள் பஞ்சாமிர்தம் திருச்சியிலிருந்து சிதம்பரத்துக்குப் பிரயாணமாகி விட்டார்.

கங்காளம் துப்புத் தெரிந்துகொண்டு திருச்சிக்கு வந்தபோது கார்மேகமும் சிதம்பரம் போய் விட்டாளென்று தெரிந்தது. அதே சமயம் பஞ்சாமிர்தம் சென்னைக்குப் போய் விட்டார்.

கங்காளராமன் முயற்சியைக் கைவிடாமல் சிதம்பரத்துக்கு டிக்கட் எடுத்தான். அவன் அங்கே போய்ச் சேர்வதற்குள் கார்மேகம் சென்னைக்குப் போய்விட்டதாகச் செய்தி கிடைத்தது. கார்மேகம் சென்னைக்கு வந்தது தெரிந்தவுடன் பஞ்சாமிர்தம் காற்றாய்ப் பறந்து நாகப்பட்டணம் மெயிலில் ஏறிவிட்டார். இவ்வாறு ஒருவரையொருவர் துரத்திக்கொண்டே வெகுதூரம் ரயிலிலேயே பிரயாணம் செய்தார்கள். பஞ்சாமிர்தம்



2 அ. பி

கடைசியாகப் பம்பாய் போய்ச் சேர்ந்தார். அவர் ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு இரவைக் கழிப்பதற்காக ஒரு படக் காட்சிக்குச் சென்றார்.

கார்மேகம் ஸ்டேஷனுக்கு வந்தபோது பஞ்சாமிர்தம் பம்பாய்க்கு டிக்கட் வாங்கினதாகக் கேள்விப்பட்டாள். உடனே அவள் ஒரு வாடகை மோட்டார் அமர்த்திக்கொண்டு, பஞ்சாமிர்தம் போய்ச் சேர்ந்த அன்று மாலையிலேயே, பம்பாயில் போய் இறங்கினாள். அவள் அங்கே விசாரித்ததில் பஞ்சாமிர்தம் சினிமாவுக்குப் போயிருப்பதாகச் செய்தி கிடைத்தது. கார்மேகமும் உடனே டிக்கட் எடுத்துக்கொண்டு அந்தக் கொட்டகையினுள் நுழைந்தாள்.

புத்தியில் கங்காளம் கார்மேகத்துக்கு மிளகளவும் குறைந்தவனல்ல. தன் காதலி கார் அமர்த்திக் கொண்டு பம்பாய் சென்றதையறிந்த அவன், ஒரு ஏரோப்ளேனை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, அன்று இரவு எட்டு மணிக்குப் பம்பாய் வந்தான். கார்மேகத்தைப் பற்றிப் பக்கத்தில் விசாரித்து அவள் சென்ற சினிமாக் கொட்டகைக்குள் தானும் சென்றான்.

இரவு மூன்று மணி யிருக்கும். சினிமா முடிந்தது. எல்லோரும் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். கங்காளம் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்றான் அவன் மனம் முற்றிலும் மாறிவிட்டது. கலியாணமே செய்து கொள்ளக் கூடாதென்று தீர்மானம் பண்ணிக்

கொண்டான். அவன் அன்று பார்த்த 'டாக்கி'க் கதையின் போக்குத்தான் இவ்வித மாறுதலுக்குக் காரணம்.

தன் பழைய காதலன் தன்னைப் பின்பற்றி வந்தது கார்மேகத்துக்கு இதுவரை தெரியாது. தன்னை உதறித்தள்ளும் பஞ்சாமிர்தத்தை அவள் அடியோடு வெறுத்து விட்டாள். படத்தில் தோன்றிய கதாநாயகியைப் பின்பற்றியே தானும் நடக்கத் தீர்மானித்தாள். அத்தீர்மானத்தின்படி ஊரில் போய் கங்காளத்தையே மணந்துகொள்ள விரும்பினாள். அவள் பம்பாய் ஸ்டேஷனுக்கு வந்த சமயம் ரயில் புறப்பட்டு விட்டது. ஆனால் அதில் தலையை நீட்டிக் கொண்டிருந்த கங்காளத்தை அவள் நன்றாகப் பார்த்தாள். தன்னை இவ்வளவு தூரம் தேடி வந்த தன் காதலன் கங்காளத்தைப் பார்த்தவுடன் அவன்மீது அவளுக்கிருந்த காதல் திடீரென்று அதிகரித்துப் பொங்கி விட்டது.

அடுத்த ரயில் நான்கு மணி நேரம் கழித்துப் புறப்பட்டது. கார்மேகம் அதில் ஏறிவிட்டாள். அவள் வழியில் கங்காளத்தைக் காண முடியவில்லை.

கார்மேகத்தின் மன உறுதியைக் கண்ட பஞ்சாமிர்தத்தின் மனம் இளகிவிட்டது. ஒரு பெண்ணை இம்மாதிரி அலட்டுவது பாவமென்ற நீதியை அவர் அன்று பார்த்த படத்திலிருந்து கற்றுக் கொண்டார். ஆகவே பஞ்சாமிர்தம் கார்மேகத்தைப் பம்பாய் முழுவதும் தேடினார். அவள் அங்கே வந்

திருப்பாளென்று அவருக்கு நன்ருகத் தெரியும். அன்று காலே அவள் பம்பாயிலிருந்து போய்விட்டதைத் தெரிந்தவுடன் ரயிலில் ஏறிஞர். தம்மைக் காணுத வருத்தத்திஞல் அங்கிருந்து திரும்பிவிட்ட கார்மேகத்தை ஊரில் போயாவது கலியாணம் செய்துகொள்ள நிச்சயித்துவிட்டார் பஞ்சாமிர்தம்.

***

கார்மேகம் தன்னேப் பின்பற்றி வருவது கங்காளத்துக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அப்பொழுது தன் ஊருக்குப் போவது அவனுக்கு உசிதமாகப்பட வில்லே. ஆகவே அவன் தன் பிரயாணத்தை வேறு மார்க்கமாகத் திருப்பிவிட்டான். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் கங்காளத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டு வரும் கார்மேகத்துக்கு இது தெரியாமலா போகும்? அல்லது பஞ்சாமிர்தம் தான் கார்மேகத்தைப் பின்பற்ருமல் இருப்பாரா?

நாள் தவறிஞலும் தினசரிப் பத்திரிகைகளில் பின்வரும் விளம்பரத்தை மூன்று பேரும் தனித் தனியே படிக்கத் தவறுவதில்லே:

" என் வீட்டுக்கு வந்திருந்த பஞ்சாமிர்தச் சாமியார் சில காலத்துக்கு முன் திடீரென்று எங்கேயோ போய் விட்டார். அவருக்கு நெற்றியில் ஒரு பெரிய மச்சம் உண்டு. அவர் போன மறுநாள் என் மகள் கார்மேக சுந்தரியும் மாயமாய் மறைந்துவிட்டாள். அவள் நிறம் கருப்பு. சற்றுக் கனத்த சரீரம். பற்கள் கொஞ்சம் பருமஞக இருக்கும்.

மூன்றாவதாக, என் மகளைத் தேடிப் போன கங்காள ராமனையும் இதுவரை காணவில்லை. அவன் பார்வைக்குச் சாதுவாகத் தோன்றுவான். பரந்த முகம், சுருட்டை முடி.

இந்த மூன்று பேர்களையும் யாராவது பார்த்த தாகத் தெரிவித்தால் நான் அவர்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

இப்படிக்கு,<br>
பாடாவதி லிங்கம்,<br>
மீளவிட்டான் போஸ்ட்,<br>
மடமட்டிபுரம்."

பாடாவதி லிங்கம் பிள்ளைக்கு நாளது தேதி வரை ஒரு தகவலும் கிடையாது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
சண்முகம் நூலகம்.
துறை.

# பழியா? பாவமா?

"லக்ஷியம் லக்ஷியம்" என்று சொல்கிறார்கள்ளல்லவா; அது மனிதனை என்னபாடு படுத்துகிறது! விஞ்ஞானி, விஞ்ஞானத்தின் எல்லையையே காண முயல்கிறான். கவிஞன் இன்பத்தின் நுனிக் கொம்பை எட்டிப் பிடிக்கத் துடிதுடிக்கிறான். இவை போன்ற உயர்ந்த லக்ஷியங்கள் சிலருக்குத் தான் உண்டு. அநேகர் சில்லறை லக்ஷியங்களையே தங்கள் வாழ்க்கையில் அடைய விரும்புகிறார்கள்.

தன்னை ஒரு பெரிய தர்மவான் என்று எல்லோரும் சொல்லவேண்டும்! இது ஒருவனுடைய லக்ஷியம்! எல்லோரும் தன்னை ஒரு போக்கிரி என்று சொல்லவேண்டும்! இதுவும் ஒருவனுடைய லக்ஷியமாக இருக்கிறது. வாழ்வு நியதியே அப்படித் தான். இல்லையானால் உலகத்தில் வெவ்வேறு வகையான வாழ்க்கையை உடைய மனிதர்களைக் காண முடியுமா?

ஜோசப் ஒரு மிஷன் புத்தகசாலையின் மானேஜர். மேரி ஒரு மிஷன் பாடசாலையில் உபாத்தியாயினி. மாதம் நூறுரூபாய் வருமானத்தைக் கொண்டு, ஆங்கில மோஸ்தரில் நடத்த விரும்பிய

அவர்கள் வாழ்க்கை, அவர்கள் தினமும் சாப்பிட்டு வரும் ரொட்டியைப் போலவே, கரடு முரடாக இருந்தது. இந்த லக்ஷணத்தில் அவன் வீட்டிற்கு அடிக்கடி விருந்தாளிகளும் வந்துவிடுவார்கள். ஆங்கிலேயர் முறைகளை அனுசரித்து அதன்படியே விருந்து கொடுப்பதென்றால் எவ்வளவு உபகரணங்கள் வேண்டும்! எல்லாவற்றையும் கடன் பட்டாவது வாங்கி வைத்திருந்தான் ஜோசப்! கௌரவமல்லவா பெரிது! லக்ஷியம்தானே வாழ்க்கையின் சாரம்!

ஒருநாள் மாலை அவனுடைய நண்பன் ஆபிரகாம் அவன் வீட்டிற்கு விருந்தாளியாக வந்து சேர்ந்தான். நண்பர்களிருவரும் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்த பின்பு சிற்றுண்டி சாப்பிடுவதற்காக உள்ளே சென்றார்கள்.

அகன்றதான ஒரு வட்டமேஜையின் மேல் பூவேலை செய்த அழகான மெல்லிய வெள்ளைத் துணி ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. அதைச் சுற்றி மூன்று நாற்காலிகள். ஒவ்வொரு நாற்காலிக் கெதிரிலும் பச்சை சிவப்புப் பூவேலைகளோடுகூடிய வெண்மையான மண் கோப்பைகள்! தட்டுகள்! கரண்டிகள்! கண்ணாடித் தம்ளர்கள்! இவற்றையெல்லாம் பார்த்தவுடன் ஆபிரகாமுக்குப் பிரமிப்பாக இருந்தது. "அடேயப்பா! எனக்காக எவ்வளவு தடபுடல் பண்ணியிருக்கிறாய்! பெரிய பார்ட்டி மாதிரி இருக்கிறதே" என்றான். இது போன்ற புகழ் மாலைகளைச் சூட வேண்டுமென்பதே ஜோசப்பின் ஆவல். ஆனாலும் அந்த ஆவலை வெளிக்குக்

காட்டாமல் "ஏதோ என் நிலைமைக்குத் தக்கபடி உபசரிக்கிறேன். அவ்வளவுதான்" என்றான்.

இருவரும் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். எதிரே உள்ள நாற்காலியை நோக்கி மேரி வந்து கொண்டிருந்தாள்! உடனே ஜோசப் எழுந்திருந்து தன் நண்பனைத் தன் மனைவிக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். அவளும் "ரொம்ப சந்தோஷம்" என்று ஒரு புன்முறுவல் செய்துவிட்டு எதிரேயுள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள்.

இரும்புக் கரண்டிகளுக்கும் அவர்களுடைய பற்களுக்கும் ஏற்பட்ட யுத்தத்தில் தட்டிலிருந்த ரொட்டிகளும் பிஸ்கோத்துகளும் காலியாகிவந்தன. ஆபிரகாம், தன் எதிரில் புகைந்து கொண்டிருந்த ஒரு கோப்பையை உற்றுப் பார்த்துவிட்டு "இது காப்பியா?" என்று கேட்டான்.

"ஆமாம் நல்ல ஸ்ட்ராங் காபி. ஜீனி வேண்டுமா?" என்றான் ஜோசப்!

"இல்லை, நான் காப்பிப் பழக்கத்தை விட்டு ஐந்து வருஷமாயிற்று. அடியோடு நிறுத்தி விட்டேன். அதனால்.......அதனால்........" என்று ஆபிரகாம் தயங்கினான்.

"அப்படியானால் ஓவல் கொண்டுவரச் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு வேலைக்காரியைக் கூப்பிட மணியடித்தான். அப்பொழுது மேரி, அவனை நோக்கி ஏதோ ஜாடை காட்டினாள். ஆனால் ஜோசப் அதைக் கவனிக்கவேயில்லை. விக்கிக்

கொண்டிருந்த நண்பனுக்கு சீக்கிரம் ஓவல் வர வழைப்பதில் அவன் முனைந்திருந்தான்.

தான் விரும்பும் ஓவல் வரப் போகிறதென்று சந்தோஷமாக இருந்த ஆபிரகாம் ஓவல் பானத்தின் பெருமையை அளப்பதற்காக "ஓவல் ரொம்......." என்று ஆரம்பித்தவன், "வேண்டாம்! ஓவல் வேண்டாம்!" என்று ஓலமிட்டுக்கொண்டே கைகளையும் தலையையும் உதறினான்.

"ஓவல் ரொம்ப நல்லதுதானே! ஏன் வேண்டாம், வேண்டாம் என்று இப்படி வெறுக்கிறாய்?" என்றான் ஜோசப். ஆபிரகாம் திடீரென்று இப்படிக் கதறியது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "சும்மா சாப்பிடு ஓவல்!" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் "அப்பப்பா! ஐயையோ! ஒன்றுமே வேண்டாம்" என்று அலறிக் கொண்டே மீதியிருந்த ரொட்டியைக் கூடச் சாப்பிடாமல் எழுந்து போய்க் கைகழுவிவிட்டான் ஆபிரகாம்.

நண்பன் இவ்வாறு ஒன்றுமே சாப்பிடாமல் அலறிக்கொண்டு ஓடியது ஏன் என்று ஜோசப் பலதடவை யோசித்துப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஓவல், காப்பி முதலான எல்லாப் பானங்களின் மீதுமே அவனுக்கு அத்தனை வெறுப்பு இருக்கலாம் என்று தனக்குள்ளேயே சமாதானம் செய்து கொண்டான்.

நாளைக் காலையில் அவனுக்கு என்னென்ன உணவு தயாரிக்க வேண்டுமென்று ஜோசப் அவனிடம் போய்க்கேட்டான். திகிலடித்தது போல

விழித்துக் கொண்டிருந்த ஆபிரகாம் "ஜோசப், நான் நாளை அதிகாலை ரயிலுக்கு அவசியம் போக வேண்டும். இனிமேல் என்னால் இங்கு தாமதிக்க முடியாது. இப்பொழுதே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகிறேன்" என்று தன் பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான். ஜோசப் எவ்வளவோ தடுத்துப் பார்த்தும் அவன் கேட்கவில்லை. முதலில் நான்கு நாட்கள் தங்குவதாகச்சொன்ன ஆபிரகாம் சட்டென்று கோபித்துக் கொண்டு புறப்பட்டு விட்டதன் காரணம் என்னவென்பதை அவனால் யூகிக்கவே முடியவில்லை. மிகவும் வருத்தத்தோடு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

அப்போது அவன் மனைவி மேரி, புன்னகை கலந்த கோபத்தோடு அவனருகில் வந்து, "நேற்றே உங்களை ஓவல் டின் வாங்கிக்கொண்டுவரச் சொன்னேன். அதை வாங்கிவராமல் 'நண்பருக்கு ஓவல் கொண்டுவா!' என்று அர்த்தராத்திரி வேளையில் உத்திரவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டாள்.

"ஓஹோ! அதை........" என்றான் ஜோசப்.

"நல்ல வேளையாக அவர் ஓவல் வேண்டவே வேண்டாமென்று எழுந்திருந்து விட்டார். இல்லையானால் எவ்வளவு கேவலமாகப் போய்விடும் பாருங்கள்!" என்றாள் மேரி.

"இந்த விஷயத்தை நீ என்னிடம் ரகசியமாகச் சொல்லியிருந்தால் உடனே நான் அதை......."

அவன் கூறி முடிப்பதற்குள் மேரி, " நான் தான் எவ்வளவோ ஜாடை காட்டினேனே! அதிலிருந்தாவது தெரிந்து கொள்ளக் கூடாதா?" என்ருள்.

" நான் அதைக் கவனிக்கவில்லையே மேரி!" என்ருன் ஜோசப்.

" கவனிக்கவில்லையா? மேஜைக்கடியிலுள்ள உங்கள் காலை என்னுடைய காலால் ஓங்கி ஓங்கி மிதித்தேனே, அதைக்கூடப் பொறுத்துக்கொண்டு திரும்பத் திரும்ப ஓவல் கொண்டுவரச் சொன்னீர்களே!" என்ருள் மேரி.

ஜோசப் திகைத்துப்போய் " என்ன, என் காலை மிதித்தாயா?" என்ருன்.

" ஆமாம்! மாறி மாறி; ஓங்கி ஓங்கி மிதித்தேனே!"

" அடப்பாவமே! இப்போதான் தெரிகிறது, ஆபிரகாம் ஓவல் வேண்டாமென்று கதறிவிட்டு ஊருக்குப் புறப்பட்டதன் காரணம்!"

" என்ன காரணம்?"

" மிதி மிதி யென்று நீ மிதித்தது என்னுடைய காலை அல்ல. அவனுடைய காலைத்தான் நீ மிதி மிதியென்று மிதித்திருக்கிருய்! அதனுல்தான் அவன் அந்தமாதிரி பதறிக்கொண்டு ஓடிவிட்டான். தெரிகிறதா?"

" ஐயையோ! அட அநியாயமே! உங்கள் காலென்றல்லவா நான் திரும்பத் திரும்ப உதைத்து

விட்டேன்! என்னைப் பற்றி அவர் என்ன நினைத்துக் கொள்வார்? ''

'' என்ன நினைத்துக் கொண்டால் என்ன? நடந்தது நடந்து விட்டது. ஆனால் உன்மேல் குற்றமே இல்லை, மேரி. நான் இன்று சாயந்திரம், வரும்போதே ஓவல் டின் வாங்கிக் கொண்டு வந்து விட்டேன். அதைக் கோட்டுப்பையிலேயே வைத்து விட்டு ஓவல் போட்டுக் கொண்டுவா என்று சொன்னேன் பார். அதனால் நான் தான் குற்றவாளி'' என்றான் ஜோசப்.

# ஹாஸ்ய நடிகன்

உலகத்தில் சிலர் திடீரென்று பிரபலமடைவதை நாம் காண்கிறோம். நமது கதாநாயகன் மருதநாயகம் இந்தச் சிலரில் ஒருவனுகி விட்டான். மருதநாயகம் குருவிக்குடி என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்து ஆடு மேய்த்துக்கொண்டுதானிருந்தான். தமிழ் நாட்டு நாடக மேடைகளில் தோன்றுவோமென்று அவன், போன ஜென்மத்தில்கூடக் கனவு கண்டிருக்கமாட்டான். ஆனல் அதிர்ஷ்டம் என்று ஒன்று இருக்கிறதே அது அவனைக் கரகரவென்று இழுத்துக்கொண்டு வந்து நாடக மேடையில் ஏற்றி விட்டுவிட்டது; அதிலிருந்து அவன் தலை சிறந்த ஹாஸ்ய நடிகனுகவும் ஆகிவிட்டான்.

இவ்வாறு திடீரென்று ஏற்பட்ட மாறுதலுக்கு சந்தர்ப்பம் ஒன்று வேண்டுமல்லவா! இதைத் தெரிவதற்கு, மருதநாயகத்தின் வாழ்க்கையில் இருபத்தேழாவது வயதுக்கு அப்பால் உள்ள சில நிகழ்ச்சிகளைப் பற்றி நாம் அறிய வேண்டியது அவசியமாயிருக்கிறது.

இருபத்தேழாவது வயதில்தான் மருதநாயகத்திற்குக் கலியாணம் நடந்தேறியது. காளியம்மாள்

தான் அவன் மனைவி. கலியாணத்திற்கு முன்பு, குருவிக்குடியில் மருதநாயகத்தைப் பற்றிப் பேசவே அநேகர் பயப்படுவார்கள். கலியாணத்திற்குப் பின்போ அவன் மேய்த்து வந்த ஆடுகளை விட அவன் சாதுவாகி விட்டான். மருதநாயகத்தின் சுபாவத்தில் இத்தகைய மாறுதலைச் செய்துவிட்ட காளியம்மாளுக்கே தனது திறமையைப் பற்றி ஆச்சரியம் உண்டாயிற்று.

காளியம்மாளின் வசவுகளைக் கேட்டுக் கேட்டு மருதநாயகத்தின் மனதில் தழும்பு படிந்துவிட்டது. மனத் தழும்பைப் போலவே, அவனுடைய உடம் பிலும் பல தழும்புகள் ஏற்பட்டன. ஆனால், மருத நாயகம் இவைகளைப் பற்றியெல்லாம் கவலைப் படு வதே இல்லை. 'இனிமேல், தான் எவ்வாறு நட ந்து கொண்டால், தன் மனைவியிடம் அடி, திட்டுகள் வாங்காமலிருக்கலாம்' என்பதே அவனுடைய சதாகால சிந்தனை. "போடு தோப்புக்கரணம்" என்று காளியம்மாள் சொன்னால், "எண்ணிக்கோ" என்ற பதிலைத்தவிர வேறு பதில் சொல்ல மாட் டான் மருதநாயகம்.

ஆனால் எவ்வளவு காலம்தான் இம்மாதிரி பொறுத்துக் கொண்டிருப்பான்! பொறுமைக்கும் ஒரு எல்லைக்கல் உண்டல்லவா! ஒரு நாள் இவர் களுடைய குடும்பக் கலகம் ரொம்ப முற்றிவிட்டது. காளியம்மாள் தன் புருஷனை "உம் வெளியே போ, இங்கே வராதே!" என்று துரத்திக் கொண்டிருந் தாள். இதே சமயத்தில் மருத நாயகத்தின் பால்ய

சிநேகிதனான சோணாசலம் அவனைப் பார்க்க வந்தான். வீட்டிற்குள் கலாட்டா நடப்பதைக் கண்ட சோணாசலம் வெளியே நின்றுவிட்டான். காளியம்மாள் திட்டிய வசவுகள் வெளியில் நின்றுகொண்டிருந்த சோணாசலத்தின் காதுகளில் விழுந்தன. அவனுக்கு மருதநாயகத்தின் மீது இரக்கம் உண்டாயிற்று. மருதநாயகத்தின் குடும்ப வாழ்க்கையைப் பற்றி ஊரில் விவரமாகக் கேட்டறிந்த சோணாசலத்திற்கு உள்ளூர மகிழ்ச்சி பொங்கியது.

சோணாசலம் பாலகான சோக கீத நாடகக் கம்பெனியைச் சேர்ந்த ஒரு நடிக ரத்தினம். அவன் வேலை பார்த்து வந்த நாடகக் கம்பெனிக்கு நல்ல ஹாஸ்ய நடிகன் வேண்டுமென்று கம்பெனி மானேஜர் அவனிடம் வெகுநாளாகச் சொல்லி வந்தார். குருவிக்குடியில் தனது நண்பன் மருதநாயகம், ஒரு வருஷ மண வாழ்க்கையின் மூலம் தமிழ் நாட்டு நாடக மேடைக்கேற்ற ஹாஸ்ய நடிகனாகத் தயாராகியிருப்பதைக் கண்டு அவன் ஆனந்தமடைந்தான்.

காளியம்மாளால் அடித்துவிரட்டப்பட்ட மருதநாயகம் வீட்டுக்கு வெளியே வந்தான். அவனைக் கண்டவுடனேயே, "அப்பா மருதை, உனக்குக் கலியாணம் ஆனபிறகு நான் உன்னைப் பார்க்கவே இல்லை. ஆனால், உன்னைப் பற்றி இப்போ ஊரில் ரொம்பக் கேள்விப் பட்டேன். அதுவும் தவிர, இரண்டு நிமிஷத்திற்கு முன்னால், உன் வீட்டில்

நடந்த கலாட்டாவையும் பார்த்தேன். அதனாலே, கவலைப்படாமல், இப்படியே என்னோடு மதுரைக்கு வந்து விடு'' என்றான் சோணாசலம்.

தன் சிநேகிதன் கூறிய இவ் வார்த்தைகள் மருதநாயகத்தின் காதுகளுக்கு, முதல் தரமான கொம்புத் தேனாகவே இருந்தன. காளியம்மாளை விட்டு ஓடுவது என்று சொன்னவுடனேயே அவனுக்குத் தலைகால் தெரியவில்லை. இடுப்பில் கட்டியிருந்த மேல் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு சோணாசலத்துடன் கிளம்பிவிட்டான். வீட்டினுள் காளியம்மாள், பத்திரகாளி சொரூபத்தில் நின்றதை அவன் திரும்பியே பார்க்கவில்லை. "எங்கே போனாலும் உன்னை வுட்டுட மாட்டேன்" என்று அவள் கர்ஜித்தது மட்டும் மருதநாயகத்தின் காதில் விழுந்தது. "உம், பார்ப்போமே!" என்று மருதநாயகம் மெதுவாகத் தனக்குள் முனகிக்கொண்டான்.

மருதநாயகமும் சோணாசலமும் ரயில்வே ஸ்டேஷனை அடைந்த போது மணி சரியாகப் பன்னிரண்டு அடித்தது. பன்னிரண்டரை மணி வண்டிவர இன்னும் அரை மணி நேரம்தான் இருக்கிறதென்பதை ஸ்பஷ்டமாகத் தெரிந்த மருதநாயகம் ப்ளாட்பாரத்திலேயே போய் நின்று கொண்டான். அவனுடைய வீட்டிற்குப் போய் வேஷ்டி துணிகளையும் படுக்கையையும் எடுத்துக் கொண்டு வரும்படி சோணாசலம் பலதடவை சொல்லிப் பார்த்தான். ஆனால் மருதநாயகம்

பிடிவாதமாக "சோணுசலம், நான் இப்போ, வூட்டுக்குப் போணு மீளமாட்டேன்" என்று மறுத்து விட்டான். உடுத்திய வேஷ்டியுடனும், போட்ட துண்டுடனும் தான் அவன் மதுரையம்பதியில் கால்வைத்தான். போகும் வழியெல்லாம் அவன், "ஆக்கிட் பண்றதுன்ணு எப்படி, சோணுசலம்? எனக்கு அது ஒண்ணும் தெரியாதே! அவங்க எனக்குப் பழக்கிக் குடுப்பாங்களா?" என்று சோணுசலத்தைப் பஞ்சரித்துக் கொண்டு வந்தான். "மருதை, அதைப்பத்தி நீயி, ஒண்ணுமே கவலைப்பட வேண்டாம். நீயி உங்க வூட்டுலே பழகியிருக்கிறதை அப்படியே நாடகமேடையிலே நடத்திக் காட்டிட்டாப் போதும், மருதை" என்று சோணுசலம் அடிக்கடி அவனுக்குச் சமாதானமும் சொல்லி வைத்தான்.

இருவரும் நாடகக் கம்பெனிக்குள் போனதும் சோணுசலம், மருத நாயகத்தை மானேஜரிடம் அழைத்துப் போய் அவனுடைய வாழ்க்கை வரலாறு முழுவதையும் தான் கேள்விப்பட்ட படியே வர்ணித்துக் காட்டினுன். மானேஜருக்கு உற்சாகம் மிதமிஞ்சிப் போய்விட்டது. அவர் மருதநாயகத்திடம் ஒரு கேள்வி கூடக் கேட்காமல், பக்கத்தில் நின்ற ஹாஸ்ய நடிகை பர்வதாம்பாளைச் சுட்டிக் காட்டி, "மிஸ்டர் மருதநாயகம் நீங்களும், இந்த, அம்மாளும்தான் நமது நாடகங்களில் ஹாஸ்யக் காட்சிகளை நடிக்கவேண்டும். இன்று முதலே, நீங்கள் நடிக்க ஆரம்பித்து விடலாம். வாழ்க்கை என்ற பயிற்சிச் சாலையிலே நீங்கள் ஒரு வருஷம் நன்ருகப் பயிற்சி பெற்றிருப்பதனுல், ஒத்திகை

கூட அவசியமில்லை. நாடக மேடையை உங்கள் வீடாகவே நினைத்துக் கொண்டு விட்டீர்களானால், நடிப்பு அபாரமாக இருக்கும். 'மனைவிக்கு நன்றாகப் பயப்படுங்கள்'. இதுதான் ஹாஸ்ய நடிகருக்கு வேண்டிய மூலமந்திரம். மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று மூச்சு விடாமல் பேசிக்கொண்டே போனார்.

விழித்த கண் மூடாமல் பார்வதாம்பாளின் உருவத்தையே பார்த்து மலைத்துக் கொண்டிருந்த மருதநாயகம் ஏதோ சொப்பனத்திலிருந்து எழுந்தவன் போல, "சரி, ஆகட்டும்" என்றான். பின்பு அவன் சோணாசலத்திடம் தனியாகப் போய், "என்னப்பா சோணாசலம், அறையில் கிடந்த என்னை அம்பலத்தில் இழுத்து வுட்டுட்டியே! அந்த அம்மாளைப் பார்க்கும்போதே எனக்கு நடுக்கமா இருக்கே! இதை விட்டாலும் வேறே போக்கு மில்லையே!" என்று அலறினான். "அப்பா மருதை, பார்வதாம்பாள், பார்வைக்கு ஆனைக் குட்டியாக இருந்தாலும், சுபாவத்தில் அவள் ஆட்டுக்குட்டி தான். ஆகையினால் கவலைப்படாதே. அவள் நாடகத்தில் உன்னுடைய மனைவியாக நடிப்பாள். நீ எது செய்தாலும் சரி. அவள் உன்னைத் திட்டு திட்டென்று திட்டி, விறகுக் கட்டை, மூங்கில் கழி, அம்மிக் குழவி, ஏதாவது ஒண்ணை எடுத்துக்கிட்டு அடிக்க வருவா. ஆனா அடிக்க மாட்டா. அடி உம் மேலே விழா விட்டாலும் நீ அவளைக் காணும் போதெல்லாம் 'கிடு கிடு'ன்னு பயந்து நடுங்கணும். இதுதானப்பா எங்க நாடக மேடையிலே 'ஆஸ்யம்'

'ஆஸ்யம்' னு சொல்றது. இதைப் பார்க்கிறஜனங்கள் எல்லாரும் கை தட்டுவாங்க. ஒரு பத்து நாளு நடிச்சா, எல்லாம் சரியாய்ப் போயிடும்'' என்று சோணாசலம் அவனைத் தேற்றினான். பின்பு மருத நாயகம் நடிக்க வேண்டிய பாகத்தை அவனே சொல்லிக் கொடுத்தான். பர்வதாம்பாள், காளியம்மாளைப் போல நிஜத்துக்கும் அடிக்க மாட்டாள் என்று அவன் உறுதி கூறியதன் பேரில்தான், மருதநாயகம் வேலையை ஒப்புக் கொள்ளச் சம்மதித்தான்.

முதல் முதலாக நாடகமேடை மீது தோன்றிய ஹாஸ்ய நடிக சிகாமணி, மருதநாயகத்தைப் பற்றி மறு நாளே ஊர் முழுதும் பேச்சாக இருந்தது. நாடகத்தில் மனைவிக் கெதிரில், மருதநாயகம் நாக்குக் குழற, கைகால் வெடவெடக்கப் பதுங்கிப் பதுங்கி வந்ததைக் கண்ட பொது ஜனங்களின் உற்சாகத்தைச் சொல்லி முடியாது. விசில், கை தட்டுதல், அவுட்டுச் சிரிப்புகள்! 'ஜோர்!' 'பேஷ்!' 'அச்சா!' என்ற கூக்குரல்கள்! இப்படியாகக் கொட்டகை முழுதும் ஒரே ஆரவாரமாக இருந்தது. மருதநாயகம் பர்வதாம்பாளிடம் அடிபடாமல் பயந்து குதித்தோடியபோது, தரை மகா ஜனங்களிலும் சிலர் உற்சாகத்தினால் குதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அதுமுதல் ஒவ்வொரு நிமிஷமும் மருத நாயகத்தின் புகழ் கனகாம்பரத்தின் மணம் போலத் தமிழ் நாடெங்கும் பரவி வந்தது. பல நாடகக் கம்பெனி

யார்கள் மருத நாயகத்தைத் தங்கள் கம்பெனியில் சேர்ந்துவிடும்படி ஆசை காட்டினார்கள். அதைக் கண்ட பாலகான சோகக்கீத நாடகக் கம்பெனி மானேஜர், மருதநாயகத்தின் சம்பளத்தை அடுத்த மாதமே இரண்டு மடங்கு உயர்த்திவிட்டார். மருத நாயகம், நாளொரு புகழும், பொழுதொரு கீர்த்தி யும் பெற்று மகா ஜனங்களை ஹாஸ்யக் கடலில் மூழ் கடித்துத் தமிழ் நாடெங்கும் ஜயஸ்தம்பங்களை நாட்டி வந்தான்.

தன் புகழ் இவ்வாறு பரவி வருவதைக் கண்டு மருதநாயகம் ஒரு விதத்தில் மிகவும் கவலைப் பட்டுக் கொண்டிருந்தான். இவ்வளவு புகழ் பெற்ற பிறகு, தன்னுடைய இருப்பிடம் காளியம்மாளுக்குத் தெரி யாமலா இருக்கப் போகிறது! தன் இருப்பிடம் அவளுக்குத் தெரிந்து விட்டால் என்ன செய்வது என்று நினைக்கும் போது அவனுக்கு ஒரே பயமாக இருந்தது. "எங்கே போனாலும் உன்னை வுட்டுட மாட்டேன்" என்று அவள் சபதம் கூறியதும் அடிக்கடி அவன் நினைவுக்கு வந்து கொண்டி ருந்தது.

அவன் பயந்தது வீண் போகவில்லை. தன் புருஷன் ஒரு ஹாஸ்ய நடிகனாகத் திகழ்ந்து கொண் டிருந்த செய்தி காளியம்மாளின் காதுக்கும் எட் டியது.

ஒரு நாள் இரவு பாலகான சோகக்கீத நாடகக் கம்பெனியின் ஹாஸ்ய நடிகை பார்வதாம்பாளுக்குத் திடீரென்று தலைவலி வந்து விட்டது. தான் அன்று

மேடை மீது தோன்ற முடியாதென்று மானே ஜரிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். மானே ஜருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அன்று ஸ்பெஷல் நாடகம் ஆனதால் அவர் ஏராள மான கூட்டத்தை எதிர்பார்த்திருந்தார். நாடகத் தின் ஹாஸ்யக் கட்டத்தில் மருதநாயகம் தனியாக நின்று கரடியாகக் கத்தினலும், மகா ஜனங்கள் திருப்தி அடைய மாட்டார்களென்று அவருக்கு நன்ருகத் தெரியும். ஹாஸ்ய நடிகையும் சேர்ந்து நடித்தாலொழிய அவர்களுக்கு ரஸிப்பு ஏற்படாது. ஒருவேளை எல்லோருடைய டிக்கட் பணத்தையுமே வாபஸ் பண்ணவேண்டி வந்தாலும் வந்துவிடும். ஆகையால் மானேஜர் கூண்டில் அடைபட்ட புலி போலத் தன் பங்களாவில் எல்லோர் மீதும் எரிந்து விழுந்துகொண்டிருந்தார். அச்சமயத்தில், அவர் வீட்டிற்குப் புதிதாக வந்திருந்த வேலைக்காரி அவ ரிடம் வந்து, "எனக்கும் கொஞ்சம் 'ஆக்கிட்' பண் ணத் தெரியும். நானு வேணும்ன, இன்னிக்கி மட்டும், நாடவத்திலே நடிக்கிறேனுங்க" என்ருள்.

தக்க தருணத்தில், இவ்வளவு துணிகரமாகத் தனக்கு உதவி செய்ய முன் வந்த வேலைக்காரியை எப்படிப் புகழ்வதென்றே தெரியவில்லை. "ஹே, பெண் சிங்கமே, நினது பராக்கிரமத்தை மெச்சு கிரேம்" என்று கூறி, தான் பாராயணம் பண்ணி வைத்திருந்த ஒரு ஸ்தோத்திரப் பாடலையும் பாடி விட எண்ணினர். ஆனல், பெரிய ஆர்மோனியப் பெட்டி ஒன்று இல்லாமல் அவரால் பாட முடியாது. ஆகையால் அவள் மீது ஒரு பாட்டும் பாடாமலே

அவனைத் தன் மோட்டாரில் ஏற்றிக்கொண்டு கொட்டகைக்குப் போய்ச் சேர்ந்தார்.

அவர் போன சமயம் நாடகம் ஆரம்பித்து அரை மணி நேரமாயிற்று. பொது ஜனங்கள் ஹாஸ்யச் சுவையை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஹாஸ்ய நடிகர் மருத நாயகம் மேடை மீது தோன்றுவதற்கு இன்னும் பத்தே நிமிஷங்கள் தானிருந்தன. மானேஜர் ஒரு நிமிஷத்தைக் கூட வீணாக்காமல், தன்னோடு அழைத்து வந்த வேலைக்காரியை நாடக உடை அணிவதற்கு அனுப்பி விட்டு, மேடைமீது தோன்றத் தயாராக நின்ற மருதநாயகத்திடம் ஓடிவந்தார். அவனை அவசரமாகக் கூப்பிட்டு, "மருதநாயகம், ரொம்ப நேரமாகி விட்டது. முதலில் நீ மட்டும் போ. ஒரு புது நடிகை இரண்டே நிமிஷத்தில் மேடை மீது தோன்றுவாள். அவள் நாடக மேடைக்கே புதிதாகையால் அவளுக்குப் பயம் ஏற்படாமல் நடந்துகொள்" என்று அவனிடம் எச்சரித்து மேடைக்கு அனுப்பினார். "புது நடிகை யார்? பெயர் என்ன?" என்று மருதநாயகம் கேட்பதற்குள் 'ஸீன்' உயர்ந்து விட்டது.

ஹாஸ்ய நடிக சிகாமணி மருதநாயகம் மேடையில் தோன்றி ஒரு வேடிக்கைப் பாட்டு பாடி விட்டு "ஆஹா! நானு, பணம் சம்பாறிக்காமப் போனா பூங்கொடி என்னை அடி அடின்னு அடிப்பாளே, என்ன பண்றது!........ஆ! ரோசனை வந்துடுச்சு!.........உம். வூட்டுக்குப் போகாமே,

இன்னிக்கு மட்டும் சன்னாசி ஆகிக்கிட வேண்டியது தான்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, புது ஹாஸ்ய நடிகை கையில் ஒரு விறகுக் கட்டையுடன் தோன்றி "என்னது? நீயி, சன்னாசியாவா ஆவப் போறே?" என்று கத்திக் கொண்டே அவனை நோக்கி ஓடி வந்தாள்.

எதிர்பாராதபடி தன் மனைவி காளியம்மாள் இவ்வாறு விறகுக் கட்டையுடன் மேடை மீது துரத்தி வந்ததைக் கண்ட மருதநாயகம் வெல வெலத்துப் போய் விட்டான். பேயைக் கண்ட பெண் குழந்தைபோல 'ஓ!' வென்று அலறிக் கொண்டு மேடையின் விளிம்பு வரை ஓடினான். காளியம்மாள் இன்னும் விரட்டிக் கொண்டு பின்னால் வந்ததைப் பார்த்தானோ இல்லையோ, மேடைக்கு வெளியே எகிறிக் குதித்து நாற்காலி களுக்கடியில் போய்ப் பதுங்கிக் கொண்டான். இதைக் கண்ட ஜனங்கள் துள்ளவே ஆரம்பித்து விட்டார்கள். "நடிப்பு அபாரம்'' என்றார்கள். கொட்டகையே தகர்ந்து விடுவது போல சிரிப் பொலிகள் முழங்கின. இதுவரை என்றுமில்லாத படி ஏற்பட்ட ஜனங்களின் குதூகல ஆர வாரத்தைக் கண்ட கம்பெனி மானேஜரின் உள்ளம், நாளைய நாடகத்தில் வசூலாகப் போகும் பெரும் தொகையைக் கணக்கெடுத்து மகிழ்ந்து கொண்டிருந்தது.

கொட்டகையில் ஏற்பட்ட அமளி குமளி சுமார் பத்து நிமிஷம் வரை ஓயவே இல்லை. பின்பு "ஸைலன்ஸ்!" "ஸைலன்ஸ்!" "ஒன்ஸ் மோர்!"

என்ற இங்கிலீஷ் கோஷங்கள் மூலைக்கு மூலை கிளம் பிற்று. இவ்வாறு பதினைந்து நிமிஷம் கழிந்தது. பின்பு பொது ஜனங்களிடையே ஒருவாறு அமைதி நிலவியது. ஆனால் நாற்காலிக்கடியில் போய்ப் பதுங்கிய ஹாஸ்ய நடிகர் மருதநாயகம் அங்கிருந்து இன்னும் எழுந்திருக்கவே இல்லை. லைட்டுகள், மிருதங்கம், தபலா எல்லாவற்றையும் தள்ளிக் கொண்டு எகிறிக் குதித்ததால், அவருக்குக் காலில் ஏதேனும் அடி பட்டிருக்குமோ என்று அநேகர் சந்தேகப் பட்டார்கள். மானேஜரும் அவ்வாறே எண்ணி மருதநாயகம் பதுங்கியிருந்த இடத்திற்கு ஓடி வந்து "என்ன சங்கதி?" என்று அவனிடம் விசாரித்தார்.

"நான் இனிமே, இந்த நாடக மேடை மேலே திரும்ப வர மாட்டேன். என்னை வுட்டுடுங்க" என்று மருதநாயகம் சொன்ன போது மானேஜருக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்ன காரணத்தினால் அவன் அப்படிச் சொல்கிறான் என்று அறிய அவர் எவ்வளவோ முயற்சி செய்தும் மருதநாயகம் பதில் சொல்ல மறுத்துவிட்டான். இதோடு, தான் அன்று இரவே எங்காவது ஓடிப்போய் விடுவதாக வும், அவன் அவரிடம் நிச்சயமாகக் கூறினான்.

நாற்காலிகளுக்கடியில் இவ்வாறு விவாதம் நடந்து கொண்டிருக்கையில் பொது ஜனங்கள் ஒவ் வொருவராக அங்கு வந்து கூட ஆரம்பித்தார்கள். இன்னும் இரண்டும் நிமிஷத்தில் கொட்டகையில் குழப்பம் ஏற்பட்டு விடும்போலத் தோன்றியதால்,

மானேஜர் சட்டென்று மேடைமீது ஏறி எல்லோருக்கும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு, "மகா ஜனங்களே! இன்றைய தினம், நமது ஹாஸ்ய நடிக சிகாமணி ஸ்ரீமான் மருதநாயகம் அவர்கள் எதிர்பாராத விதமாகத் திடீரென்று தவறி விழுந்து ஹாஸ்ய மூட்ட விரும்பினார். ஆனால் எதிர்பாராத விதமாகவே அவருடைய காலில் சிறிது காயம் ஏற்பட்டதனால், அவர் இன்றைய நாடகத்தில் மீதிப் பாகத்தை நடிக்க இயலாத நிலையில் இருக்கிறார் என்பதை மிக மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாடகத்தின் மற்ற ஸீன்களைத் தாங்கள் அமைதியுடனிருந்து பார்த்துக் களி கூறுமாறு நான் தங்களை வணக்கமாக மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார். மானேஜர் தன் பிரசங்கத்தை முடிப்பதற்குள்ளாகவே, பாதிக்கூட்டம் எழுந்து விட்டது. அடுத்த ஸீன் ஆரம்பித்த போது, 'காம்பிளிமெண்டரி' டிக்கட் வாங்கினவர்கள் தவிர மற்ற எல்லோரும் வெளியே போய் விட்டார்கள். கூட்டத்தோடு கூட்டமாக மருதநாயகமும் வெளியே தப்பிச் சென்று விட்டான்.

பால கான சோககீத நாடகக் கம்பெனி மானேஜருக்கு அன்றைய நாடகம் ஒரு தலை சிறந்த சோகக் காக்ஷியாகவே இருந்தது. மருதநாயகம் இம்மாதிரி திடீரென்று காலை வாரி விடுவானென்று அவர் எதிர்பார்க்கவே இல்லை. மறுநாள் எந்த விதத்திலும் அவனைத் தேடிப் பிடித்து விடவேண்டும் என்ற தீர்மானத்துடன் அவர் வீட்

டிற்குப் புறப்பட்டார். துக்கக் கடலில் ஆழ்ந்திருந்த அவருடைய மனதில், கரு மேகத்திடையே தோன்றும் மின்னல் ஒளியை போன்று, ஒருவித சந்தோஷமும் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. புதிதாக வந்திருந்த தன் வேலைக்காரி சபைக்கூச்சம் சிறிதுமின்றி முதல் நிமிஷத்திலேயே, பொது ஜனங்கள் யாவரும் மகிழும்படியாக நடித்ததில் அவருக்கு அபாரமான திருப்தி ஏற்பட்டிருந்தது. அந்தக் காக்ஷியை நினைக்கும்தோறும் மனதில் ஆனந்தம் தவழ்ந்து விளையாடியது. எப்படியாவது அந்த இரண்டு பேரையும் தனது நாடகக் கம்பெனியின் நிரந்தர ஹாஸ்ய நடிக ஜோடிகளாக ஆக்கிவிட வேண்டுமென்பது அவருடைய அந்தராத்மாவில் முளைத்தெழுந்த ஓர் அபிலாஷை! அவர் வீட்டிற்குப் போனவுடன் அந்த வேலைக்காரி காளியம்மாளைக் கூப்பிட்டு, "காளியம்மா, நீ இன்றைய மாதிரியே தினமும் நமது ஹாஸ்ய நடிகருடன் நடித்து வந்தால் உனக்கு நிறையச் சம்பளம் போட்டுத் தருகிறேன்" என்று வாக்களித்தார். காளியம்மாள் தன் வரலாறு ஒன்றையும் இதுவரை அவரிடம் தெரிவிக்கவில்லை. அவர் கேட்டதற்கு மட்டிலும் "சரி, நடிக்கிறேனுங்க" என்று ஒப்புக் கொண்டாள்.

மறுநாள் காலையில், மருதநாயகத்தைத் தேடப் போவதற்காக மானேஜர் தன் ஆபீஸ் வாசலில் நின்று கொண்டிருந்த போது, அவருடைய அதிர்ஷ்டமே உருவம் எடுத்துக்கொண்டு வந்தது போல, மருதநாயகம் அவரிடம் வந்து சேர்ந்தான். அவனைக்

கண்டதும் மானேஜரின் ஆனந்தம் எல்லை கடந்து போய்விட்டது. ஆனந்தம் மேலிட்டால் அழுகையாக மாறி விடுகிறதல்லவா! இந்த உண்மையை மானேஜர் நிதர்சனமாகவே காட்டி விட்டார். ஹரிச்சந்திர மயான காண்டத்தில், ஹரிச்சந்திரன் தான் காத்து வரும் சுடலைக்கு வந்திருப்பவள் தன் மனைவியென்று அறிந்தவுடன் அவளைக் கட்டிக் கொண்டு அழுதது போல அவர் மருத நாயகத்தைக் கட்டிக் கொண்டு பிரலாபிக்க ஆரம்பித்தார். மருதநாயகம் இம்மாதிரியான பிரலாபங்களை யெல்லாம் நாடகத்தில் அடிக்கடி பார்க்க நேரிட்டிருந்ததனால், அவருடைய சாகசத்தைக் கண்டு அவன் மயங்கி விடவில்லை. வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாகவே அவரிடம் பேச ஆரம்பித்தான். "அந்தப் புது ஆக்கிட்டர் பொம்பளை கூட நான் நடிக்கவே முடியாது" என்று தீர்மானமாகச் சொன்னான். மானேஜர் அவனை ஆஸ்வாசப் படுத்தி, "ஏன்? எதற்காக அவளுடன் நடிக்க மாட்டேன் என்கிறாய்?" என்று கேட்டுப் பார்த்தார். அதற்குக் காரணமே கூறமுடியாதென்று அவன் மறுத்து விட்டான்.

புதிய ஹாஸ்ய நடிகையின் நடிப்பை ஒரே நிமிஷத்தில் கண்டு கொண்ட பொது ஜனங்கள் இந்த ஹாஸ்ய ஜோடிகளையேதான் விரும்புவார்களென்பது, அனுபவம் வாய்ந்த அந்த மானேஜருக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் அவர் மருத நாயகத்தினிடம், "புது நடிகையோடு நடிக்கா விட்டால் நீ. நமது கம்பெனியில் இருந்தே பயனில்லை" என்றார்

மருதநாயகம் இத்தகைய பதிலை எதிர்பார்க்க வில்லை. தான் அவ்வாறு சொன்னால், காளியம் மாளைக் கம்பெனியிலிருந்து நீக்கி விடுவாரென்று அவன் நினைத்தான். மானேஜர் இவ்வாறு சொன் னவுடன், "ஐயா, உங்கள் கம்பெனியில் வேலை பார்க்க எனக்கு இஷ்டமில்லை" என்று சொல்ல யோசித்தான். ஆனால் தனக்கு இவ்வளவு பேரும் புகழும் வாங்கிக் கொடுத்த அந்தக் கம்பெனி மானேஜருடைய மனம் நோகும்படி செய்யவும் அவனுக்கு மனம் வரவில்லை. ஆகையால் சாயந்திரம் வந்து அவரைச் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு மருத நாயகம் அங்கிருந்து போய்விட்டான்.

அங்கிருந்து புறப்பட்ட மருதநாயகம் ஒரு ஹோட்டலில் புகுந்து காப்பி சாப்பிட்டுக் கொண்டே ஒரு முடிவுக்கு வந்தான். எவ்வித கார ணத்தை முன்னிட்டும் காளியம்மாளின் முகத்தில் விழிக்கவே கூடாது என்பதுதான் அவன் கடைசி யாகத் தீர்மானித்த முடிவு. காப்பி சாப்பிட்டான வுடன் அவன் பால கான சோக கீத நாடகக் கம் பெனிக்குப் போட்டியாக நடந்து கொண்டிருக்கும் கான பால கீத சோக நாடகக் கம்பெனி மானேஜ ரைப் போய்ப் பார்த்தான். தன்னை அவருடைய கம்பெனியில் சேர்த்துக் கொள்ள முடியுமா என்றும் கேட்டு விட்டான். அந்தப் போட்டாப் போட்டி நாடகக் கம்பெனி மானேஜர் மருதநாய கத்தை எப்படியாவது தன் கம்பெனிக்கு இழுத்துக் கொள்ள வேண்டுமென்று வெகு காலமாக எண் ணிக் கொண்டிருந்தார். இப்பொழுது பழம் நழுவிப்

பாலில் விழ வருவது போல மருதநாயகமே தன்னி டம் வந்து இவ்வாறு கேட்டவுடன் அவர் ஒரு கரை காணு இன்ப சாகரத்தில் விழுந்து மூச்சுத் திணறிக் கொண்டிருந்தார். பாலில் விழுந்த வாழைப்பழம் தன் வாயிலேயே வந்து விழும்படி செய்வதற்கு, அவருடைய மூளை வெகு தீவிரமாக யோசனை பண் ணிக் கொண்டிருந்தது. சட்டென்று ஒரு முடி வுக்கு வந்தவர் போல, "காந்தா, காந்தா" என்று இரண்டு கதறு கதறினர். உடனே சுமார் பதினேழு வயது மதிப்பிடக் கூடியதும், பெண் ணென்று சொல்லக்கூடியதும், ஆகியதோர் பெண் உருவம் கையில் விளக்குமாறு சாணிச் சட்டியுடன் அங்கே பிரசன்னமாயிற்று. மருதநாயகம் அந்தப் பெண்ணின் ஆகிருதியையும் கோரப் பற்களையும் கண்டு திடுக்கிட்டுச் சோர்ந்து நின்றான்.

முன் காலத்தில் ஒரே ஒரு ராஜாவுக்குக் குதிரை முகத்தோடுள்ள ஒரு பெண் இருந்ததாக, மருத நாயகத்தின் பாட்டி, அவன் சிறு பையனுக இருந்த போது ஒரு கதை சொல்லியிருந்தாள். ஆனால் குதிரை முகப் பெண்ணைப் பற்றி அப்பொழு தெல்லாம் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இப்பொழுது காந்தாவைப் பார்த்தவுடன் அந்த மகா ராஜாவுக்கு குதிரை முகத்தோடு மட்டுமல்ல கழுதை முகத்தோடு கூட ஒரு பெண் இருந்திருக்க லாம் என்று அவனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று.

இவ்வாறு அவன் பாட்டி கதையைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கையில் அந்தப் போட்டாப் போட்டி நாடகக் கம்பெனி மானேஜர்,

"மருதநாயகம், இது தான் என் மகள் காந்தாமணி. ஹாஸ்யக் கட்டங்களை அப்படியப்படியே தத்ரூபமாக நடிப்பாள். இவளை நீ கல்யாணம் செய்து கொண்டு, எங்கள் கம்பெனியிலேயே நிரந்தரமாக இருந்து விடலாம். உனக்கு மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளமும் போட்டுக் கொடுக்கிறேன்" என்று கூறினார்.

காந்தாமணியம்மாளுக்கு அப்பொழுதுதான் தன் தந்தை தன்னை அழைத்ததன் விபரம் நன்ருகத் தெரிய வந்தது. உடனே அவள் மருதநாயகத்தை ஒரு முறை அலட்சியமாகப் பார்த்தாள். பின்பு தகப்பனாரை நோக்கி, "அப்பா இவர் என்னோடு நடிக்க முடியுமா என்று தெரிவதற்கு இப்பொழுதே ஒரு ஒத்திகை நடத்தி விடலாமே" என்று சொல்லிக் கொண்டே மருதநாயகத்தின் அருகே வந்தாள். அவள் வந்த வேகத்தைத் தாங்க மாட்டாது, அங்கிருந்து ஓட்டமெடுத்துப் பழைய இடத்தை அடைந்தபோதுதான் அவனுக்கு மூச்சு சரியாக வந்தது.

"என்ன மருதநாயகம், சாயந்திரம் வருவதாகச் சொன்னவன் மத்தியானமே வந்துவிட்டாயே! என்ன யோசனை?" என்று ராஜா தன் மந்திரியை விசாரிப்பது போல கம்பீரமாகக் கேட்டார் பழைய மானேஜர். "ஐயா, நான் இங்கேயே வேலை பார்க்கிறேனுங்க. ஆனல் அதுக்கு முன்னடி அந்தப் புது நடிகையம்மாளைத் தனியாகக் கண்டு ஒரு வார்த்தை சொல்லிக்கிடறேன்" என்ருன் மருதநாயகம்.

அதே சமயத்தில் காளியம்மாள் தற்செயலாக அந்தப் பக்கம் வரவே, மானேஜர் இருவரையும் அங்கேயே நிறுத்திவிட்டுச் சிறிது தூரத்தில் விலகிப் போய் நின்றார். மருதநாயகம் நடுநடுங்கி கொண்டே காளியம்மாளின் பக்கத்தில் போய், 'காளி, என்னை நீயி நெசத்துக்கும் அடிக்காமே இருப்பியா?'' என்று ஒரு வரம் கேட்டான். இதைக் கேட்டதும் காளியம்மாளுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. "என்ன மச்சான், நீயி இன்னுமா எனக்குப் பயந்துக்கிட்டு இருக்கே? மூந்தி நீயி ஊரிலே வேலை வெட்டி ஒண்ணுமில்லாமே சுத்திக் கிட்டு இருந்தே. அதனாலே உன்னைத் திட்டினேன், அடிச்சேன். இப்போதான் நீயி மாசாமாசம் நூறு ரூவா சம்பளம் வாங்கறியே. உம் பேரு தான் ஒலகமெல்லாம் அடிபடுதே. இனிமே அடிப்பேனா உன்னை? என் ராசால்ல நீயி'' என்று சொல்லிக் கொண்டே அவன் பக்கத்தில் போனாள். மருத நாயகம் தன் காதுகள் சொர்ந்தமா, இரவலா அல்லது சரியானபடி கேட்கும் சக்தியை இழந்து விட்டனவா என்று திகைத்துத் திண்டாடிக் கொண்டிருந்தான். அந்த அமிர்தமயமான வார்த்தைகள் காளியம்மாள் திருவாயிலிருந்துதான் புறப்பட்டன என்று தெரிந்தவுடன் மருதநாயகத்தின் உச்சியும் உள்ளங்காலும் குபீரென்று குளிர்ந்து போய் விட்டன. பக்கத்தில் வந்துகொண்டிருந்த காளியம்மாளைத் தடுத்து, "இரு இரு! இன்னொரு காரியம் சொல்றேன், காளி.......நாம முந்தியே புருசன் பொஞ்சாதிதான் என்கிறது இங்கே உள்ளவங்க

ஒருத்தருக்குமே தெரியாது போலிருக்கு. அதனாலே ஒண்ணு சொல்றேன் கேக்கிறயா. 'ஐயா, நாங்க ரெண்டுபேரும் கண்ணாலம் பண்ணிக்கிட்டு உங்க கம்பெனியிலே வேலை பார்க்கிறோம்' அப்படின்னு இந்த மானேசரு கிட்டச் சொல்விட்டா, அவ்ருக்கு ரொம்பரொம்பச் சந்தோசம் வந்துடும். அவரோட செலவிலே நமக்கு இன்னொரு தடவை கண்ணாலத்தை நடத்தி வச்சுடுவாரு. அதுவுந்தவிர காளி, நீயி இப்படி புது மனுசியா ஆன அப்புறம் உன்னைப் புதுப்பெண் கோலத்திலே பாக்கணும்னு எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு. என்ன சொல்றே?'' என்றான் மருதநாயகம். காளியம்மாளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. "மச்சான், நீயி என்ன சொல்றியோ அப்படியெல்லாம் நானு நடக்கிறேன்" என்று ஒரே முடிவாகச் சொல்லி விட்டாள்.

மானேஜரிடம் அவர்கள் இருவரும் தங்கள் தீர்மானத்தைச் சொன்னவுடன் அவருடைய ஒரு உடம்பு ஒன்றேகால் உடம்பாகப் பூரித்துப் போய் விட்டது.

அதற்கு அடுத்த வாரத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் மருதநாயகம்—காளியம்மாள் ஆகிய ஹாஸ்ய நடிகத் தம்பதிகளின் புகைப் படமே முக்கிய ஸ்தானம் வகித்தது. இப்பொழுது இந்த ஹாஸ்ய நடிகத் தம்பதிகள் கால தேச வர்த்தமானத்தை முன்னிட்டு, சினிமாப் பட உலகத்திலும் புகுந்து அமர்க்களப்படுத்தி வருவதாகத் தெரிகிறது.

# வீண் பிரயத்தனம்

சாந்தப்ப முதலியார் தன் பெயருக்கேற்றபடி பசுவாகவே இருந்தார். ஊரில் அவருக்கு விரோதியே கிடையாது. யாராவது தன் கன்னத்தில் அறைந்தால் அடித்தவன் கை நோகுமே என்று தான் வருத்தப்படுவார். தன் வலியைப்பற்றி நினைக்கவேமாட்டார். பிறர் மனம் நோகும்படி நடக்க அவருக்குத் தெரியவே தெரியாது.

சாந்தப்ப முதலியார் கலெக்டர் ஆபீசில் ஒரு கிளார்க். சம்பளம் நாற்பத்தைந்து ரூபாய்தான். ஆனல் ஏராளமான ஐவேசு உண்டு. குழந்தை குட்டித் தொல்லைகள் ஒன்றும் கிடையாது. தாராளமாகச் செலவு செய்வார். அவருடைய மனைவி அன்னபூரணியம்மாளும் அடுத்த வீட்டுச் சண்டையை விலை கொடுத்து வாங்காத உத்தமி. தம்பதிகள் ஒருவர் சொல்லை ஒருவர் தட்டாமல் நடந்து கொண்டதால் அவர்களுடைய தாம்பத்ய வாழ்க்கையில் எப்பொழுதும் நிலவியது அமைதிதான்.

முதலியார் ஆபீசிலிருந்து வீட்டுக்கு வரும்பொழுது தன் நண்பர்கள் யாரையாவது கண்டு

விட்டால் அப்படியே பேசிக்கொண்டு நின்று விடுவார். அவர்களாக விடைபெற்றுக்கொண்டு போனால்தான் முதலியார் அந்த இடத்தை விட்டு நகருவார். அவராக விடை பெற்றுக்கொண்டு சீக்கிரமாக வீட்டுக்கு வந்து சேர்ந்த நாளே கிடையாது. வழியில் குறைந்தது பத்துப் பேரையாவது சந்தித்துப் பத்து இடங்களில் நின்று, ஐந்து மணி நேரமாவது தன் காதுகளை இரவல் கொடுத்து, அத்தனை பேர் சொல்வதையும் பொறுமையோடு கேட்டுவிட்டு இரவு பத்துப் பத்தரை மணிக்குத்தான் வீடு வந்து சேருவார்.

பட்டாளத்திற்குப் போய் விட்டு வந்திருந்த முனிசாமி நாயுடு சாந்தப்ப முதலியாரைக் கண்டால் விடவே மாட்டார். தான் மலேயா யுத்தத்திற்குப் போயிருந்தபோது, ஒரு கரடியோடு சண்டை போட்டு அதன் மூன்று கொம்புகளையும் முறித்ததையும், எகிப்துச் சண்டையில் இரண்டு சிங்கக் குட்டிகளைத் தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு வந்ததையும், அதைக்கண்டு தன்னை எதிர்த்து ஓடிவந்த ஒரு பெரிய ஆண் சிங்கத்தின் 32 பற்களையும் ஒவ்வொன்றாக உடைத்தெறிந்தவிவரத்தையும் நாயுடு அவரிடம் முப்பத்துமூன்று தடவை சொல்லியாய் விட்டது. முப்பத்துநான்காவது தடவையாக அதே பிரதாபத்தை அவர் சொல்லிய போதிலும், முதலியார் சலிக்காமல் "உம்; உம்;" என்று கேட்டுக் கொண்டேயிருப்பார். "நாயுடுகார்வாள், நீங்கள் இதே கதையை முன்னமே என்னிடம் சொல்லியிருக்கிறீர்களே!" என்று

பதில் சொல்லிவிட்டுக் கிளம்பமாட்டார். இதனால் முனிசாமி நாயுடுவுக்கு அவர்மேல் அபாரப் பிரியம். கண்டால் விடவே மாட்டார்.

சாந்தப்ப முதலியார் தினமும் இவ்வாறு நேரம் கழித்து வருவதைக் கண்டு அவருடைய மனைவி சில வேளை கோபிப்பதுண்டு. அவருடைய கோபத்திற்காக முதலியார் வருத்தப்படுவதே கிடையாது. அவள் ரொம்பப் பேசினால் அவளுடைய வாய் வலிக்குமே என்றுதான் அவர் மனம் வருந்துவார். தனது இக்கட்டான நிலைமையை அவளிடம் எடுத்துச்சொல்லி அவளைச் சமாதானப் படுத்துவாரே யொழிய, இதற்காகத் தன் நண்பர்களோடு வழியில் நின்று பேசுவதை விட்டுவிடவில்லை.

அன்னபூரணியம்மாளுக்குத் தன் கணவனை ஆபீசிலிருந்து சீக்கிரம் வீட்டிற்கு வரச் செய்வதற்கு ஒரு யோசனை தோன்றியது. தங்களுக்கென்று சொந்தமாக ஒரு மோட்டார் வாங்கிவிட்டால் அவர் ஆபீசிலிருந்து காரில் ஏறிக்கொண்டு நேராக வீட்டுக்கு வந்து சேர்ந்து விடுவாரல்லவா! இதுதான் அன்னபூரணியம்மாள் கண்டு பிடித்த யுக்தி. கார் இருந்தால், தானும் அவரும் தினந்தோறும் மாலையில் கடற்கரைப் பக்கம் போய்ப் பேசிக்கொண்டிருக்கலாம் என்றும் எண்ணினாள்.

கார் வாங்கவேண்டியதன் அவசியத்தை அன்னபூரணியம்மாள் அவரிடம் அடிக்கடி சொல்லி வந்தாள். மனைவி எது கேட்டாலும் முடியாது என்று சொல்லும் வழக்கமே அவரிடம் கிடையாது.

"புதுக் கார் அதிக விலையாக இருப்பதனால், பழைய காராகப் பார்த்து வாங்கிக் கொள்வோமா?" என்று மட்டும் அவளிடம் கேட்டுக்கொண்டார். அவளும் அதற்குச் சரியென்று சம்மதித்து விட்டாள். தன்னைப் போன்ற பணக்காரர்களெல்லாம் கார் வைத்திருக்கும்போது தானும் ஏன் கார் வைத்துக் கொள்ளக்கூடாது என்று முதலியாருக்கு எண்ணம் உண்டு. அவ்வாறு அவர் எண்ணிய தன் பயனாகவும், தன் மனைவியின் இடை விடாத தூண்டுதலினாலும் அவர் திடீரென்று ஆயிரத்தைந் நூறு ரூபாய்க்கு ஒரு பழைய காரை விலை பேசி முடித்தார்.

கார் வாங்கிவிட்ட சமாச்சாரத்தை முதலியார் உடனே மனைவியிடம் வந்து தெரிவித்தார். இதைக் கேட்டதும் அவளுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. "காரை எங்கே காணுமே! அதற்கு நாலு சக்கரம் இருக்கான்னு நல்லாப் பார்த்தீர்களா?" என்று கேட்டுக்கொண்டே வாசல் பக்கம் ஓடிவந்தாள். அப்பொழுதே காரில் ஏறி ஒரு பவனி போய்வர ஆசைப்பட்டாள். ஆனால் வாசல் பக்கம் காரைக் காணாததால் திகைத்து நின்றாள்.

"இன்னிக்கி நல்ல நாளில்லையாம். அதனாலே நாளைக் காலை பத்து மணிக்கிக் காரைக் கொண்டு வந்து வீட்டில் விடச் சொல்லியிருக்கிறேன். மாசம் இருபதே ரூபாயில் ஒரு டிரைவரும் அமர்த்திவிட்டேன்" என்று முதலியார் சொன்ன பிறகுதான் அன்னபூரணியம்மாளின் பெருமூச்சு சாதாரண மூச்சாக மாறியது.

அதிலிருந்து இரண்டுமணி நேரம் வரை இருவரும் தங்கள் காரைப் பற்றியேதான் பேசிக் கொண்டிருந்தார்கள். காரில் இத்தனை தடவை ஆபீசுக்கும் போய் வரவேண்டும்; வழியில் சிநேகிதர்களைக் கண்டாலும் காணாதது போல் காரில் அவர் எப்படி உட்கார்ந்திருக்க வேண்டும்? பீச்சுக்கு அவர்கள் இருவரும் எத்தனை மணிக்குப் புறப்பட வேண்டும், எத்தனை மணிக்குத் திரும்பவேண்டும் என்றெல்லாம் திட்டம் போட்டாய் விட்டது.

கடைசியில் காரை இரவல் கொடுப்பதைப் பற்றிப் பேச்சு வந்தது. அன்னபூரணியம்மாள் " இல்லேன்னு சொல்ற வழக்கந்தான் உங்களுக்குப் பிறவியிலேயே கிடையாதே! கேட்டவர்களுக்கெல்லாம் நம்ம காரை இரவல் கொடுத்துடுவீங்க. அப்புறம் ரிப்பேர் செய்யறதுக்குப் பணத்தை வாரி இறைக்க வேண்டியதுதான். கார் ஆறு மாசத்துக்குத்தான் ஓடும். அதனாலே, யாராவது நம்மகிட்ட வந்து காரை இரவல் கேட்டால் கொடுக்க முடியாதுன்னு நீங்க கண்டிப்பாகச் சொல்லிடணும், இதிலே மட்டும் தாட்சண்யமே கூடாது" என்று அடுத்ததாக எடுத்துச் சொன்னாள்.

சாந்தப்ப முதலியார் வழக்கம் போல, மனைவியின் இந்தக் கட்டளைக்குச் "சரி" என்று ஒப்புக்கொள்ளாமல் ஆலோசனையில் ஆழ்ந்து விட்டார். தன் மனைவி சொன்னது நியாயம் என்று தான் அவருக்கும் பட்டது. ஆனாலும் காரை இரவல் கேட்பவர்களிடம், அவர்கள் மனம் வருந்தும்

படியாக 'கொடுக்க முடியாது' என்று எப்படிச் சொல்வது? கேட்பவர்களின் மனம் இந்தப் பதில் காரணமாக எவ்வளவு தூரம் வருத்தமடையும்! இந்தத் தர்ம சங்கடமான நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தார் முதலியார்.

திகைத்துக் கொண்டேயிருந்த முதலியார் ஒன்றும் பேசாமல் சட்டென்று எழுந்து வெளியே புறப்பட்டார். அவர் மனைவி "எங்கே அவசரம்?" என்று கேட்டதற்கு அவர் "வந்து சொல்லு கிறேன்" என்று சொல்லிவிட்டு வீதியில் விரைவாக நடந்தார்.

சுமார் மூன்று மணி நேரம் கழித்து சாந்தப்ப முதலியார் வியர்த்து விறுவிறுத்துப் போய் பழையபடி வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அவருடைய கையில் ஒரு நீளத் தாள் இருந்தது. அதன் இரண்டு பக்கங்களிலும் அவர் என்னென்னவோ எழுதி யிருந்தார். அந்தக் காகிதத்தை அவர் தன் மனைவியிடம் கொடுத்து விட்டு "அன்னம், இனிமேல் நமக்கும் கவலை விட்டது. நம்ம காரை இரவல் கொடாமலிருக்க நான் சரியான வழி கண்டு பிடித்து விட்டேன். இதை வாசித்துப்பார்" என்று ஆனந்தக் கூத்தாடினார்.

அன்னபூரணியம்மாளுக்கு ஒன்றுமே விளங்க வில்லை. அவர் கொடுத்த காகிதத்திலுள்ளதை உரக்க வாசித்தாள்:—

(1) "காரா? உங்களுக்கா? வேணும்னு கேட்கிறீங்க? நாளைக்கா? அடாடா! ஐயையோ! நாளைக்கிப் பார்த்துத்தான் நானும் கீழ்ப்பாக்கம் வரைக்கும் போக வேண்டியிருக்கு. எப்பத் திரும்புவேன்னு எனக்கே தெரியாது; இல்லேன்னு நான் கட்டாயம் காரைக் குடுத்துடுவேன். உங்களுக்கு இந்த உபகாரம்கூடச் செய்ய முடியாமலிருக்கேன்னு என் மனசு கிடந்து ரொம்ப வருத்தப்படுது."

(2) "அடக் கஷ்டகாலமே! ஒரு நாளும் கேட்காதவர்கள் வந்து காரைக் கேட்கிறீங்க. என்னத்தைச் சொல்றது நான்? மூதேவி நேத்திக்கித்தான் பாருங்க ரிப்பேராப் போச்சு. இதுவும் உங்க அதிர்ஷ்டம் தானோ என்னவோ!"

(3) "அட இழவே! கொஞ்சம் முந்தி—ஒரு பத்து நிமிஷத்துக்கு முந்தி வந்திருக்கக் கூடாதோ நீங்க? இப்பத்தான் நம்ம கண்ணபிரான் பிள்ளையவாள் வந்தாங்க. நாளைக்கி காரைக் கொஞ்சம் இரவல் குடுக்கணும்னு கேட்டாங்க. நான்தான் இல்லேன்னு சொல்ற வழக்கமே கிடையாதே. சரி, கொண்டுபோங்கன்னு வாக்குச் சொல்லிட்ட பிறகு நீங்க வந்து கேக்கிறீங்க. இப்ப நான் என்ன செய்றது?"

(4) "உங்களுக்கு இல்லாத காரு, வேறே எந்தப் பயலுக்குத்தான் வச்சிருக்கேன் சார்! காரு ஓடுச்சின்னு, நீங்க மகாராஜனுக் கொண்டுபோறதிலே ஆட்சேபனை இல்லே. எனக்கு எவ்வளவோ

அவசர காரியம் இருக்கு. அதுக்கெல்லாம் கூட நான் வாடகைக்கார் அமர்த்திக்கிட்டுத்தான் போயிட்டு வாரேன். சார், நான் உங்களுக்குக் கார் குடுக்கலேன்னு நீங்க வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது. கார் நம்ம 'ஷெட்'டிலேதான் நிற்கிறது. உங்களுக்கு சந்தேகம் இருந்தா போய்ப் பாத்துக் கிடுங்க."

(5) "அடகடவுளே, நீங்க வந்த நேரம் நல்ல நேரம் இல்லே போலிருக்கு. எங்க கார் டிரைவருக்கு நாலு நாளா ஜன்னி. அவனைத் தவிர வேறே ஒர்த்தனும் என் காரை ஓட்டவே முடியாது. இதுக் கென்ன செய்றது. நீங்களே சொல்லுங்க. குடுக்கக் கூடாதுன்னு இல்லே. வழியில்லே."

இவ்வாறாக படித்துக் கொண்டே போன அன்னபூரணியம்மாள் "ஆமா, இதென்ன வேடிக் கைக் கூத்து. இதெல்லாம் யார் சொன்னது?" என்று கேட்டாள்.

"இன்னும் புரியலேயா உனக்கு?" என்றார் முதலியார் புன்னகையோடு.

"எனக்கு ஒண்ணுமே புரியலே. விளக்கமாகச் சொல்லுங்க."

"நம்ப ஊரிலே யாரெல்லாம் சொந்தக்கார் வச்சிருக்காங்களோ அவங்க கிட்ட எல்லாம் போய் 'நாளைக்கிச் சீவலப்பேரி வரைக்கும் அவசரமா போயிட்டு வரவேண்டியிருக்கு. உங்க காரைக் கொஞ்சம் இரவல் குடுப்பீங்களா?' என்று கேட்டுப்

பார்த்தேன். அதற்கு ஒவ்வொர்த்தர் சொன்ன பதிலையும் அப்படியப்படியே லக்கம் போட்டு எழுதிக்கிட்டு வந்திருக்கேன், புரிஞ்சுதா?"

"சரி. இப்படி இதை எழுதி வச்சிக்கிட்டு என்ன செய்யப் போகிறீங்க?"

"என்ன செய்யப் போறேனா? இது தெரியலையா அன்னம்! நம்ம கிட்ட வந்து காரை இரவல் கேட்கிறவங்களுக்கு 'முடியாது'ன்னு சொல்லாமல், இதிலுள்ளபடி வரிசையாகப் பதில் சொல்லிச் சமாளித்துக்கொள்ளலாமா இல்லையா?"

அன்னபூரணியம்மாள் மூக்கின்மேல் விரலை வைத்தாள்! "என்ன யுக்தி! என்ன யுக்தி!! இந்தக் குயுக்தி எனக்குப் பிரியாமப் போயிட்டுதே! சரியான யோசனைதான். அப்படின்னா நீங்க இதைப் பூராவும் பாராமப் பாடம் பண்ணிக்கிடுங்க" என்றாள். தன் புருஷன் வீட்டில் இல்லாத சமயங்களில் தன் சிநேகிதிகள் வந்து காரை இரவல் கேட்டால், பதில் சொல்லவேண்டிய பொறுப்பு தனக்கும் ஏற்படுமல்லவா? ஆகையால், தானும் அந்தக் காகிதத்தில் எழுதியிருந்த முப்பத்திரண்டு வகைப் பதில்களையும் இரவு முழுதும் கண் விழித்து மனப்பாடம் பண்ணி வைத்துக் கொண்டாள்.

மறுநாள் பொழுது விடிந்தது. கார் எப்போ வருமென்று தம்பதிகள் இருவரும் வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை வெகு நேரம் அவ்வாறு அலுக்க வைக்காமல் வெகு தொலைவில் 'கடபுடா' என்று

ஒரு கார் வரும் சப்தம் கேட்டது. ஆனால் கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் காரின் உருவம் தெரியவில்லை. சப்தம் மட்டிலும் அரை மைலுக் கப்பாலிருந்து சிறிது சிறிதாக நெருங்கி வந்து கொண்டிருந்தது. அரைமைல்தூரத்தையும் கால் மணி நேரத்தில் கடந்து வந்த முதலியாரின் கார், ஆங்கார சப்தங்களுடன் அவர் வீட்டுமுன் வந்து நின்றது.

அன்னபூரணியம்மாள் காரை ஒரு தடவை சுற்றி வந்துவிட்டு, " நீங்களும் நானும் நேற்றுப் பாராமல் படித்து வைத்ததெல்லாம் வீண்தான்" என்றாள் ஒரு ஏமாற்றப் பெருமூச்சோடு.

"ஏன் அப்படிச் சொல்றே" என்றார் முதலியார்.

" இந்தக் காரை இரவல் கேட்கிறதற்குத்தான் ஒருத்தரும் வரமாட்டார்களே. அந்தப் பதில்களை யெல்லாம் யாரிடம் சொல்றது?" என்று கேட்டாள் அன்னபூரணியம்மாள். புதிதாக வந்த டிரைவரும் அதை ஆமோதிப்பதுபோல் "இந்தக் காரை இரவல் கேட்க யாராச்சும் வருவாங்கன்னு உங்களுக் குக் கவலையே வேண்டாமுங்க" என்றான்.

கார் வாங்கின ஒரு மாதத்திற்குள்ளாக சாந் தப்ப முதலியாரும் அவர் மனைவி அன்னபூரணியம் மாளும் அந்தக் காரில், கீழே விழுந்து விடாமல் சவாரி செய்யப் பழகிக் கொண்டார்கள். முத லியார் ஆபீசிலிருந்து வரும்போது கூட அவ ருடைய நண்பர்களில் சிலர்களை நிறுத்தி அவரைப்

பேச முயற்சித்தார். "அண்ணாத்தை! அண்ணாத்தை!!" என்று அவர் போட்ட கூப்பாட்டையெல்லாம் அவருடைய காரின் சப்தம் விழுங்கிவிட்டது. ஆகையால் அன்னபூரணியம்மாள் நினைத்தபடியே முதலியார் தினம் ஆபீஸிலிருந்து நேராக வீட்டுக்கு வந்து சேர்ந்து கொண்டிருந்தார்.

கார் வாங்கி ஆறு மாதமாகியும் ஒருவராவது அதை இரவல் கேட்க வரவில்லை. தான் பாராமல் படித்து வைத்த பதில்களை உபயோகிக்க ஒரு சந்தர்ப்பமாவது கிடைக்கவில்லையே என்று சாந்தப்ப முதலியாருக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. வாசகர்களுக்குக் கார் வேண்டுமானால் தயவு செய்து அவர் காரை இரவல் கேட்டு சொல்லும் பதிலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# கலியுகக் கணபதி

"என்ன, பிள்ளைவாள், ஒரு மாதிரியா இருக்கிறேள்?"

"ஒண்ணுமில்லேன்ன! ஏதோ ரெண்டு நாளா உடம்பு சரியா இல்லே! ஜலதோஷம்!"

"அடடா! இதுக்கா கவலைப்படுறேள்? நம்ப கலியுகக் கணபதிக்கு கால் படி பால் அபிஷேகம் பண்றேன்னு நேர்ச்சை செய்து கொள்ளுங்கள். ஜலதோஷம் கிலதோஷம் எல்லாம் பறந்துடும்! கலியுகக் கணபதியை நீங்க லேசாய் நினைக்கவேண்டாம். தீராத வியாதியெல்லாம் குணமாயிருக்கு! அவருடைய கிருபையினல் தான் நம்ப மாப்பிள்ளைக்குப் போன வாரம் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு வேலை கிடைத்தது."

"ஓஹோ! அப்படியா? ரொம்ப சந்தோஷம்! சும்மாவா சொன்னங்க, கடவுளை நம்பினோர் கைவிடப்படார்ன்னு."

"கடவுளே இல்லேன்னு கத்தருன்களே, மனுஷன்கள், அவங்க இங்கே நேரிலே வந்து பார்க்கணும் நம்ப கணபதியின் அதிசயத்தை; சரி—நான்

சொன்னபடி நீங்க செய்து பாருங்க, வியாதி குண மாகிறதா இல்லையா என்று பிறகு சொல்லுங்க.... போகட்டுமா?'' என்று சொல்லிக்கொண்டே கலி யுகக் கணபதி கோவில் பூசாரி கங்காதர சாஸ் திரிகள் மாணிக்கவாசகம் பிள்ளையை விட்டு விட்டுக் கோயிலைப் பார்க்க ஓடினர்.

போன மாதம் வரை மேலே சொன்ன மாதிரி சம்பாஷணைகள் எங்கள் ஊரைச் சுற்றிலும் நடந்து வந்தன. யாருக்காவது வியாதி வந்துவிட்டால் அவர்கள் ஆஸ்பத்திரியைத் தேடுவதில்லை. நேராகக் கலியுகக் கணபதியின் கோவிலுக்குத்தான் ஓடுவது வழக்கம். கேஸ் போடுபவர்கள் வக்கீலைத் தேடாமல் கலியுகக் கணபதியையே வந்து பிரார்த்தித்துக் கொண்டார்கள். இதனல் டாக்டர்களுக்கும் வக்கீல் களுக்கும் எங்கள் ஊரில் வேலையே இல்லாமல் போய்விட்டது.

*** *** ***

சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்னல் கலி யுகக் கணபதியின் ஆலயம் வெறும் பிள்ளையார் கோவிலாகத்தான் இருந்து வந்தது. திருக் கார்த் திகை அன்று மட்டும் கோவில் வாசலில் ஒரு அகல் விளக்கு சிறிது நேரம் எரியும். மற்ற நாட்களில் பிள்ளையார், தீபத்தையே பார்த்தது கிடையாது. கோவில் பூசாரி, கங்காதர சாஸ்திரிகள் ஆற்றில் குளித்து விட்டு வரும்போது ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வருவார். அதைப் பிள்ளையார் தலையிலே யோ பெருச்சாளியின் வாலிலேயோ கவிழ்த்து

விட்டு இடது கையிலிருக்கும் ஒரு மாவிலையைக் கிள்ளி நாலு தடவை போட்டு அர்ச்சனையையும் ஒரு நிமிஷத்தில் முடிப்பார். அப்போது அவர் அடைத்துவிட்டுப் போன கதவும், மறுநாள் காலை அவர் குளித்து விட்டு வரும்போது தான் திறக்கப் படும். அது வரை பிள்ளையார் இருளிலேயே மூழ்கிக் கிடப்பார்.

கடவுளின் உருவத்தை ஒருவரும் கண்டதில்லை யென்று வேதாந்திகள் சொல்வதுண்டு. அந்த உண்மை எங்களூர் பிள்ளையார் விஷயத்தில் பிரத்தி யக்ஷப் பிரமாணமாக இருந்தது. கங்காதர சாஸ் திரிகளைத் தவிர வேறு ஒருவருக்கும் அந்தப் பிள்ளை யார் எப்படி யிருந்தாரென்றே தெரியாது. சாஸ் திரிகள் மட்டும் தினம் கோவிலுக்குப் போய்த்தீர வேண்டியிருந்தது. ஏனென்றால் அதை முன் காலத் தில் கட்டி வைத்த புண்ணியவான் பூஜைக்காக இரண்டேகால் செண்டு நிலம் மானியமாக விட்டிருந் தார்.

கங்காதர சாஸ்திரிகள் எப்போதாவது அய லூருக்குப் போய்விட்டால், அப்போது பிள்ளையார் தண்ணீரைக் கூடக் கண்ணுல் பார்க்கமுடியாது.

* * * * * * * * *

இவ்வாறிருந்த பிள்ளையாருக்குத் திடீரென்று சுக்கிரதிசை அடித்தது. அதிலிருந்து ஒரு வருஷத் திற்குள் கோவிலின் நிலைமையில் பெரிய மாறுதல் ஏற்பட்டு விட்டது. எங்கள் கிராமமே பட்டணமாகி விட்டது. அதனுல் ரெயில்வே கம்பெனிக்காரர்கள்

எங்கள் ஊருக்கு ஸ்பெஷல் ட்ரெயின் விட ஆரம்பித்தார்கள்.

நாலேகால் அடிச் சவுக்கத்தில் ஊரின் மூலையிலிருந்த கோவிலைச் சுற்றி உட்பிரகாரம், வெளிப்பிரகாரம், நடுப்பிரகாரம் கட்டப்பட்டன. அதைச் சுற்றிலும், மாடமாளிகைகள் உள்ள தெருக்கள் போடப்பட்டன. தில்லை மூவாயிரவர்கள் போல பல இடங்களிலுள்ள பக்தர்களும் இங்கு வந்து குடியேறினார்கள். சில பக்தர்கள் கோவிலுக்குக் கோபுரம் கட்டி வைத்தார்கள். ஒரு பக்தர் தன் வயிற்று வலி நீங்கி விட்டதற்காகக் கோவிலுக்குள் தெப்பக் குளம் ஒன்று கட்டி வைத்தார். இன்னொரு தேங்காய் வியாபாரி கோவிலுக்கு அநேக வாகனங்கள் செய்து வைத்தார். வெள்ளி விளக்குகளும் தங்க நகைகளும் வந்து நிறைந்தன.

கம்பளிவாணக் கவிராயருக்கு எங்கள் ஊரைப் பற்றி ஸ்தல புராணம் எழுதும் பாக்கியம் கிடைத்தது. பல இடங்களிலிருந்தும் பக்தர்கள் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருந்தார்கள். ஒரே வருஷத்திற்குள் அங்கே எத்தனையோ மகுடாபிஷேகங்கள், கும்பாபிஷேகங்கள் நடந்தேறின. அதனால் எத்தனையோ பாபங்களுக்கு விமோசனம் கிடைத்துவிட்டது. பக்தர்கள் தங்கள் பாவ மூட்டைகளையெல்லாம் எங்கள் ஊரிலேதான் கொண்டு வந்து தொலைக்க முடியும் என்று நம்பினார்கள். அதனால் பக்தர்களுக்கு ஒரு திவ்ய ஸ்தலமாகவும், வியாபாரிகளுக்கு வியாபார ஸ்தலமாகவும்,

மற்றவர்களுக்கு ஒரு முக்கிய ஸ்தலமாகவும், விளங்கிற்று. ஜில்லாப் பூகோளப் படத்திலும் எங்கள் ஊரின் பெயர் கொட்டை எழுத்துக்களில் போடப் பட்டது. சீக்கிரத்திலேயே நகர சபை ஸ்தாபிக்கப் படுமென்ற வதந்தியும் கிளம்பிற்று. ஆனல் ஆதார மில்லை.

கங்காதர சாஸ்திரிகளின் தோற்றத்திலும் அதிக மாறுதல் ஏற்பட்டது. அவர் கழுத்தில் சிவப்பு நூல் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த ருத்திராக்ஷம் தங்கச் சங்கிலியில் ஊஞ்சலாடியது. காதில் வைரக் கடுக்கன்கள் டால் வீசின. அவருடைய கூரை வீடு மாடி வீடாயிற்று. சாஸ்திரிகள் நாட்டுப்பொடியை வாழை மட்டையில் வைத்துப் போடும் வழக்கத்தை அடியோடு விட்டு விட்டார். அன்றன்று மெயிலில் வரும் பட்டணம் பொடிதான் அவருடைய வெள்ளி டப்பியில் இடம் பெற்றது. கோவிலின் மாறுதலுக்கேற்றபடி சாஸ்திரிகளும் ஒரு தினுசாக ஆகிவிட்டதில் ஆச்சரிய மெதுவு மில்லை. ஆனல் அவர் மற்றவர்களைப் போலில் லாமல் தன்னுடைய பாக்கியமெல்லாம் கலியுகக் கணபதியின் அருளினல் தான் கிடைத்ததென்று எப்போதும் நினைத்துக்கொள்வார்.

* * *        * * *        * * *

கோவிலில் திடீரென்று மாறுதல் ஏற்படக் காரணமென்ன வென்று வாசகர்கள் அறிய விரும்பலாம். அதனல் சொல்லியே விடுகிறேன்.

ஒருநாள் கங்காதர சாஸ்திரிகளுக்கு ஒரு கிழட்டுப் பசு தானமாகக் கிடைத்தது. சாஸ்திரிகள் அதன் பல்லைப் பிடித்துப் பார்க்கவேயில்லை. ஏனென்றால் அதற்குப் பல்லே கிடையாது. மாடு வீட்டுக்கு வந்த அன்று அரைக்கால் படி பால் கொடுத்தது. சாஸ்திரிகள் அதைப் பிள்ளையார் தலையில் ஊற்றிவிடத் தீர்மானித்து எடுத்துக் கொண்டு போனார். அப்போது அவர் ஸ்நானம் செய்யவில்லையாதலால் கோவில் கதவைத் திறந்து பாலை உள்ளே வைத்துப் பூட்டிவிட்டு ஆற்றுக்குப் போய்விட்டார்.

திரும்ப வந்து கதவைத் திறந்தபோது, பால் வைத்திருந்த பாத்திரம் காலியாக இருந்தது. ஒரு சொட்டுப் பால் கூட அதில் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை. சாஸ்திரிகள் அதைக் கண்டதும் திகைத்து விட்டார். கோவில் கதவு பூட்டப்பட்டிருந்த போது பால் மாத்திரம் எப்படிக் காணமல் போயிருக்க முடியும்? பிள்ளையார்தான் பாலைச் சாப்பிட்டிருக்க வேண்டுமென்ற முடிவை அவர் அடைந்தவுடன் பிள்ளையாரை நோக்கித் தன் கன்னங்களில் தட்டிக் கொண்டார்.

இருந்தாலும் அவருக்கு "இப்படியும் இந்தக் கலி காலத்தில் நடக்குமா?" என்ற சந்தேகமும் தோன்றியது. அதை நிவர்த்தித்துக் கொள்வதற்காக அன்று மாலையில் கறந்த ஆழாக்குப் பாலையும் கோவிலினுள் வைத்துப் பூட்டிவிட்டு வெளியில் ஒரு மணிநேரம் தங்கியிருந்தார். மறுபடியும் கதவைத் திறந்து பார்த்த போது பாலைக் காணவில்லை.

பாத்திரம் மட்டும் தானிருந்தது. அவருடைய அரை குறைச் சந்தேகமும் நீங்கி விட்டதால் அவருக்குண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. தான் ஒருவனே பரமபக்தன். தனது பக்தியை உத்தேசித்தே கணபதி பாலை உட்கொள்கிறார் என்று நம்பினார். உடனே ஊருக்குள் ஓடி ஓடி பிள்ளையாரின் கூற்றை எல்லோரிடமும் தெரிவித்தார். எல்லோரும் அந்த அதிசயத்தைத் தாங்களே நேரில் பார்க்க வேண்டுமென்று ஆவல் கொண்டு துடித்தார்கள். அன்று நேரமாகி விட்டதால் பால் கிடைக்கவில்லை. ஆகையால் ஊர் ஜனங்கள் மறுநாள் காலைவரை ஒருவாறு பொறுத்துக்கொண்டிருந்தார்கள்.

மறுநாள் காலையில் கோவிலின் முன் ஒரே ஜனத்திரள் கூடியிருந்தது. கங்காதர சாஸ்திரிகள் ஆழாக்குப் பாலைக் கொண்டு வரும் போது எல்லோரும் ஒதுங்கி வழி விட்டார்கள். சிலர் நெருக்கியடித்துக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்தார்கள். பையன்கள் பக்கத்திலிருந்த மரங்களிலும் குட்டிச்சுவர்களின் மேலும் ஏறி நின்று கொண்டிருந்தார்கள்.

சாஸ்திரிகள் கூட்டத்தை ஒருவாறு சமாளித்துக் கொண்டு கதவைத் திறந்து பாலை உள்ளே வைத்துக் கதவைப் பூட்டினார். ஜனங்களைச் சற்று அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டு வெளியே சிறிது நேரம் உட்கார்ந்தார். அதற்குள்ளாக சிலர் "நேரமாயிட்டது, திறங்கள் கதவை" என்று துடித்தார்கள்.

சுமார் ஒரு மணி நேரம் கழிந்தது. சாஸ்திரிகள் கதவைத் திறந்தார். ஜனக்கும்பல் பெரிய அதிசயத்தைக் காணப் போகிறவர்களைப் போல அவர் கையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். சாஸ்திரிகள் தாங்கமுடியாத சந்தோஷத்துடன் பால் வைத்திருந்த பாத்திரத்தைத் தூக்கி அவர்களிடம் தலைகீழாகக் கவிழ்த்துக் காண்பித்தார். அவ்வளவு தான்! கூட்டத்தில் சிலர் தங்கள் கன்னங்களில் 'பளீர்' 'பளீர்' என்று போட்டுக் கொண்டார்கள். சிலர் கோவிலுக்கெதிரே சாஷ்டாங்கமாக விழுந்தார்கள். இன்னும் சிலர் "கலியுகக் கணபதிக்கு ஜே! அரிஹர நமப்பார்வதிபதே!!" என்று ஆரவாரித்தார்கள்!

அது முதல், தினம் கூட்டம் திரண்டு வருவதும் பால் காணமல் போவதும் சகஜமாகிவிட்டது.

இந்த அதிசயச் செய்தி பலவிதத் தலைப்புகளுடன் தினசரிகளில் வெளி வந்தன. கலியுகக் கணபதியின் மகிமையைப் பற்றி மூலைக்கு மூலை பிரசங்கம் நடந்தேறியது. "கலியுகத்திலும் நான் உயிரோடு இருக்கிறேன் என்று காட்டுவதற்காகவே கலியுகக் கணபதி இவ்வாறு திருவிளையாடல்கள் புரிகின்றார்" என்று ஒரு புராணிகர் ஊர் ஊராகச் சென்று கடல் மடை திறந்தாற்போலப் பேசி வந்தார். கலியுகக் கணபதியின் அருளினல் தங்களுக்கு ஏற்பட்ட நன்மைகளை ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் பிரஸ்தாபித்துக் கொண்டார்கள். வெளியூரிலிருந்தும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக

வந்தார்கள். உண்டியல் குடங்கள் தினமும் நிரம்பிய வண்ணமாக இருந்தன. ஆனால் பிள்ளையார்—இல்லை, கலியுகக் கணபதி சாப்பிடுவதோ காலையில் அரைக் கால் படி பால்; மாலையிலும் அரைக்கால் படி பால் தான்!

இந்த மாதிரி ஒரு வருஷம் வரை நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் சாஸ்திரிகள் கலியுகக் கணபதிக்கு பூஜை செய்துவிட்டு எதிரே நின்று கொண்டிருந்த பக்தகோடிகளுக்கு விபூதிப் பிரசாதம் வழங்குவதற்காக வெளியே வந்தார். பிள்ளையார் முன்னால் ஒரு தட்டு நிறைய மோதகம் இருந்தது. சாஸ்திரிகள் அந்தப்புறம் திரும்பியதும் எங்கிருந்தோ ஒரு சுண்டெலி ஓடி வந்து தட்டிலுள்ள மோதகம் ஒன்றைத் தின்ன ஆரம்பித்தது. அதை இரண்டொருவர் பார்த்துக்கொண்டிருந்த சமயத்தில் கோவில் உள் முகட்டிலிருந்து ஒரு கொழுத்த பூனை அந்த சுண்டெலியின் மீது பாய்ந்தது. பக்த கோடிகள் அனைவரும் கையைத் தட்டிப் பூனையை விரட்டினார்கள். பூனை எலியைக் கவ்விக்கொண்டே வெளியே ஓடிவிட்டது.

அன்று முதல் கலியுகக் கணபதி சூடியா விரதம் அனுஷ்டித்து வருகிறார். கோவிலுக்குள்ளேயே ஒரு ஜீவ ஹிம்ஸை நடந்து விட்டதனால்தான் கணபதியின் மகிமை போய்விட்டதென்று சாஸ்திரிகள் இன்னும் வாதிக்கிறார்.

# தீபாவளி இரகசியம்

[வருஷா வருஷம் தீபாவளி வருகிறது. நாமும் புதுப்புது ஆடைகள் உடுத்துகின்றோம். பலகார வகையறுக்களையும் வஞ்சகமில்லாமல் சாப்பிடுகிறோம். இதுமட்டும் போதுமா? தீபாவளி ஏன் வருகிறது என்பதைக் காரண காரிய ஆதாரங்களுடன் ஆராயவேண்டாமா?

'ஏதோ நரகாசுரன் இருந்தான். கிருஷ்ண பரமாத்மா, பாமாவின் உதவியினால் அவனைக் கொன்றார். அவன் இறந்த நாளையே தீபாவளி என்று கொண்டாடுவது.' இம்மாதிரி யெல்லாம் பாட்டிகள் கதை சொல்வதுண்டு. நாம் அதை அப்படியே நம்பி விடலாமா? ஆராய்ச்சி யுகமல்லவா இது!

அந்த நரகாசுரன் யார்? கிருஷ்ணபகவான் ஏன் அவனைக் கொல்லவேண்டும்? அசுரனைப் படைத்த பிரம்மாவுக்கு அவன் பிரபல துஷ்டனாக வருவானென்று தெரியத்தானே செய்யும். அப்படித் தெரியும் சக்தியுள்ள பிரம்மா அவனைச் சிருஷ்டிப்பானேன்? பின்பு அவனைக் கொல்லவேண்டு

மென்று பாற் கடலில், (ஆனால் இப்போது உப்புக் கடலாக மாறி விட்டது.) அரை அடி அகலமுள்ள ஒரு ஆலிலைமேல் கண்களை மூடாமல் தூங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீமன் நாராயணனிடம் போய் முறையிடுவானேன்! இதிலெல்லாம் ஏதோ சூக்ஷ்மம் இருந்துதான் தீரவேண்டும். ஆகவே நாம் இப்பொழுது செய்யவேண்டியது என்ன வென்றால் ஆராய்ச்சிதான். ஆராய்ச்சியொழிய வேறொன்றுமில்லை.

ஆராய்ச்சி பண்ணாமல் ஒரு காரியத்தைச் சொன்னால், இந்தக் காலத்தில் யார் நம்புகிறார்கள்? ஆகையால் நான் தீபாவளி ஆராய்ச்சியில் இறங்கி அதன்மூலம் கண்டறிந்த சில அரிய பெரிய தத்துவங்களை உலகத்தாருக்குப் பட்டப் பகல் சூரியன் கன வெட்ட வெளிச்சமாக்கப் போகிறேன். ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள்! நீங்கள் என் ஆராய்ச்சியையே ஆராய்ந்து பார்த்து விடக்கூடாது!

[முக்கியக் குறிப்பு:—இந்த தீவிர ஆராய்ச்சியின் பலனைக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள் பற்றிய சகல உரிமைகளும் ஆசிரியருக்கே உரியதாகும். இதிலுள்ள விஷயங்களை யாராவது அல்லது எவராவது, முழுவதையுமோ, அல்லது பகுதிகளையோ எடுத்துப் பிரசுரிக்கவோ, படிக்கவோ, மொழிபெயர்க்கவோ, கேட்கவோ, சொல்லவோ செய்தால், அத்தகைய நபர்கள்மீது கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று ஆசிரியர் இதன்மூலம் அறிவித்துக் கொள்கிறார்.]

# நான்முகம்

இந்தத் 'தீபாவளி இரகசியம்' என்ற அரிய ஆராய்ச்சி நூலை வெளியிட்டுள்ள ஆசிரியர் கஜப் புளுகர், ஒருநாள் காலையில் தமது பத்தினியார் 'டக்' கென்று மேஜையின் மேல் கொண்டு வந்து வைத்த ஒரு தம்ளர் காப்பியையும் நிதானமாக ரசித்து ரசித்துக் குடித்துவிட்டுத் தீபாவளி பற்றிய ஆராய்ச்சியில் மூழ்ந்து மூளையைச் செலுத்த லானார். அப்பொழுது காளி பூஜையில் கரடி வந்ததுபோல, அவருடைய வேலைக்காரப் பொன்னன் அலறிப் புடைத்துக் கொண்டு அவருடைய அறைக்குள் ஓடிவந்தான். ஆசிரியர் அவனை ஒரு கல்தா கொடுத்து வெளியே தள்ளிக் கதவைத் தாளிட்டுவிட்டுப் பழையபடி, தம் நாற் காலியில் உட்கார்ந்தார். அவருடைய கற்பனை ரதம் சுவர்க்க, மத்திய, பாதாள மென்கிற மூன்று லோகங்களிலும், மாறி மாறி சென்று திரும்பிக் கொண்டிருந்தது. மூன்று லோகங்களைப் பற்றி எழுதப்பட்டுள்ள மகாத்மியங்களையும், புராண இதி காசங்களையும் அவர் ஒன்றுவிடாமல் துருவித் துருவி ஆராயலானார். அந்தப் புத்தகங்களிலிருந்து அவருக்குப் போதிய சான்றுகள் கிடைக்காமற் போகவே, அவர் முற்கால, தற்கால, பிற்கால சாஸ்திர, சமூக, தேக தத்துவ நூல்களைச் சர மாரியாக எடுத்துப் புரட்டினார். அவற்றிலும் அவர் தேடிய ஆதாரங்கள் அகப்படாமல் போன காரணத் தினால் மனமுடைந்து, சிந்தாகூலராய்த் தம் நாற்

காலியோடு பின்புறமுள்ள மண் சுவரில் தடா லென்று முட்டிக் கொண்டார்.

முட்டினவுடனே, தேவர்கள் பண்ணிய புண் ணியவசத்தாலும், இவ்வுலகத்தவர் செய்த தவப் பயனுகவும், ஆசிரியரின் முன்னோர்கள் தண்ணீர்ப் பந்தலருகில் தடியோடு காத்திருந்து, தருமத்தை நிலைநாட்டிய பரோபகாரத்தின் பலனுகவும், அவர் தலைமோதிய சுவரின் ஒரு பகுதி இடிந்து (அவர் தலைமீது விழாமல்) கீழே விழுந்தது. இடிந்துபோன இடத்தில் பெரிய பொந்து ஒன்று இருப்பது ஆசிரிய ருக்குப் புலப்பட்டது. ஆசிரியர் அதைத் தோண்டிப் பார்த்தார். அந்தப் பொந்தினுள் இரும்பு முலாம் பூசிய ஈயப்பேழை ஒன்று இருந்தது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும் பட பட வென்று துடிக்க, ஆசிரியர் அந்தப் பேழையைத் திறந்தார். ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! உலக சிருஷ்டி காலத்தில் எழுதப்பட்ட ஏடு ஒன்று அந்தப் பேழையினுள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டவுடன் ஆசிரியர் தலைகால் தெரியா மல் துள்ளிக் குதிக்க முயற்சித்தார். ஆனல் அவ ருடைய காலில் மாட்டிக்கொண்ட ஒரு கயிறு அவர் முயற்சிக்கு முட்டுக் கட்டை போட்டுவிட்டது.

ஆசிரியர் தம் முகத்தில் புன்னகையும் புத் தொளியும் வீச கண்டெடுத்த ஏட்டுடன் நாற்காலியில் அமர்ந்தார். அதை ஒரு எழுத்து விடாமல் நான்கு தடவை படித்தார். தீபாவளி வருவதன் மூல காரணமே அந்த ஏட்டில் எழுதப்பட்டிருந்தது. அதிலுள்ள விஷயங்களை ஒன்று திரட்டி, உலகத்

தாரின் நன்மைக்காகவே ஒரு சிறு புத்தக ரூபத்தில் ஆசிரியர் வெளியிட்டுவிட்டார். இந்த ஆராய்ச்சி நூல் வேண்டிய இடங்களில், வேண்டிய சமயத்தில், வேண்டிய விலைக்குக் கிடைக்கப் பெறும். பொது மக்கள் யாவரும் இந் நூலை வாசித்துப் பயன் பெறு தலே, ஆசிரியரின் முதல் நோக்கமாகும். கடைசி நோக்கமும் அஃதேயாம்.

பதிப்பாசிரியர்

## நூற் பலன்

தீபாவளி இரகசியம் என்னும் இந் நூலில் முதல் ஐந்து வரிகளைப் படிப்பவர்கள், வைத்தியர் களால் உய்விக்க முடியாத ஒரு ஜீவனைக் கரை சேர்த்த பலனை அடைவார்கள்.

இதில் பத்தாவது வரி முதல் பதினேழாவது வரி வரை வாசிப்பவர்கள் சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கப் பெறுவார்கள்.

முதற் பக்கம் பூரா வையும் பார்த்தவர்கள் தங்கள் ஆயுள் காலம் முழுவதும் சிரஞ்சீவியாக உயிரோடு வாழ்வார்கள்.

எவரொருவர் இந்நூல் முழுவதையும் பிறருக்கு வாசித்துக் காட்டி ஒரு புட்டி தலைவலி மருந்தையும் தானம் கொடுக்கிறாரோ, அன்னவர் வெகு சீக்கிரத்தில் ஒரு கைதேர்ந்த மேடைப் பிரசங்கி ஆவார்.

நூற்பலன் முற்றிற்று.

உ

நரகாசுரன் துணை

# தீபாவளி இரகசிய மகாத்மியம்

கடவுள் துதி

பேராழி யுலகத்துப் பென்ஸில் கிடையாமல்
கூரான கொம்பொடித்த கணபதிக்கும்
புத்தகம் கிடையாமல் பொன் ஏடு கைக்கொண்ட
வித்தகன் தேவியர்க்கும் போற்றி போற்றியே!

## நூல் வரலாறு

ஜீவர்களின் முக்திக்கும் பகவானின் அருளுக்கும் இருப்பிடமாகிய ஸ்ரீ வைகுண்டத்திலே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர் ருக்மணி, பாமா சகிதராய் சர்ப்பா சயனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கெல்லாம் தரிசனம் தந்துகொண்டிருக்க, ரதபர்வதர் முதலான இருபத்தேழாயிரம் முனிவர்களும் பிரம்மா முதலான நாற்பத்தொன்பதினாயிரம் தேவர்களும் இன்னும் அநேகரும் எதிரே கூடியிருக்கிற தருணத்திலே, பகவானுடைய திருவுள்ளத்திலே மகா உன்னதமான ஒரு வருத்தம் உண்டாயிற்று. கங்கம், கலிங்கம், அடாகம், கராடம் என்னும் ஐம்பத்தாறு தேயங்களுக்கும் ஏகச் சக்ராதிபதியாக வீற்றிருந்து அரசாட்சி புரியும் தன் மாமனாராகிய பீம ராஜன் தன்னை ஒரு நாளைக்காவது தன் வீட்டுக்கு அழைத்துப் பலகார பக்ஷண வகையராக்களைக் கொடுத்து உபசரிக்கவில்லையே என்ற திருவுள்ளக்

கலக்கம் அவரை வெகுவாக வாட்டிவிட்டது. அவர் தன்னுடைய திருவதனத்தில் விசனக்குறியைக் காட்டிக்கொண்டிருந்த அதே சமயத்தில் ஒரு ஜவுளிக் கடைக்காரர் அவருடைய சன்னிதானத்தை அடைந்து "சுவாமி, நான் உம்மையே நம்பி இருக்கிறேன். என் கவலையைப் போக்குவது தங்கள் கடமை. வேஷ்டிகள், சீட்டிகள், துப்பட்டாக்கள் என் கடையில் மலை மலையாகக் குவிந்து கிடக்கின்றன. ஆனால் விற்பனையே கிடையாது. ஆடிக்கொரு புடவையும் அமாவாசைக்கொரு வேஷ்டியுமாகத்தான் வியாபாரம் நடக்கிறது. தங்கள் அனுக்ரகம் ஒன்று இருந்தால் வியாபாரம் நன்றாக ஆகும். வருஷத்தில் ஒரு நாளைக்காவது என் கடையில் துணிமணிகள் நன்றாக விலையானால் போதும். அன்றே ஒரு வருஷத்து லாபத்தையும் தேடிவிடுவேன். என் மீது கருணை காட்டவேண்டும். இச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயமும் சொல்லிக்கொள்கிறேன். நாளை என் வீட்டில் தங்களுக்கு நைவேத்தியத்திற்குப் போளி செய்யச் சொல்லியிருக்கிறேன். நான் போய் வருகிறேன்" என்றார். பகவானின் திருவுள்ளம் மலர்ந்துவிட்டது. "சரி பக்தா !, மகிழ்ந்தோம். உன் இஷ்டப்படியே உன் கடையில் வருஷத்தில் ஒருநாள் என்றுமில்லாதபடி வியாபாரம் நடக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தார்.

ஜவுளிக் கடைக்காரர் போனவுடன் ஒரு எண்ணெய் வியாபாரியும் பகவானிடம் வந்து தன்

செக்கில் ஆட்டிய எண்ணெய் குடம் குடமாக வீட்டில் இருக்கிறதென்று முறையிட்டார். பரந்தாமன் அவரையும் போகச் சொல்லிவிட்டு மறுபுறம் திரும்புவதற்குள் அங்கு வீற்றிருந்த முனிவர்களில் ஒருவர் பகவானருகில் ஓடோடி வந்து "கோபாலா! நான் தேவாமிர்தத்தை உண்டுவிட்ட காரணத் தினால், உயிரைவிட முடியாமல் தவியாகத் தவிக் கிறேன். இறந்து இறந்து பிறந்ததால் உம்மிடத்தில் புதுப் புதுவிதத்தில் பக்தி அதிகரிக்குமென்று நம்புகிறேன். என் எண்ணத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் தேவா!" என்று கெஞ்சினார். அதற்கும் சரி யென்று தன் திருமுடியை அசைத்தார் ஸ்ரீமன் நாராயணமூர்த்தி

பின்பு, சகலலோக காருண்யனான திருமாலான வர் சற்று ஆலோசித்துவிட்டு, எதிரிலுள்ளவர்களைப் பார்த்துச் சொன்னார்: "ஹே! மஹரிஷிகளே! தேவர்களே!! இப்போது நாம் நடத்த உத்தேசித் திருக்கும் திருவிளையாடல் உலகத்துக்கும், நமக்கும் நன்மையையே உண்டாக்கப்போகிறது.என்றாலும் சிற்சில காரணங்களை உத்தேசித்து இத் திரு விளையாடலின் இரகசியத்தைப் புராணங் களிலாவது இதிகாசங்களிலாவது ஒருவரும் எழுதி வைக்கக்கூடாதென்பது எனது கட்டளை. என் வார்த்தையை மீறி, யாராவது இதை எழுதி வைத்து பூவுலகத்தவருக்குத் தெரியப் படுத்துவார்களே யானால் அவ்வாறு எழுதியவர்கள் அந்தப் பூவுலகத் திலேயே எழுத்தாளராக ஆகக்கடவார்கள்" என்று

எச்சரிக்கை செய்தார். பின்பு யாவரும் போஜனத்துக்கு எழுந்தருளினார்கள்.

கிருஷ்ண பகவான் திருவாய் மலர்ந்தருளியதையெல்லாம் மண்டலவாண முனிவர் ஒன்றுவிடாமல் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தார். தான் ஏதாவது ஒரு தனிப் புராணம் எழுதி வைத்துத் தன் பெருமையை வருங்கால உலகத்தாருக்குக் காட்டிவிட வேண்டுமென்பது அவருடைய விருப்பம். பெயர் உலகத்தில் அடிபட வேண்டுமானல், ஏதாவது நூல் எழுத வேண்டுமென்ற அந்தரங்கத்தை அந்த முனிவர் அந்தக் காலத்திலேயே தெரிந்து கொண்டிருந்தார். எந்த விதமான கொடிய தண்டனை பெற்றாலும், இந்த தீபாவளித் திருவிளையாடலை எழுதாமல் விடுவதில்லை யென்று துணிந்து வைகுண்டத்தில் அது முதல் நடந்த சமாசாரங்களையெல்லாம் அவர் தன் நகத்தினாலேயே அரச இலைகளில் எழுதி முடித்தார்.

யுகப் பிரளய காலத்திலே, தான் எழுதிவைத்த அந்த இலைகளை அவர் பிரம்மாவின் சிரசிலே மறைத்து வைத்திருந்தார். பிரளயம் ஓய்ந்தவுடன் மண்டலவாண முனிவர் அந்த இலைகளைப் பத்திரமாக எடுத்துக் கொண்டு போய் பூவுலகத்தில் அரசு புரிந்து வந்த கயமுகராஜனிடம் சேர்ப்பித்து விட்டார். அவ்வரசன் அந்த இலைகளை வாங்கித் தன் சமஸ்தானக் கவி குரக்கிணியாரிடம் கொடுத்து அதற்குப் புதுப் பிரதி எழுதிக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டான். குரக்கிணியார் அவ்வாறே அந்த இலைகளில் எழுதப்பட்டிருந்த வரலாறுகளை

ஏடுகளில் எழுதி எங்கேயோ மறைத்து வைத்து விட்டுத் திடீரென்று வைகுண்ட பதவியை அடைந்து விட்டார்.

குரக்கிணியார் மறைத்து வைத்த அந்த ஏடுகள் தான் தற்சமயம் நமது ஆசிரியரால் கண்டுபிடிக்கப் பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவ்வளவு அருமை யாகப் போற்றப்பட்ட ஒரு நூலைத் தமிழ் நாட்டார் ஒரு இலக்கியமாகவே கருதித் தினமும் பாராயணம் பண்ணுவார்களென்பது ஆக்கியோரின் நம்பிக்கை. ஆசிரியரின் அடிப்படையான நோக்கமும் அதுவே!

## காதை வரலாறு

கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துக் கோபாலர்களைத் தேவேந்திரனுடைய கோபத் தினின்றும் காத்தருளிய எம்பெருமானனவர், மறு பிறவியை விரும்பிய தண்டலவராக முனிவரைத் தன் அருகில் அழைத்து, "கேளும், தண்டலவரா கரே! நீர் இப்பொழுதே இறக்கும்படி நாம் கிருபை செய்வோம். அடுத்த விநாடியில் நீர் பூலோகத்தில் நரகாசுரன் என்ற நாமத்துடன் பிறந்து, துர்க் கிருத்தியங்களையே உமது பிறவித் தொழிலாகக் கொண்டு தேவர்களையும், மனிதர்களையும் துன் புறுத்தக் கடவீர். முக்கியமாக எனக்கு விரோத மான காரியங்களையே நீர் செய்து வரவேண்டும். அப்போது நாம் பாமா சகிதம் எழுந்தருளி உம்மைக் கொல்வோம். நீர் நரகாசுரனக இறக்கும் தருணத்தில் ஒன்று சொல்ல வேண்டும். அதாவது

'நான் இறந்த தினத்தை இந்த உலகத்திலுள்ள வர்கள் எல்லோரும் ஓர் சுபதினமாகக் கொண்டாட வேண்டும். அன்று யாவரும் எண்ணெ ஸ்நானம் செய்து, கோடி வஸ்திரங்களை அணிந்து, நிறையப் பலகார பக்ஷணங்களைச் சாப்பிட வேண்டும். அன்று மாமனார்கள் யாவரும், தங்கள் தங்கள் மாப்பிள்ளைகளைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து உபசரிக்கவேண்டும்' என்ற வார்த்தைகளைப் பிசகில்லாமல் சொல்லிவிட்டே நீர் உயிரைவிட வேண்டும். மறந்துவிடக் கூடாது'' என்று ஆக்ஞா பித்தார்.

பிறகு பகவானனவர், தேவேந்திரனையும் நார தரையும், கூப்பிட்டு விட்டார். "நாரதரே, நீர் கலகமே இல்லாமல் திண்டாடுகிறீரல்லவா! அதற்கு ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறேன். நீர் தேவேந்திரனிடமிருந்து ஒரு பாரிஜாத புஷ்பத்தை வாங்கிக் கொண்டுவந்து ருக்மணி, பாமா இருவருக்குள்ளும் கலக மூட்டி விடலாம். கலகம் முற்றும் சமயத்தில் தேவேந்திரா, நீ என்னி டம் ஓடி வந்து, நரகாசுரனைக் கொல்லும்படி வேண்டிக்கொள்ள வேண்டும்'' என்று அவர் களுக்கு கட்டளையிட்டு அனுப்பிவிட்டார்.

மறுநாள் காலையில் அவரிடம் வந்த ஜவுளி வியாபாரியிடமும், எண்ணெ வியாபாரியிடமும் ''நீங்கள் கேட்டுக் கொண்டபடி ஒருநாள், அதாவது நான் நரகாசுரனைக் கொல்லும் தினத்தன்று உங்கள் சரக்குகள் என்றுமில்லாதபடி விலையாகும்.

அந்த நாளைப் பிரதி வருஷமும் ஜனங்கள் 'தீபாவளிப் பண்டிகை' என்று கொண்டாடுவார்கள். ஆகையால் நீங்கள் கவலையை விட்டுவிடலாம்" என்று அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டி அனுப்பி விட்டார். வியாபாரிகள் மிகவும் குதூகலத்துடன் தம் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

## முடிவுரை

வாசகர்களே! இதற்குப் பின் நரகாசுரன் வதை நடந்த கதையும் கிருஷ்ணன், தீபாவளி தோறும் தன் மாமனார் வீட்டில் போய் இறங்கு வதையும் நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். ஆகையால் கதையை இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டி யிருக்கிறது. பரமாத்மாவின் இரகசியங் களை நான் பகிரங்கமாக வெளியிட்டு விட்டே னென்று அவருக்குத் தெரியாம லிருக்க வேண்டும். இதுவே என் வேண்டுகோள்!

தீபாவளி இரகசியம் முற்றிற்று

ஓம் தத்ஸத்!

# கார்விடு தூது

"உங்களைப் போல முதலாளிங்க, மோட்டார்க் காரு இல்லாம இருக்க முடியாதுங்க" என்று என் வேலைக்காரப் பையன் அடிக்கடி தொந்தரவு செய்ததை உத்தேசித்து நான் ஒரு பழைய பிளஷர் காரை மிகக் குறைந்த விலைக்கு வாங்கிவிட்டேன். அதன் விலை அறைப் பைசாக் கலங்களிலும் கூட இருப்பதனால், அதைச் சொல்லாமலே விட்டு விடுகிறேன்.

நான் காரை விலைக்கு வாங்கியபோது, அதிலுள்ள பெட்ரோலைத் தவிர, மற்ற எல்லாம் புதிதாகவே தோன்றியது. ஆனால் நாலைந்து நாள் அனுபவத்தில், அதன் மேல் பூசப்பட்டிருந்த வர்ணம் மட்டும் புதியது என்று தெரியவந்தது.

காரை ஓட்டுவதற்கு ஒரு டிரைவர் அவசியமென்று எனக்குப் பட்டது. ஒரு டிரைவரைத் தேடிப் பிடித்தேன். நான் அவனை நிரந்தரமாக வைத்துக் கொண்டு சம்பளம் கொடுக்க விரும்பவில்லை. அவன் மூலமாகக் கார் ஓட்டும் வித்தையைக் கற்றுக்கொண்டு அவனை நீக்கிவிடுவதென்ற தீர்மானத்துடன், அந்த டிரைவரை நியமித்தேன்.

ஆனால் இரண்டு வாரத்திற்குள், அவனே தன் வேலையை ராஜிநாமாச் செய்து விட்டுப் போய் விட்டான்.

சொந்தக் கார் வைத்திருப்பவர்கள், டிரைவரை அமர்த்தியிருப்பதன் ரகசியம் எனக்கு அப்போது தான் விளங்கிற்று. கார்கள், தங்கள் சுபாவப்படி, நடுவழியில் திடீர் திடீரென்று நின்று விடுமல்லவா! அந்தச் சந்தர்ப்பங்களில் டிரைவர் என்ற ஒரு அப் பிராணி இருந்தால்தானே, சொந்தக்காரர் காரை விட்டுக் கீழே இறங்கி, "அப்பா டிரைவர், நான் வாடகை பஸ்ஸில் போய் விடுகிறேன்; நீ காரை வீட்டுக்குக் கொண்டு வா" என்று சொல்லிவிட்டுப் போய்விடலாம்? டிரைவர் இல்லாவிட்டால், கார் நின்று போனவுடன் சொந்தக்கார ரல்லவா காரைத் தள்ளிக் கொண்டு வரவேண்டி யிருக்கும்?

என் கார் விஷயத்தில் இம்மாதிரியான சந்தர்ப் பம் ஏற்படவேயில்லை. ஏனென்றால், நான் அதை வாங்கின ஏழாவது நாளே, அது ஷெட்டை விட்டுக் கிளம்ப மறுத்து விட்டது. அதற்குச் செலவாகும் பெட்ரோல் கூட மிச்சமாயிற்று, என்று நான் சந் தோஷமடைந்தேன். இது மட்டுமல்ல. கார் வாங் கினதிலிருந்து நான் இன்னொரு தத்துவத்தையும் கூட எளிதில் தெரிந்து கொண்டேன். காரை நான் என்று வாங்கினேனோ, அன்றே சனி பகவானின் கிருபை என் மீது விழுந்து விட்டது என்பதை, நான் ஜோஸியரைக் கேளாமலே, அறிய முடிந்தது. இந் தக் கிரகம் என்னை விட்டு விலகும் காலத்தையும் ஒருவாறு யூகிக்க முடிந்தது. என்றைக்கு இந்தக்

கார் என்னை விட்டுப் போகிறதோ, அன்றைக்கே சனீச்வரனும் என்னை விட்டு விடுவாரென்று தானே அர்த்தம்? காரைத் தள்ளி விடுவதற்காகத் தீவிர முயற்சிகள் பண்ணினேன்.

சக்கரங்களே இல்லாத மோட்டார்க் கார்களைக் கூட விலை பேசி முடித்துவிடக் கூடிய கைதேர்ந்த மோட்டார்த் தரகர்களைப் பிடித்தேன். என்ன பயன்? என் கார் ஒன்றினாலேயே தங்களுடைய சாமர்த்தியத்திற்கு ஒரு அபகீர்த்தி ஏற்பட்டு விட்ட தென்று அவர்கள் என்னிடம் ஒப்புக் கொண் டார்கள்.

இது இவ்வாறிருக்க, நான் ஒரு வாரம் என் காரில் சவாரி போன காரணத்தினால் ஊரில் எல் லோரும் என்னைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட் டார்கள். என் பெயர் ஊரிலுள்ள அத்தனை பேருக் கும் தெரிந்து விட்டது. பெயர் தெரியாவிட்டாலும், "ஓட்டை மோட்டார் ஆசாமி" என்று என்னை அடையாளம் கண்டு பிடித்து விடுவார்கள்.

இந்தக் கேவலத்தை எவ்வளவு நாள்தான் சகித்துக் கொண்டிருப்பது? சுய முயற்சியில் இறங் கினேன். காரை விற்பதற்காகப் பல பிரயத்த னங்கள் செய்தேன். முதலில் மேட்டுத் தெருவில் மேல் கோடி வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டேன். எங்கள் ஊருக்குப் புதிதாக ஒரு உத்தியோகஸ்தர் வந்து சேர்ந்தார். அவரைப் போய்ப் பார்த்து அவரோடு நானே வலுவாக சிநேகம் செய்து கொண்டேன். அவருடைய மகள்

சுந்தரியும் அடிக்கடி எங்கள் பேச்சில் கலந்து கொள்வாள். தமிழ்ச் சினிமாக் கலையைப் பற்றி அவரிடம் மணிக் கணக்காகப் பேசிக் கொண்டிருப்பேன். அந்த சிநேகிதருடைய மைத்துனர் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரர் ஒரு தமிழ்ப் படத்தில் தற்செயலாக விழுந்து விட்டதாக ஒரு சமயம் அவர் என்னிடம் சொல்லியிருந்தார். சுருங்கச் சொன்னால், உளுந்து முதல் உலக மகா யுத்தம் வரை ஒவ்வொன்றையும் பற்றி அவரிடம் நான் அடித்து விளாசியிருக்கிறேன். பழைய கார்களின் மகிமைகளைப் பற்றி சந்தர்ப்பங்கள் வரும் போதெல்லாம் சொல்லி வைத்தேன். அந்தச் சமயங்களிலெல்லாம் சுந்தரி தங்களுக்கும் ஒரு கார் வாங்க வேண்டுமென்று தன் அப்பாவிடம் சொல்லிவந்தாள். என் முயற்சி பலித்துக் கொண்டு வந்தது.

ஒரு நாள் என்னுடைய காரைப்பற்றி நானே பிரஸ்தாபித்து விட்டேன். அவரும் சுந்தரியும் காரை வந்து பார்த்தார்கள். காரைப் பார்த்தவுடனேயே அவர் சிரித்தார். சுந்தரி, "அப்பா நீங்கள் சொன்னீர்களே, அந்தக் கார் மாதிரியே......." என்று ஏதோ ஆரம்பித்தாள். அதற்குள்ளாக அவர், "அப்புறம் சொல்றேன் அம்மா" என்று அவளுடைய பேச்சைத் தடுத்து விட்டார். நான் காருக்கு ஒரே விலை முப்பத்தி ரெண்டரை ரூபாய் என்று தீர்த்து விட்டேன். வாசகர்களே, அவசரப் படாதீர்கள்! ரூபாய் கைக்கு வரவில்லை. அந்த ஆசாமி காரை ஓட்டிப் பார்க்க வேண்டுமென்றார். நான் அதற்கு ஒரு நாள் குறிப்பிட்டேன்.

குறிப்பிட்ட நாள் வந்தது. அந்தக் காரை என்னிடம் விற்றவன், அதிலுள்ள யந்திரங்களை எப்படியெப்படியெல்லாம் கட்டி வைத்திருந்தானோ அப்படியே அவைகளைக் கட்டி வைத்தேன். இரண்டு மூன்று ஆட்களை விட்டுக் காரை ஷெட்டிலிருந்து தெருவுக்குத் தள்ளிக் கொண்டு வரச் சொன்னேன். ஒரு டிரைவரைக் கொண்டு விடா முயற்சி செய்து காரை ஸ்டார்ட் பண்ணச் சொன்னேன். இயந்திரம் 'கர் கர்' என ஆரம்பித்தவுடன் அந்த சிநேகிதருக்கு அவசரமாக ஆள் அனுப்பினேன். அவர் வந்து சேர்வதற்குள் இயந்திரம் ஓய்ந்து நின்று விட்டது. அந்த எக்கச் சக்கமான நிலைமையைச் சமாளிப்பதற்காக அவரை என் வீட்டுத் தோட்டத்தைப் பார்ப்பதற்கென்று தோட்டத்துப் பக்கமாகக் கூட்டிக் கொண்டு போய் விட்டேன். ஒரு மணி நேரம் வரை அங்கேயே குறும்பூர்க் கத்திரிக்காயின் குணதிசயங்களைப் பற்றி அவரோடு பேசிக் கொண்டிருந்தேன். வெளியே 'டபார், டபார்' என்று சப்தம் கேட்டது. அன்றைக்கு மாத்திரம் வேலைக்கு அமர்த்தப்பட்ட டிரைவர் என் காரை 'ஸ்டார்ட்' செய்து விட்டான் என்று தெரிந்து கொண்டேன். "காரில் ஏறிப் பார்ப்போமா?" என்று, அவரை வெளியே காரின் பக்கம் அழைத்துக் கொண்டு வந்தேன். கார் போடும் சப்தத்தை மறைப்பதற்காக, அவரோடு கூப்பாடு போட்டுப் பேசினேன். அவர் பேசுவதற்கு இடம் கொடுக்காதபடி நானே பேசிப் பேசி அவரைக் காரில் உட்காரும்படி செய்தேன். உடனே சக்கரங்களுக்கடியில் வைக்கப்பட்டிருந்த

செங்கல்களைச் சுப்பன் ஒருவருக்கும் தெரியாமல் எடுத்து வீசி விட்டான். கார் ஒட்டக நடையில் பள்ளத் தெருவை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

சிறிது தூரத்திலிருந்த அவர் வீடு வந்ததும் "டிரைவர், காரை நிறுத்து" என்று இறைந்து கத்தினேன். அவனும் பிரேக் போட்டு நிறுத்துவது போலப் பாசாங்கு செய்தான். அதற்குள்ளாகப் பின்னாலேயே வந்து கொண்டிருந்த என் வேலைக்காரப் பையன் முதலியோர் காரை இழுத்துப் பிடித்து நிறுத்திப் பின் சக்கரங்களுக்கடியில் அடையும் கொடுத்துவிட்டார்கள். இதெல்லாம் நான் முன் கூட்டியே சொல்லிவைத்திருந்த ஏற்பாடுகள். அந்த ஆசாமி காரின் ஓட்டத்தைப் பற்றிச் சந்தேகப்பட்டவராகவே தோன்றவில்லை. கார் நின்றதும் இருவரும் இறங்கி அவருடைய வீட்டுக்குள் சென்றோம். நான் அவரோடு பேசிக் கொண்டிருக்கும் போதே, டிரைவரும் வேலைக்காரனும் காரை அவர் வீட்டுத் தோட்டத்தினுள் தள்ளிக் கொண்டு போய் நிறுத்தி விட்டுப் போய்விட்டார்கள். நாங்களிருவரும் வெகு நேரம் வரை, காரைப் பற்றியாவது, பணத்தைப் பற்றியாவது பேசவே இல்லை. அவராகக் கொடுப்பாரென்று அவரை எவ்வளவோ முகஸ்துதி செய்து பார்த்தேன். ரூபாய் கிளம்பும் வழியைக் காணோம். "இந்தக் காரை வாங்கின அதிர்ஷ்டம் உங்கள் வீட்டில் சீக்கிரம் கலியாணம் காட்சியெல்லாம் நடக்கும், சார்" என்றேன். "நானும் அதைப் பற்றித்தான் யோசனை

பண்ணிக்கொண்டிருக்கிறேன் " என்று சொல்லிக் கொண்டிருந்தவர், சிரிப்பை அடக்க முடியாமல் என் கையைப் பிடித்து இழுத்து முப்பத்திரண்டரை ரூபாயையும் என் கையில் கொடுத்து, " காரின் கிரயம் கொடுத்து விட்டேன். ஆனால் கார் உங்களிடமே தான் இருக்கவேண்டும் " என்றார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை ஏமாந்தவர் போல நடித்த அவருடைய உண்மையான சுபாவம் அப்பொழுது தான் எனக்குத் தெரியவந்தது. அவரிடம் நான் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க மனமில்லா விட்டாலும் சம்பிரதாயத்தை உத்தேசித்து, " அப்படி வேண்டாம் சார்! பணம் இந்தாருங்கள்" என்று நீட்டினேன். அவரோ விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டு " இல்லை சார், காருக்குப் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள். அப்படியானால் தான் நீங்கள் சொல்லியது போல், என் வீட்டில் கூடிய சீக்கிரம் ஒரு கலியாணம் நடக்கும் " என்றார். அதே சமயம் கதவோரத்தில் நின்று கொண்டிருந்த சுந்தரி 'களுக்'கென்று சிரித்து விட்டு ஓடினாள்.

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே" என்றேன். " உங்கள் ஜாதகம் இருந்தால் கொண்டு வாருங்கள் சார். ஜாதகம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. சுந்தரியை உங்களுக்கே கல்யாணம் செய்து கொடுக்க நிச்சயித்து விட்டேன். நீங்கள் அன்று உங்கள் மோட்டாரைக் காட்டிய தினத்திலிருந்தே உங்களைப் பற்றிய முழு விவரங்

களையும் தெரிந்து கொண்டேன் சார். நீங்கள் திறமைசாலி தான்'' என்றார்.

அவர் இப்படிச் சொன்னது எனக்கு இன்னும் திகைப்பாக இருந்தது. ''திகைக்காதேயுங்கள், மிஸ்டர், நான் சுந்தரியின் தாயாரை—அதாவது என் வீட்டம்மாளை எப்படிக் கலியாணம் செய்து கொண்டேன் தெரியுமா?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார் அவர்.

''எனக்குத் தெரியாதே!'' என்றேன்.

''இதே காரை, ஒரு காலத்தில் என் மாமனார் வைத்திருந்தார் சார்!''

''அப்படியா?''

''ஆச்சரியப் படாதீர்கள்! அதற்கு அத்தாட்சி அந்தக் காரிலேயே இருக்கிறது.''

''ரொம்ப அதிசயமாக இருக்கிறதே! அதிருக்கட்டும். அதற்கும் உங்கள் கலியாணத்திற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?''

''அதைத்தான் சார் சொல்ல வருகிறேன். என் மாமனார் ஒரு வேடிக்கைப் பேர்வழி. அவர் மகளைக் கலியாணம் செய்து கொள்ள நான்கு பேர் போட்டியிட்டோம். தன்னிடமிருந்த இந்தக் காரை யார் விற்றுத் தருகிறார்களோ அவருக்கே தன் பெண்ணைக் கொடுப்பதாகச் சொல்லி விட்டார் அவர்.''

''இது எத்தனை வருஷத்திற்கு முன் நடந்தது?''

"இருபது வருஷத்திற்கு முன் நடந்தது. அப்போது இந்தக் கார் இப்போதிருப்பதைவிடக் கொஞ்சம் நன்றாக இருந்தது. ஆட்கள் தள்ளாமலே சில மைல்கள் போகும். பின்னுலிருந்து இழுக்காமலே நின்று விடும். அந்த நிலைமையில் நான் சென்னை மாகாணம் முழுதும் அலைந்து இதை ஒரு சோணகிரியிடம் நூற்றைம்பது ரூபாய்க்குத் தள்ளி விட்டேன் சார்."

"நூற்றைம்பதுக்கா?"

"ஆமாம் சார்! ஆமாம்! மாமனுருக்கு ஒரே ஆனந்தம். இப்படிப்பட்ட சாமர்த்தியசாலி தனக்கு மருமகனைக் கிடைத்ததைப் பற்றி எல்லோரிடத்திலும் இப்போதும் பெருமை யடித்துக் கொள்வார். காரை விற்பதற்கு நீங்கள் என்னை விட சாமர்த்திய மான தந்திரங்களையெல்லாம் கையாண்டிருக்கிறீர்கள். மேலும் இதை என்னிடமே விற்று விட்டீர்கள் சார். அதனுல் சுந்தரியை உங்களுக்கே மணம் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கிறேன்" என்று முடித்தார்.

"கார் யாரிடமிருப்பது?" என்று ஒரு கேள்வியை மெதுவாக எடுத்து விட்டேன்.

"இங்கு ஆறு மாதம், அங்கு ஆறு மாதமாக இருக்கட்டும்" என்றார்.

கார் உங்களுடையதாகத் தானே கருதப்பட வேண்டும்?"

"ஆமாம். நான் அதை உங்களிடமிருந்து வாங்கிய பிறகு, அது எனக்குத் தானே சொந்தம்? ஆனால், அதை உங்களுக்குக் கொடுக்கப்போகும் ஸ்ரீதனச் சொத்துக்களில் ஒன்றாகச் சேர்த்து விட்டேன்."

"சரி அப்படியே இருக்கட்டும். உங்கள் கலியாணத்திற்கும் என் கலியாணத்திற்கும் தூதாக இருந்த அந்தக் கார் என்னிடமே இருக்கட்டும், மாமா" என்று நாசூக்காகச் சொல்லி வைத்தேன்.

"ரொம்ப சந்தோஷம். கலியாண ஏற்பாடுகள் சீக்கிரம் நடக்க வேண்டும்" என்றார் அவர். நான் எதிர்பாராத இந்த அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

சுபயோக சுப முகூர்த்தத்தில் நான் சுந்தரியை மணந்து கொண்டேன். ஸ்ரீதனப் பொருள்களோடு காரும் பழையபடி என் வீட்டு ஷெட்டிற்கே வந்து விட்டது. சில காலத்திற்குப் பின் இரும்புக்கு அதிகக் கிராக்கி ஏற்பட்டது. துருப்பிடித்துப் போகும் அந்தக் காரை எப்படியாவது விற்று விடத் தீர்மானித்தேன். ஒரு இரும்பு வியாபாரியைக் கூட்டிக் கொண்டு வந்து, காரிலுள்ள இரும்பை விலைக்கு எடுத்துக் கொள்ளும்படி சொன்னேன். அந்த வியாபாரி காரின் ஒவ்வொரு பாகத்தையும் தட்டிப் பார்த்து விட்டு, "இது உருக்கு, இது ரப்பர், இது மரம், இதனுள் முழுதும் மண்,மேலே பூசியிருப்பது வார்னீஷ்" என்று கழித்து விட்டு, "இதில் மொத்தம் நாலு வீசை கழிவு இரும்பு இருக்கும்.

வீசை ரெண்டரை அணு வீதம் பத்தணுத் தருகி றேன்'' என்றான்.

போய்த் தொலைகிறது. பத்தணுவுக்காவது காரைத் தள்ளி விட்டு விடலாம் என்று திருப்தி யடைந்தேன். ஆனல் அவன், கார் முழுவதையும் கொண்டு போக மறுத்து விட்டான். இரும்பை மட்டும் எடுத்துக் கொண்டு, மற்றப் பாகங்களை அங்கேயே போட்டு விட்டுப் போய் விடுவதாகப் பயமுறுத்தினன். நான் அவைகளை எங்கே கொண்டு போய்ப் போடுவது? ஆகையால் அவனைப் போகச் சொல்லி விட்டு காரை ஷெட்டுக்குள்ளேயே தள்ளிப் பூட்டி வைத்தேன்.

ஒரு நாள் நள்ளிரவு. மோட்டார்த் திருடர்கள் இருவர்—அயலூர் வாசிகளாகத் தானிருக்க வேண் டும்—என் கார் ஷெட்டைத் திறந்து கொண்டிருந் தார்கள். நான் இதை மாடியில் இருந்த படியே ஜன்னல் வழியாகக் கவனித்துக் கொண்டிருந் தேன். அவர்கள் காரை வெளியே தள்ளிக் கொண்டுவந்து, தாங்கள் கொண்டு வந்திருந்த பெட் ரோலை அதற்குள் ஊற்றினர்கள். பிறகு அவர்கள் காரை 'ஸ்டார்ட்' பண்ணப் பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள். பலிக்கவில்லை. கொஞ்ச தூரம் தள்ளிக் கொண்டு போய்ப் பார்த்தார்கள். அது வும் பயனில்லை. அப்படியே பெட்ரோலோடு காரை நடுவழியில் விட்டு விட்டுப் போய் விட்டார்கள்.

அன்று முதல் நான் கார் ஷெட்டைப் பூட்டு வதே கிடையாது. ஆனலும் என்ன? கார் நின்ற

இடத்தை விட்டு அசையவேயில்லை. எனக்கு இதைப் பற்றி ஒரே கவலையாகப் போய் விட்டது. ஒரு நாள் சுந்தரியிடம் இதைச் சொல்லி வருத்தப் பட்டேன்.

அதற்கு அவள், “காரை நாம் விற்பானேன்? நமக்கு ஒரு பெண் பிறந்தால், அதற்கு வரக்கூடிய மாப்பிள்ளையின் சாமர்த்தியத்தைத் தெரிந்து கொள்ள இந்தக் கார் இருக்கட்டுமே” என்றாள். அது சரியென்றே எனக்குப் பட்டது! ஆகையால் அந்தக் காரை ஷெட்டிலேயே இன்னும் பத்திர மாக நிறுத்தி வைத்திருக்கிறேன்.

# இல்லறமும் துறவறமும்

ஆண்டிகள் கூடினல் மடம் கட்டத்தானே யோசனை செய்வார்கள்! அந்த ஆண்டிகளுள் ஒருவரான பழனிப் பண்டாரம் மட்டிலும் இந்த அபிப்பிராயத்திற்கு மாறுபட்டிருந்தார். சத்திரங்களும், சாவடிகளும் நிறைந்திருக்கும்போது மடத்தையும் கட்ட நினைப்பானேன் என்பது அவர் ஆராய்ந்தறிந்த அரிய சித்தாந்தம். இந்த சித்தாந்தத்தை யுடைய பழனிப் பண்டாரம் மற்ற ஆண்டிப்பண்டாரங்களோடு கூடுவதே இல்லை. திருவோடு உண்டு; அவர் உண்டு. பகவானுடைய திருவடிகளைப்பற்றிக் கூட அவருக்குக் கவலை கிடையாது.

பழனிப் பண்டாரம் ஒரு இளம் சாமியார். பஞ்சத்துக்காக ஆண்டி ஆனவரல்ல அவர். பரம்பரையாகவே ஆண்டிதான். வேஷ்டி கட்டத் தெரிந்த நாள் முதலாக அவர் காவி வேஷ்டிதான் கட்டிவந்தார். காவி வஸ்திரத்தின் உதவியினல் அவர் சிறுவயதிலேயே, ரயில் சென்ற இடங்களெல்லாம் பிரயாணம் செய்து பல ஸ்தலங்களையும் தரிசித்துவிட்டார்.

சிறு பிராயத்திலிருந்தே துறவறத்தில் இருந்து வந்ததால் பழனிப் பண்டாரத்துக்கு அந்த வாழ்க்

கையில் வரவர சலிப்பு ஏற்பட்டு வந்தது. பொழுது விடிந்தால் யாசகம்! பொழுதடைந்தால் தூக்கம்! இப்படியே இருபத்தைந்து வயது வரை வாழ்க்கை நடத்திவந்த ஒருவருக்கு அதில் சலிப்பு ஏற்படாமலிருக்குமா?

ஒரு நாள் அவர் எங்கோ கிடைத்த ஒரு கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தார். நீண்டு அடர்ந்து கறுகறு வென்று வளர்ந்திருந்த தாடியும், சடை முடிகளும் ருத்திராட்சமும், தன்னுடைய அற்புதமான ரூப செளந்தர்யத்தை மறைத்துக் கொண்டிருப்பது போல அவருக்குத் தோன்றியது. சடை இருக்குமிடத்தில் ' கிராப் ' பும், தாடியிருக்குமிடத்தில், ' ஸ்நோ ' தடவிய வழவழப்பான கன்னமும் இருந்தால்! என்று ஒரு கணம் அவர் கற்பனை செய்தார். என்ன வென்று சொல்ல முடியாத ஒரு இன்ப உணர்ச்சி அவருடைய மனக்குதிரையின் முதுகில் சவுக்குகொண்டு அடித்தது. நேராக ஒரு சலூனுக்குப் போய், தாடி—மீசை எல்லாவற்றையும் களைந்துவிட்டு நவ நாகரீக இளைஞனாக மாறிவிட எண்ணினர். புது மோஸ்தரில் திரும்பி விட்டால், அப்புறம் இருக்கவே இருக்கிறது காதல்! அதன் பின் கலியாணம்! இவ்விதமாகச் சென்று கொண்டிருந்தது அவருடைய எதிர்கால வாழ்க்கைக் கற்பனை.

துறவறத்திலிருந்து இல்லறத்திற்குத் தாவுவதென்றால் பொருளாதாரம் வேண்டுமே! இந்தக் கவலை அவருடைய மனதைப் பலமாகத் தாக்கியது. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லவே இல்லை"

என்று திருவள்ளுவர் நன்ருகப் பாடி வைத்து விட்டாரே! அதற்கென்ன செய்வது? 'பொருளைத் தேடிக் கொண்டு இல்லறத்தில் இறங்குவதா? அல்லது இல்லறத்திற்கு வந்தபின் பொருள் தேடுவதா?' என்ற பிரச்னையில் அவர் மனம் ஒருமணி நேரமாக அலைகடல் துரும்பு போலத் தத்தளித்தது. கடைசியில் அந்தக் குழப்பத்திற்கும் ஒரு முடிவு கட்டி விட்டார். பொருள் தேடிய பிறகுதான் இல்லற வாழ்க்கையில் புகுவதென்று தீர்மானித்தார். தீர்மானம் லேசாக ஆகிவிட்டது. ஆனல் பொருள் தேட ஏதாவது ஒரு வழி வேண்டும். கோவிலில் கொடுக்கும் கட்டிச் சாதத்தையே நம்பியிருந்த பழனிப் பண்டாரத்திற்கு அந்தச் சாதத்தை உடைத்துத் தின்னும் தொழிலைத் தவிர வேறு ஒரு தொழிலும் தெரியாது. ஏதாவது வியாபாரம் செய்யலாம். அதற்கு முதல் வேண்டும்! ஆகையால் அதுவும் சரியில்லை!

கோவிலிலேயே பழகிப்போன அவருக்குக் கோவில்கள் மூலமாகவே பணம் சம்பாத்தியம் பண்ண திடீரென்று ஒரு வழி தோன்றியது. சடையை உதறி முடித்துக் கொண்டு கிளம்பினர் பழனிப் பண்டாரம். கண்கண்ட இடங்களெல்லாம் பார்த்துக்கொண்டே கால் சென்ற இடமெல்லாம் நடந்தார். அவர் போன ஊர்களிலுள்ள ஒவ்வொரு கோவிலையும் வலது புறமாகவோ இடது புறமாகவோ ஒரு தடவை சுற்றி விட்டுத்தான் போனர். அவர் எதிர் பார்த்த நிலைமையில் ஒரு கோவிலாவது அகப்படவில்லை.

முன் பின் தெரியாத எட்டு ஊர்களைச் சுற்றியும் அவர் தன் லக்ஷியத்தை அடைய முடியவில்லை. இதனால் மிகவும் சோர்வடைந்த பழனிப் பண்டாரம்—ஒரு தமிழ் நாட்டு இளம் எழுத்தாளன் நிலைமையில் ஒரு திண்ணையில் உட்கார்ந்து கொண்டு—இம்முயற்சியைத் தொடலாமா; விட்டு விடலாமா? என்னும் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கி விட்டார்.

சிலருக்குப் பேனாக் கட்டையைக் கடித்தால் தான் கற்பனை ஊற்றெடுக்குமாம். பழனிப் பண்டாரத்திற்கு அப்படியில்லை. காதில் சொருகி வைத்திருந்த பீடிக் கட்டையைக் கடித்த உடனேயே அவருக்குக் கற்பனை வெள்ளம் கரைபுரண்டோட ஆரம்பித்தது. அவருடைய வாயிலிருந்து 'குபு குபு' என்று வந்துகொண்டிருந்த புகைச்சுழலிலேயே அவர் தனது எதிர்கால வாழ்க்கையைச் சித்தரித்து மகிழ்ந்து கொண்டிருந்தார். தங்கவிக்ரகம் போன்ற ஒரு மனைவி; கைதேர்ந்த சிற்பியால் கட்டப்பட்ட ஒரு அழகான வீடு; அதன் முன்னும் பின்னும் பூத்துக் குலுங்கும் ஒரு தோட்டம்; உல்லாசமாகச் செல்வதற்கு ஒரு மாட்டுவண்டி; இல்லை இல்லை........ மோட்டார்! இத்தியாதி ஸ்தாவர ஜங்கம பொருள்களெல்லாம் பழனிப் பண்டாரத்தின் மனதில் புரண்டோடிய கற்பனை வெள்ளத்தில் மிதந்து வந்து கொண்டிருந்தன.

பீடிக்கட்டையின் நுனியிலிருந்து நெருப்பு அவருடைய உதடுகளைத் தாக்க ஆரம்பித்தவுடன் அவர் சுய உணர்வை அடைந்து துள்ளிக் குதித்து

மறுபடியும் உட்கார்ந்தார். இனி என்ன செய்வது? என்ற கவலை மறுபடியும் அவரைப் பிடித்துக் கொண்டது. தான் கற்பனையில் கண்டு மகிழ்ந்த எதிர்கால இன்ப வாழ்க்கைக்கு அஸ்திவாரமாக இருக்கப்போகும் ஒரு பாழடைந்த கோவிலைக் காண முடியாமல் அவர் தவித்தார்.

பழனிப் பண்டாரம் தவித்துக் கொண்டிருக்கும் இதே சமயத்தில் அவரெதிரே ஒரு சம்பவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அவரைப்போலவே சகல அம்சங்களும் பொருந்திய ஒரு பரதேசி (எதிர் கால வாழ்க்கையைப் பற்றிக் கவலை கொண்டவ ரல்ல) தன் திருவோட்டைக் கையிலேந்தி, வாசல் வாசலாக நுழைந்து "போ! போ!!" என்ற ஒரே பதிலைப்பெற்று திரும்பிக் கொண்டிருந்தார். அந்தப் பரதேசி ஆறு எதிர் ஸ்தலங்களிலிருந்து இவ்வாறு பின்வாங்குவதைப் பழனிப் பண்டாரம் கவனித்துக் கொண்டிருந்தார். பரதேசியோ, சிறிதாவது மனத்தளர்ச்சி யடையாமல் ஏழாவது போரரங்கத்திலும் கால் வைத்தார். அங்கும் அதே விதமான எதிர்த்தாக்குதல்! பழையபடி வெற்றிகர மான தோல்வியுடன் பின்வாங்கினுர் பரதேசி.

எட்டாவது வீடு மிகப் பெரிய வீடு. அழகான வீடும்கூட. அந்த வீட்டுத் தெருவாசலுக்குள் நுழையும்போதே, பரதேசி தன் முழு பலத்தையும் உபயோகித்து "அம்மா, பிச்சை" என்று கத்தினுர். அதே அளவு பலத்த குரலுடன் "வேலையா இருக்கு போ! போ!!" என்று வந்த பதில் பரதேசியின்

காதுகளிலும் தூரத்திலிருந்த பழனிப் பண்டாரத்தின் காதுகளிலும், ஒரு வெடிகுண்டு போலத் தாக்கியது. பரதேசி உயிர்ச் சேதமோ பொருள் சேதமோ அன்னியில், நிலைகுலையாமல் அங்கிருந்து வாபஸ் ஆகி ஒன்பதாவது வீட்டு வாசலை அடைந்தார். அந்த வீட்டினுள் அப்பொழுதுதான் மாமியாருக்கும் மருமகளுக்கும் வார்த்தைப்போர் நடந்து கொண்டிருந்தது.

பரதேசி அதை லக்ஷியம் பண்ணுமல் "அம்மா, பிச்சை" என்று ஒரு அலறு அலறினர். தன் மருமகளை மீறி ஒரு காரியமாவது அப்பொழுது செய்துவிடத் தீர்மானித்திருந்த அந்த வீட்டு மாமியாரம்மாள் பர பர வென்று உள்ளே போய் ஒருபிடி அரிசி எடுத்துக் கொண்டு வந்து பரதேசியின் பிச்சைப் பாத்திரத்தில் போட்டுவிட்டுத் தன் வெற்றிக் கொடியை நிலை நிறுத்தினுள்.

பரதேசியின் திருவோட்டில் அரிசி யிருந்ததோ இல்லையோ பழனிப் பண்டாரத்தின் மூளை சாட்டையில்லாப் பம்பரம்போல் 'கிர்' ரென்று சுழலைத் தொடங்கியது. "எட்டு முறை தோல்வி; ஒன்பதாம்முறை வெற்றி; நாமும் எட்டு ஊர்கள் சுற்றிப் பார்த்துத் தோல்வி யடைந்தோம். ஒன்பதாவது ஊரில் நமக்கும் ஏன் வெற்றி கிடைக்கக்கூடாது? ஏன் கிடைக்கக்கூடாது?" என்ற கேள்வியைத் தனக்குள் கேட்டுக்கொண்டே பழனிப் பண்டாரம் திண்ணையைவிட்டுக் கீழே குதித்தார். குதித்தவர் ஒரு விஞடி கூட நிற்காமல் அடுத்த ஊர் போய்ச் சேர்ந்தார்.

அந்த ஒன்பதாவது ஊரைச் சமீபிக்கும் போதே, வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு மொட்டைக் கோபுரம் பழனிப் பண்டாரத்தின் மனதில் பாலை வார்த்தது. மேலே நடக்க நடக்க அவருடைய நம்பிக்கை தங்கச் சவரனின் விலைபோல உயர்ந்துகொண்டே வந்தது. பழனிப் பண்டாரம் அந்தப் பாழடைந்த கோவிலை இரண்டு சுற்று வலதுபுறமாகவும், இரண்டு சுற்று இடதுபுறமாகவும் சுற்றிப் பார்த்தார். உள்ளும் புறமும் அதை நன்றாய் அலசி ஆராய்ச்சி செய்ததன் பலனாக அது புராதனமான மண்டல கேஸ்வரனின் ஆலயமென்றும், அதற்கு இப் பொழுது பூஜா கைங்கர்யங்கள் விசேஷமாக நடக்கவில்லையென்றும் அவர் அறிந்துகொண்டார்.

உடனே சிறு நோட்டுப்புத்தகம் ஒன்றைக் கடையில் வாங்கி மஞ்சள் குங்குமம் பூசி, பிள்ளையார் சுழியைப் பெரிதாகப் போட்டு உள்ளே ஏதோ இடது கையினாலும், வலது கையினாலும் எழுதினார். ஸ்நான பானாதிகள் முடிந்தவுடன் சிவ பக்த சின்னங்களுடன் அவர் அவ்வூரிலுள்ள பெரிய வீடுகளைத் தேடிப் போனார். முதல் வீட்டுக்குள் போனவுடன், அந்த வீட்டுக்காரருக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு, நோட்டுப் புத்தகத்தை அவரிடம் நீட்டினார். கந்த புராணம் வாசித்துக் கொண்டிருந்த அந்த வீட்டுக்காரர் பழனிப் பண்டாரத்தை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மிகவும் மரியாதையாக நோட்டுப் புத்தகத்தை வாங்கி "ஸ்வாமி, தாங்கள் யார்?" என்று கேட்டார்.

"ஸ்வாமி, அடியேன் இவ்வூர் மண்டலேஸ்வரரின் ஆலயத்தை ஜீரணோத்தாரணம் செய்யும் பணியை மேற்கொண்டுள்ள ஒரு பக்தன். ஏதோ தங்களால் இயன்ற பொருளுதவி; ஆலயவிஷயம்" என்றார். அதற்குள் வீட்டுக்காரர் குறுக்கிட்டு, "ஆலய விஷயமாகத்தானே! தயவுசெய்து என்னோடு கொஞ்சதூரம் வருவீர்களா, ஸ்வாமி?" என்றார்.

"திருப்பணி விஷயமாக நான் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் வருகிறேன், ஸ்வாமி" என்று பின் தொடரவே இருவரும், மண்டலேஸ்வரர் கோவிலின் தர்மகர்த்தாவின் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்கள். தர்மகர்த்தாப் பிள்ளை அந்த வீட்டுக் காரரை வரவேற்று "என்ன விசேஷம், சாமியாரும் கையுமாக வந்திருக்கிறீர்களே!" என்று கேட்டார்.

"ஆளைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டேன். பாருங்கள் இந்த நோட்டுப் புத்தகத்தை" என்று பழனிப் பண்டாரத்தின் நோட்டுப் புத்தகத்தைத் தர்மகர்த்தாவினிடம் கொடுத்தார் அவர். பண்டாரம் மிரள மிரள விழித்தார்! தர்மகர்த்தா நோட்டையும் பார்த்தார், பண்டாரத்தையும் பார்த்தார். குறிப்பறிந்த அந்த வீட்டுக் காரர் "தர்மகர்த்தாப் பிள்ளைவாள், போனமாசம் யாரோ சாமியார் நம் ஊரிலே கோவில் திருப்பணிக் கென்று பணம் பறித்துக் கொண்டு ஓடி விட்டார் என்றீர்களே அது இந்தச் சாமியார் தானே?" என்றார்.

முந்தின மாதம் யாரோ ஒரு சாமியார் அந்த ஊரில் நூறு நூற்றைம்பது ரூபாய்வரை கோவில்

திருப்பணிக்கென்று பறித்துக் கொண்டு ஓடிப் போய்விட்டது பற்றி அந்த ஊரார் எல்லோருமே ஆத்திரம் கொண்டிருந்தார்கள். ஆனால் தர்மகர்த் தாப்பிள்ளை அந்தத் திருட்டுச் சாமியாரைப் பார்த் ததே இல்லை. அவர் அதைக் காட்டிக் கொள்ளா மலே பழனிப் பண்டாரத்தைப் பார்த்து "ஏனையா சாமியாரே, போனமாதம் ஏமாற்றிவிட்டுப்போனது போல இந்த மாதமும் வந்திருக்கிறீரா? உட்காரும் அப்படி! போலீசுக்குச் சொல்லி யனுப்புகிறேன்" என்றார்.

"ஸ்வாமி இந்த ஏழை இதற்கு முன் இங்கு வந்ததே இல்லை" என்று நடுங்கினர் பழனிப் பண் டாரம்.

"ஓஹோ! இப்பொழுதுதான் கொள்ளையடிக்க வந்திருக்கிறீரா! உம், என்ன தைரியம்! அடேடே! அதற்குள்ளாக, சுப்பையா முதலியாரிடம் பத்து ரூபாய் வாங்கியிருக்கிறீர், மாயாண்டியா பிள்ளையி டம் ஐந்து ரூபாய் வாங்கிவிட்டீர்! அந்தப் பதினைந்து ரூபாய் எங்கே?" என்று அதட்டினர் தர்மகர்த்தா.

"ஸ்வாமி அந்தக் கையெழுத்தெல்லாம் நானே போட்டுக் கொண்டதுதான். அந்த மண்டலகேஸ் வரர் சாக்ஷியாக ஒரு தம்படி கூட நான் வாங்க வில்லை" என்று அழ ஆரம்பித்தார் பண்டாரம்.

"அப்படியானல் கள்ளக் கையெழுத்து வேறு போடுகிறீரா? சரி சரி. ஜெயிலில் நன்றாக உமக்குத் திருப்பணி செய்வார்கள். பயப்படாதேயும்" என்றார், பண்டாரத்தைக் கூட்டிகொண்டு வந்த

ஆசாமி. பண்டாரத்துக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. இப்பொழுது அவருடைய கற்பனை ஜெயில் வாழ்வைப் படம் பிடித்துக் கொண்டிருந் தது. முகம், உடம்பு வியர்த்தது. கைகள் தாளுகவே தலைக்கு மேலாகக் குவிந்தன. அடியற்ற நெடுமரம் போல இருவர் முன்னிலையிலும் விழுந்தார். இரு வருக்கும் அவர்மேல் இரக்கம் உண்டாகி விட்டது. பழனிப் பண்டாரத்தைத் தூக்கி உட்கார வைத்து நடந்த விஷயங்கள் யாவற்றையும் சாங்கோபாங்க மாய்ச் சொல்லிவிட்டார்.

பழனிப் பண்டாரத்தின் இல்லற ஆசையைக் கேட்டு இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். பின்பு இருவரும் கலந்து ஆலோசித்து "ஐயா சாமியாரே, வேண்டாத ஆசைகளையெல்லாம் விட்டு விடும். உம்மைப் போன்ற ஒரு சன்னியாசினியைத் தேடி மணந்துகொள்ள முயற்சிசெய்யும். கலி யாண வைபவத்தை சொற்பமான செலவில் முடித்துக் கொள்வதானுல் நாங்களே உமக்குப் பணஉதவி செய்கிறேம்" என்றூர்கள்.

"இல்லறமே வேண்டாம் ஸ்வாமி! இல்லற வாழ்வை எண்ணியதனுலேயே எனக்கு இவ்வளவு கஷ்டமும் வந்து சம்பவித்தது. தெரியாமலா பெரிய வர்கள் இல்லறத்தை வெறுத்துக் காட்டுக்குப் போனுர்கள். நான் இருக்கும் துறவறத்துக்கு ஈடு ஒன்றுமே இல்லை. என்னை விட்டு விட்டாலே போதும்" என்று அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு பழைய கோயிலை நோக்கி நடந்தார் பழனிப் பண்டாரம்.

# யுக்தி பலித்தது

"இந்தாருங்கள் குழந்தை! என்னுடைய நேரம் கழிந்து விட்டது" என்று சுந்தரி தன் புருஷனிடம் சொல்லிவிட்டுப் பத்திரிகையுடன் தன் அறைக்குள் போய் விட்டாள். குமாரசாமி தன் தலையில் அடித்துக்கொண்டே குழந்தையின் பக்கத்தில் வந்தான். அது 'வீர், வீர்' என்று அழுது கொண்டிருந்தது.

சுந்தரி ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினி. சம்பளம் மாதம் முப்பது ரூபாய். மேலும் அவள் 'பெண் உரிமைச் சங்க'த்தின் காரியதரிசி. குமாரசாமி அவளைக் கலியாணம் செய்துகொண்ட சில தினங்களில் தம்பதிகளுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன் ஷரத்துக்களில் கீழ்க்கண்டதும் ஒன்று:—

"நமக்குக் குழந்தைகள் பிறந்தால் அதை நம் இருவரில் யார் வேலையில்லாமல் வீட்டில் இருக்கிறார்களோ அவர்களே அழாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது. ஞாயிற்றுக்கிழமைகளில் ஆளுக்கு ஒவ்வொரு மணி நேரமாக இருவரும் பார்த்துக் கொள்ள வேண்டும்."

ஒப்பந்தத்தின் அடியில் இருவரும் கையெழுத்திட்டிருந்தார்கள்.

கலியாணமான மறு வருஷம் அவர்களுக்கு ஒருபெண் குழந்தை பிறந்தது. அது தன் தாயைப் போலவே சுதந்திர வேட்கை உடையது. ஆகையால் அது இடைவிடாமல் அழும் பரிபூரண உரிமையைப் பெற்றிருந்தது. பத்துப் பேய்களின் அலறலையாவது, அல்லது நான்கு ரேடியோக்களின் கர்ண கடூரத்தையாவது சகித்துக் கொள்ளலாம். ஆனால் இந்தக் குழந்தையின் தனிப்பட்ட கதறலைப் பொறுக்கவே முடியாது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை யன்றுதான் மேலே சொன்ன சம்பவம் நடந்தது. குமாரசாமி இப்படியெல்லாம் வருமென்று எண்ணினானா? கலியாணம் ஆவதற்கு முன் அவன் அல்நாஷரை விட நாலுபடி உயரமான ஆகாயக் கோட்டை கட்டினான். மனைவியைப் பம்பரம் போல் ஆட்டிவைக்க வேண்டும்; ஊரார் தனது குடித்தனத்தைக் கண்டு ஆச்சரியப் பட வேண்டும் என்றெல்லாம் அவன் பகற் கனவு கண்டதுண்டு. ஆனால் படிக்கும்போது நினைத்தபடி அவனுக்கு சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் கிடைத்ததா? உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் ஒரு உபாத்தியாயராகக்கூட ஆக முடியாத அவனுடைய மனக்கோட்டை எப்படி நிலைத்து நிற்கும்?

குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்தான். அது 'அம்மா, அம்மா' என்று கதறியது. சுந்தரியிடம் கொண்டு விட முடியுமா? 'சள்' என்று

விழுந்து விடுவாள். குழந்தையோ குட்டிச்சாத்தான் அவதாரம். அந்தச் சமயத்தில் எதைக் கொடுத்தாலும் தூர வீசி விடுமே யொழிய அழுகையை நிறுத்தாது. சுந்தரியை அடிக்கடி பார்த்துப் பழகிய குழந்தை 'பூச்சாண்டி' க்கெல்லாம் பயப்படுமா? அவன் காட்டிய பயமெல்லாம் அதனிடம் பயனற்று விட்டது.

அதன் அழுகையை நிறுத்த ஒரே வழி தான் உண்டு. ஏதாவது ஒரு பலகையில் கையினுல் 'டப், டப்' என்று தட்டிக் கொண்டே யிருக்கவேண்டும். குமாரசாமி ஒரு மணி நேரத்திற்கு முன்பு தான் கதவைத் தட்டித் தட்டிக் கை சோர்ந்திருந்தான். இன்னும் தட்டுவதென்ருல் அவனுல் முடியாத காரியம். சும்மா இருந்தால் குழந்தையின் கூக்குரல் அதிகரித்து விடும். மேலும் "என்ன? இன்னும் அழுகைச்சத்தம் கேட்கிறது? அதைப் பார்த்துக் கொள்ளக்கூடத் துப்புக் கிடையாதா?" என்று மனைவியின் கேள்வி பிறக்கும்.

குமாரசாமி தன் குழந்தையோடு வரக் கூடாதென்று பக்கத்து வீட்டுக்காரர் முன்னமே சொல்லியிருந்தார். ஆகையால் குழந்தையை எடுத்துக் கொண்டு அவர் வீட்டுக்குப் போகவும் முடியாது. அப்படிக் கொண்டு போனுலும் அது அழுகையை நிறுத்துமா? எனவே அவன் ஒருவாறு வலியைப் பொறுத்துக் கொண்டு கதவை லேசாக இரண்டு தட்டுத் தட்டினுன். கை வேதனையை அவனுல் தாங்க முடியவில்லை. குழந்தையும் அந்தத் தட்டு

தனுக்கு மசியவில்லை. பலமாகத் தட்டினால் தான் அது சாந்தப்படும்.

***

குழந்தையை வீட்டினுள் விட்டு விட்டு வெளியே வந்து இரண்டு நிமிஷம் திகைத்து நின்ருன் குமாரசாமி. பக்கத்து வீட்டில் யாரோ பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. அங்கே போனான். ஒரு செட்டியார் பக்கத்து வீட்டுக்காரருடன் பேசிக் கொண்டிருந்தார். குமாரசாமி சட்டென்று அங்கிருந்து திரும்பினான். அங்கே கிடந்த செருப்புகளில் ஒன்றை மாட்டிக்கொண்டு 'சடக் சடக்' கென்று நடந்து தன் வீட்டிற்குள் வந்தான். வந்ததும் கதவைத் தாளிட்டு விட்டுப் படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டான்.

குழந்தை வீறிட்டுக் கொண்டிருந்தது. இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் குமாரசாமியின் வீட்டுக் கதவை யாரோ தட்டினார்கள். குழந்தை அழுகையை நிறுத்தி விட்டது. குமாரசாமி குறட்டைவிட ஆரம்பித்தான். வரவரக் கதவு பலமாகத் தட்டப்பட்டது. உட்பக்கம் இருந்த குழந்தையின் உற்சாகம் அதிகரித்தது. சப்தத்தைக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தது குழந்தை.

ஒரு மணி நேரம் இவ்வாருகக் கழிந்தது. பின்பு சுந்தரியின் நேரம் வந்து விடவே அவள் அறையிலிருந்து வெளியே வந்தாள். கதவைத் தட்டிக் கொண்டிருந்தது தன் கணவனல்ல என்பது அப்போது தான் அவளுக்குத் தெரிந்தது. ஓடிவந்து கதவைத் திறந்தாள். செட்டியார் பரிதாபமான

தோற்றத்தோடு அலுத்துப் போய்க் கையில் செருப்புடன் வாசலில் நின்றார்.

"ஐயையோ! ரொம்ப நேரமாகத் தட்டினீர்களோ? என்ன சங்கதி?" என்று கேட்டாள் சுந்தரி.

"ஆமாம். என்.......செருப்பு..........இதுதான்" என்று வீட்டினுள் கிடந்த மற்றொரு செருப்பு தன்னுடையது என்பதை அபிநயங்களின் மூலம் தெரிவித்தார் செட்டியார்.

# காதல் வேண்டாம்

நமது நிஜக் கதாநாயகி மிஸ். சுந்தரா பி, ஏ. தன் வீட்டுத் தோட்டத்துக் கைபிடிச் சுவரின்மேல் உட்கார்ந்து திடுக்கிடும் சம்பவங்களை அள்ளிவீசும் நாவல் ஒன்றை சுவாரஸ்யமாகப் படித்துக்கொண்டிருந்தாள். அப்போது தென்றல் மெல்லத்தான் வீசியது. ஆனாலும், மென் கொடி போன்ற அவளுடைய சரீரம் அதைத் தாங்க முடியாமல் ஆடி அசையவே, அவள் பின்புறமிருந்த வாய்க்காலினுள் விழுந்து விட்டாள். அப்படி அவள் விழும்போது, தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொள்ள மறக்கவேயில்லை.

அவள் விழுந்த சமயத்தில் வாய்க்காலின் பக்கம் கோபால்சாமியைத் தவிர வேறு ஒருவரும் போய்க் கொண்டிருக்க வில்லை. நாலைந்து தெருக்களுக்கப்பால் ஒரு நாய் குலைக்கும் சப்தத்தைக் கேட்டு, எப்பக்கம் போவது, எப்பக்கம் போகாமலிருப்பது என்று திகைத்து நின்று கொண்டிருந்தான். மிஸ். சுந்தரா பி.ஏ. வாய்க்காலினுள் விழுந்ததைக் கோபால்சாமி பார்த்தான். கதாநாயகனாகை ஆவதற்குரிய ஒரு அரிய சந்தர்ப்பத்தை விட்டு விடு

வானு அவன்? கையிலிருந்த தோல்பை, அங்க வஸ்திரம், சட்டை முதலியவற்றைக் கரையில் பத்திரமாக வைத்து விட்டு, முழங்காலளவு தண்ணீரில் குதித்தே விட்டான்.

தனக்கெதிரே கரையை நோக்கி வந்து கொண்டிருந்த மிஸ். சுந்தராவைப் பார்த்து, "நில், அம்மா, அங்கேயே நில். நான் உனக்காகவே உன்னைக் காப்பாற்றவே இந்தத் தண்ணீரில் இறங்கி விட்டேன்" என்று சொல்லிக்கொண்டே அவள் பக்கம் போய்ச் சேர்ந்தான். அவள் கையைப் பிடித்துக்கொண்டு சற்று நேரம் இளைப்பாறினான்.

"தங்களைப் போன்ற ஒரு தீர புருஷரை நான் இதுவரை கண்டது இல்லை. கேவலம் ஒரு பெண்ணின் பொருட்டு, இத்தனை தியாகம் செய்யத் துணிந்த தங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யக்கூடும்! நான் ஒரு பருத்திச் செடியாக முளைத்து, அதன் பஞ்சினுல் ஒரு குல்லாச் செய்து, அந்தக் குல்லாவை உங்கள் தலைக்குப் போட்டாலும் தகும். தயாள குணசீலரான தங்கள் பெயர் யாதென இந்த ஏழை அறியலாமோ!" என்று கேட்டாள் மிஸ்.சுந்தரா பி.ஏ. மயில் போன்ற தன் இனிய குரலில்.

"என்னைக் கோபாலன் என்று அழைப்பார்கள்" என்ருன் நமது எதிர்காலக் கதா நாயகன்.

சுந்தரா கவலை ததும்பும் முகத்துடன் "தங்களுக்குக் கலியாணம் ஆயிற்ருே?" என்ருள்.

நமது கதாநாயகன் இந்தக்கேள்விக்கு என்ன விதமாகப் பதில் சொல்லுவதென்று தெரியாமல் தலையைச் சொறிந்து கொண்டு நின்றான். தன்னைப் பற்றி அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நினைத்து நினைத்து மகிழ்ந்தான். தினமும் இம் மாதிரி ஒரு பெண் இந்த மாதிரியான ஒரு வாய்க் காலில் விழுந்து, தான் அவர்களைக் காப்பாற்றி விட்டு, அவர்கள் ஒவ்வொரும் தன்னை இவ்வாறு புகழ்ந்தால் எப்படி இருக்கும் என்று அவன் யோசித்துப் பார்த்தான். இப்படி அவன் இன்பக் கனவுகளில் தன் மனதை லயிக்கவிட்டிருந்த போது அவள் கேட்ட கேள்வி சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது. உடனே நாணிக் கோணிக் கொண்டு "இன்னும் ஆக வில்லை" என்றான்.

"சரி, அப்படியானால் தயவு செய்து என் கையை விட்டு விட்டு இந்தக் கண்ணாடியைக்கொண்டு போய்க் கரையில் வையுங்கள். நான் வந்து விடுகிறேன்" என்றாள் மிஸ். சுந்தரா பி.ஏ.

கோபாலன் தன் இரண்டு கைகளையும் பணிவுடன் நீட்டிக் கண்ணாடியை வாங்கிக் கொண்டு போய்க் கரையில் வைத்து விட்டு அங்கேயே நின்றான். மிஸ். சுந்தரா ஆடைகளைப் பிழிந்து கொண்டு கரையேறினாள். கோபாலனிடமிருந்து தன் மூக்குக் கண்ணாடியை வாங்கிக் கொண்ட பிறகு அவனுடைய விலாசத்தை எழுதி வாங்கிக் கொண்டாள். "தாங்கள் நாளைக் காலையில் கட்டாயம் என் பங்களாவிற்கு வரவேண்டும்"

என்று கோபாலனிடம் சொல்லிவிட்டு அவள் போய் விட்டாள்.

கோபாலன் கொஞ்ச நேரம் வரை அவள் போவதைப் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். போகும் போதே "ஆயிரம், இரண்டாயிரம்" என்று ஏதோ முனகிக் கொண்டான். அன்று இரவு முழுதும் அவன் தூங்கவேயில்லை.

மிஸ். சுந்தரா பி. ஏ. யும் அன்று இரவு முழு தும் தூங்கவேயில்லை. ஆனந்தக்கண்ணீர் வடித் துக் கொண்டிருந்தாள். கோபாலன் அழகாக இல்லாவிட்டால் தான் என்ன! தன்னைக் காப் பாற்றுவதற்கென்றே தண்ணீரில் குதித்துவிட்ட தாகச் சொன்ன ஒருவனை எப்படிக் காதலிக்காமலி ருக்கமுடியும்? நாவல்கள் படிக்கையில் அவற்றில் வரும் கதாநாயகர்கள் போல, ஒருவன் தனக்குக் கிடைப்பானு என்று ஏங்கிக்கொண்டிருந்த மிஸ். சுந்தரா தனக்குக் கோபாலன் மீது காதல் உண் டாகும்படி தன் மனதை லயப்படுத்திக் கொண் டாள். அதோடு நில்லாமல் அவனையே கலியாணம் செய்து கொள்ளவும் தீர்மானித்துத் தன் பெற் றோர்களின் சம்மதத்தையும் பெற்றுவிட்டாள்.

மறுநாள் காலையில் நமது கதாநாயகியின் தந்தை முனியாண்டி எம். ஏ. தன் பங்களாவில் வெகு அலங்காரத்துடன் அமர்ந்து தனக்கு மருமக ஞக வரப்போகும் கோபாலனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். கோபாலனும் அதிகாலையில்

எழுந்து ஸ்நானத்தை முடித்து விட்டு சகுனம் பார்த்தபின் தன் தோல் பையுடன் சுந்தரா லாட்ஜுக்கு வந்து சேர்ந்தான். முனியாண்டியா பிள்ளை அவனை உபசரித்து, நாற்காலியில் உட்காரச் சொன்னார்.

தன் காதலன் வந்து விட்டான் என்பதை அறிந்த மிஸ். சுந்தரா அங்குள்ள ஒவ்வொரு அறையினுள்ளும் போய் அவற்றின் கதவிடுக்குகளின் வழியாக அவனுடைய முழு ரூபலாவண்யத்தையும் அணு அணுவாகத் தரிசித்து மகிழ்ந்தாள். கோபாலன் அவளுடைய கண்களுக்கு முதல் நாளை விட நூறு மடங்கு அழகுள்ளவனாகத் தோன்றினான். அவனுடைய முகத்திலுள்ள வைசூரித் தழும்புகளெல்லாம் அந்த முகத்திற்கு இன்னும் சோபை கொடுப்பதற்காகவே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று அவள் எண்ணினாள். அவன் பேசிய வார்த்தைகளின் ஒலி மரக்கடையில் மதயானை புகுந்த போது உண்டாகும் இனிய கானத்தை ஒத்திருந்ததாகவே அவளுக்குப் பட்டது. தன் தந்தையும் அவனும் சம்பாஷிப்பதை அவள் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அந்த மன்மத ரூபன் ஒருவேளை தன்னை மணந்து கொள்ள மறுத்து விடுவானோ என்று பயந்தாள்.

முனியாண்டி எம். ஏ:— மிஸ்டர் கோபாலன், நீங்கள் தான் நேற்று என் மகளைக் காப்பாற்றினீர்களென்று அவள் சொன்னாள். அவள் தான் எனக்கு இந்த உலகில் எல்லாச் செல்வமும். எனக்குச் சொத்து ஏராளமாக இருக்கிறது. ஆனால்

நேற்று மட்டும் நீங்கள் என் சுந்தராவைக் காப்பாற்றியிருக்காவிட்டால், என் கதி என்னவாகும்? என் ஆஸ்திகளால் தான் என்ன பயன்?

கோபாலன்:— ஐயா, நேற்று ஒரு நாயினுல் தான் உங்கள் மகள் காப்பாற்றப்பட்டாள் என்று சொல்ல வேண்டும்.

முனி:— என்ன இப்படிச் சொல்கிறீர்கள்?

கோபா:—அந்த நாய் மட்டும் குலைத்திருக்காவிட்டால் நான் வாய்க்காலின்பக்கம் நின்றிருக்கவே மாட்டேன். என் வீட்டிற்குப் போயிருப்பேன். உங்கள் மகளும் மூக்குக் கண்ணுடியை வைத்துக் கொண்டு வாய்க்காலின் நடுவிலேயே நிற்கவேண்டி வந்திருக்கும். நாய்களால் எவ்வளவு நன்மை பாருங்கள்.

முனி:—சரி, அதிருக்கட்டும். தாங்கள் செய்த இந்த உதவிக்குப் பிரதியாக நான் ஒரு காரியம் செய்யலாமென்று எண்ணுகிறேன்.

கோபா:—அது என்ன காரியம்?

முனி:—அதாவது, நீங்கள் காப்பாற்றிய என் சுந்தராவைத் தங்களுக்கே கலியாணம் செய்து கொடுத்து முப்பதினுயிரம் ரூபாய் பெறுமான என் ஆஸ்தியையும் தங்கள் பேருக்கே எழுதி வைத்து விடலாமென்று எண்ணுகிறேன். திருப்தி தானே?

முனியாண்டி சொன்னதைக் கேட்டுக் கோபாலன் திருப்தி யடைந்தவனுகக் காணப்படவில்லை.

கோபா:—ஐயா, எனக்கு இதை விட மேலான ஒரு உதவியைத் தாங்கள் செய்யவேண்டும்.

முனி :—இதற்குமேல் என்னுல் என்ன உதவி செய்யமுடியும்?

கோபா :—நான் கேட்கும் அந்த உதவியை மட்டும் நீங்கள் செய்து விட்டால் போதுமானது. நான் எவ்வளவோ திருப்தியடைவேன். என் வேண்டுகோளை நீங்கள் மறுக்கவே கூடாது.

முனி :—சரி, சொல்லுங்கள். அந்த உதவியை என்னுல் கூடுமா என்று பார்க்கிறேன். முடியுமானுல் எந்த உதவியையும் செய்யத் தயாராயிருக்கிறேன்.

கோபா :—நீங்கள் தயவுசெய்து எங்கள் ஜகதீஸ்வரி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு பாலிஸீ எடுத்துக்கொள்ள வேண்டும். இதைச் செய்துவிட்டால் உங்கள் மகள் எத்தனை தடவை வாய்க்காலினுள் விழுந்தாலும் நான் காப்பாற்றி விடுகிறேன்.

கோபாலன் இவ்வாறு கூறி முடிப்பதற்குள் முனியாண்டி “அடப்பாவி, நீ இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டா? ஓடு இந்த இடத்தை விட்டு” என்று கையிலிருந்த தடிக் கம்பை ஓங்கினுர்.

கோபாலன் நிற்கவே யில்லை.

# இன்ஷ்யூரன்ஸ் ரங்கு

நாகப்பட்டினத்தில் போய் நீங்கள் "டி. எம். ரெங்கசுவாமி (அல்லது ரெங்கசாமி) ஐயங்கார் வீடு எது?" என்று கேட்டீர்களானால் அநேகமாக எல்லோரும் "எனக்குத் தெரியாது" என்று தான் சொல்வார்கள். அப்படிக்கில்லாமல் "இன்ஷ்யூரன்ஸ் ரங்கு வீடு எது?" என்று எந்த மூலையில், எந்த மனிதரிடம் கேட்டாலும் லகுவாக வீட்டைக் காட்டி விடுவார்கள். இன்ஷ்யூரன்ஸ் ரங்குவின் பெயர் நாகப்பட்டினத்தில் அவ்வளவு பிரசித்தம்.

பாம்பு வாயில் அகப்படாமல் தப்பிவிடும் தேரைகள் கூட உலகத்தில் உண்டு. ஆனால் ரங்குவின் கையில் சிக்காத உத்தியோகஸ்தர்களோ, கடைக்காரர்களோ அந்தப் பிராந்தியத்தில் கிடையாது. "என் ஆயுள் உள்ளவரை நான் இன்ஷ்யூர் பண்ணிக் கொள்ளவே மாட்டேன்" என்று சபதம் பண்ணிக்கொண்ட அனவரதம்பிள்ளையைக் கூட ரங்கு ஆறுமாத வேதாந்த போதனையின் மூலம் மசிய வைத்து ஒரு பாலிஸீதாரராக மாற்றி விட்டான். மாதம் இருபது ரூபாய் வருமானமுள்ள தாலுகா ஆபீஸ் சேவகன் மன்னார்சாமிக்குப் பதி

னேழுரை ரூபாயில் அவன் வீட்டுச் செலவைச் சமா ளித்துக் கொள்ளும் வழிகளை உபதேசித்து அவனை யும் இன்ஷ்யூரன்ஸ் பண்ணிக்கொள்ளும்படி செய்துவிட்டான் ரங்கு. இவ்வளவு சாமர்த்தியமான ரங்குவிற்கு அவன் ஏஜண்டாக இருந்து வரும் சங்க பாலா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் நல்ல செல் வாக்கு இருந்து வந்தது. பணமும் ஏராளமாக வந்து கொண்டிருந்தது.

ரங்கு தன் நான்கு வருஷ அனுபவத்தில், ஆட் களுக்குத் தகுந்த 'குல்லா'ப் போடுவதில் கைதேர்ந்து விட்டான். வாலிப வயது, தளராத உற்சாகம், பொறுமை, பல துறைகளில் பரிச்சயம் முதலான இன்ஷ்யூரன்ஸ் குணங்களெல்லாம் அவன் தேகத்தோடு ஒட்டி வளர்ந்து வந்தன. ரங்கு ஒரு ஆசாமியின்மீது கண்வைத்து விட்டால், அவன் எவ்வளவு பெரிய கில்லாடியாக இருந்தாலும், அவ னுடைய வலையிலிருந்து தப்பிவிட முடியாது. ஆசாமி தன் வலையில் சிக்கினலொழிய ரங்குவிற்கு தூக்கமே வராது. இதற்காகப் பல பாஷைகளையும், பல கலைகளையும் தெரிந்துகொள்ள வேண்டிவந்தது.

ஒரு தாவர சாஸ்திரியைத் தன் வலையில் வீழ்த் துவதற்காக, அவன் நாலைந்து பெரிய புத்தகங்களை வாங்கி உருப்போட்டான். ஒரு சினிமாக் கொட் டகை மானேஜரைப் பிடிப்பதற்காக அவன் எடுத் துக்கொண்ட முயற்சியில், ஒரு சினிமா டைரக்ட ருக்கு வேண்டிய அம்சங்களையெல்லாம் பயின்று விட்டான். பழந்தமிழ் இலக்கியங்கள், மறு மலர்ச்சி தமிழ் எல்லாவற்றையும் கேட்பவர்களுக்குத் தகுந்த

படி யெல்லாம் சரமாரியாக எடுத்து விளாசு வான்.

ரங்கு, தனியாக ஒரு கட்சியையும் சேர்ந்தவ னல்ல. எல்லாக் கட்சிகளிலும் அவன் அங்கத் தினனுக இருந்து வந்தான். சுருங்கச் சொன்னுல் இன்ஷ்யூரன்ஸ் தொழிலின் ரகசியத்தைப் பரி பூரணமாக அறிந்த நிபுணனுக விளங்கினுன் ரங்கு.

இத்தனை வல்லவனுன ரங்குவிற்கு ஒரு சோதனை காலம் வந்து சேர்ந்தது. அவன் குடி யிருந்து வந்த தெருவிற்கு அடுத்த தெருவில் வேதாந்தமையங்கார் என்ற ஒரு கிளார்க் புதி தாகக் குடிவந்தார். அவர் வரப்போவதை ரங்கு இரண்டு வாரத்திற்கு முன்னமே தெரிந்து கொண் டான். வரப்போகும் ஆசாமி இதுவரை இன்ஷ் யூர் செய்து கொள்ளாமலிருக்க வேண்டுமென்று ரங்கு பல கடவுள்களைப் பல விதமாக வேண்டிக் கொண்டிருந்தான்.

ரங்குவின் வேண்டுதல்கள் பலனளிக்காமல் போகவில்லை. வேதாந்தமையங்கார் அதுவரை யிலும் தன் ஆயுளை ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி யிலும் ஒப்படைக்கவில்லை. இந்த விஷயத்தை அவர் வந்தவுடனேயே ரங்கு லாவகமாகப் பேச்சுக் கொடுத்து அறிந்து கொண்டான். அதிலிருந்து ரங்குவின் மூளை தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித் தது. வேதாந்தமையங்காருக்கு என்னென்ன வஸ்துக்கள் பிடிக்கும், எந்தெந்தப் பத்திரிகை களைப் படிக்கிறுர், எந்த இலக்கியத்தில் அவருக்கு

பற்றுதல் உண்டு, எந்தக் கலை (வடகலையா தென் கலையா என்பதைப் பற்றி அல்ல. அந்த விஷயத்தை அவர் அணிந்திருந்த பட்டை நாமத்திலிருந்தே அறிந்து கொண்டான்.) யில் அவருக்கு ரசிப்பு இருக்கிறது, சொத்து எவ்வளவு, கடன் எவ்வளவு, குழந்தைகள் எத்தனை இத்தியாதி விஷயங்களையெல்லாம் கிரகித்துத் தன் மனதில் பதிவு செய்து கொண்டான்.

வேதாந்தமையங்கார் முதல் முதலாக நாகப் பட்டினத்தில் காலடி வைத்தவுடன் வரவேற்று உபசரித்தவன் ரங்குதான். அதனால் இன்னாரென்று தெரிவதற்கு முன்னமே அவன் மீது வேதாந்தமைய்யங்காருக்கு ஒரு அபிமானம் விழுந்து விட்டது. வெகு காலம் பழகிய ஒரு வேலையாளைப் போல ரங்கு அவர் வீட்டுக்கு வேண்டிய சகல சாமான்களையும் வாங்கிக் கொண்டு வந்து சேர்த்தான். பாட்டு வாத்தியாரே அகப்படாத அந்தப் பிரதேசத்தில் வேதாந்தமைய்யங்காரின் மகள் சாமளாரூபிணிக்குப் பாட்டுச் சொல்லிவைக்க ஒரு பாட்டுவாத்தியாரைக் கூட எங்கிருந்தோ கொண்டு வந்து அமர்த்தி விட்டான்.

வேதாந்தமைய்யங்காருக்கு, ரங்குவின் காரியங்கள் ஒன்றுமே புரியவில்லை. தான் 'எள்' என்பதற்குள் தன்னை எண்ணை தேய்த்தே குளிப்பாட்டி விடுகிற இந்தப் பேர்வழி எதற்காக இப்படி ஓடி ஓடி உதவி செய்து வருகிறான் என்று ஆராய்ச்சி செய்து பார்த்தார். அவருடைய ஆராய்ச்சிக்கும் அப்பால் போய்விட்டது ரங்குவின் சாமர்த்தியம்.

ஒரு வாரப் பழக்கத்தின் மூலம் அவர் ரங்குவைப் பற்றி அறிந்து கொண்டதெல்லாம், அவன் அடுத்த தெருவில் குடியிருக்கும் உபகாரி என்பது தான். ஆனல் இதே ஒரு வார காலத்திற்குள் ரங்கு வேதாந்தமையங்காரைத் தராசில் போட்டு நிறுத்தே வைத்து விட்டான். அவருக்குப் பிடிக்கும் விஷயங்கள் எது, பிடிக்காத விஷயங்கள் எது என்று அவனுக்குத் துல்லியமாகத் தெரிந்து விட்டது. பிடிக்காதவற்றில் தலைமை ஸ்தானம் வகித்தது இன்ஷ்யூரன்ஸ் விஷயம் தான் என்பதை ரங்கு அறிந்து கொண்டதனல் அவன் அதைப் பற்றி வெகு நாட்கள் வரை பேசவே இல்லை.

ஒரு நாள் இருவரும் பலவிதமான உத்தியோகங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது வேதாந்தமையங்கார் "மிஸ்டர் ரங்கு, நான் எத்தனையோ தடவை கேட்டும் உங்களுடைய உத்தியோகம் என்னவென்று சொல்லாமல் மழுப்பி விடுகிறீர்களே" என்ருர். ரங்கு தலையைச் சொரிந்து கொண்டே "அதைப் பற்றிச் சொன்ஞல் அவடத்திலே கோபம், வெறுப்பு ஏற்படும்" என்று சொல்லி விட்டு ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"உங்கள் உத்தியோகம் என்னதென்று நீங்கள் சொன்ஞல் எனக்கேன் கோபம் வரப்போகிறது?"

"அப்படியாஞல் நான் தைரியமாகச் சொல்கிறேன். (ஒரு அசட்டுச் சிரிப்பு) மன்னிக்கவேண்

டும். அண்ணு! நான் சங்கபால இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் ஏஜெண்ட்."

"அடபாவி மனுஷா! அன்னியோன்னிய மாகப் பழகிவிட்டு இப்படிக் கழுத்தறுக்கிறீரே!" என்று பரிதாபப் பட்டார் வேதாந்தமையங்கார்.

ரங்கு விடுவானு? "நான் தான் மன்னித்துக் கொள்ள வேண்டுமென்று முதலிலேயே கேட்டுக் கொண்டேனே அண்ணு. அதனுல் நீங்கள் கோபிக் கவே கூடாது. வேறு வேலையே கிடைக்கவில்லை. வாயுள்ளபிள்ளை பிழைக்கும் என்ற பழமொழியை நம்பிக் கொண்டு இந்தத் தொழிலில் இறங்கி விட் டேன் அண்ணு!" என்றுன்.

வேதாந்தமையங்கார் வயிற்றெறிச்சலோடு "நீர் இதை விட பாழுங் கிணற்றில் இறங்கி யிருக்க லாமே" என்ருர்.

"அண்ணு, நீங்கள் சொல்வது ரொம்ப உண்மை என்பதை உங்களைப் போன்ற சிலரிடம் நான் பேசிப்பார்த்த பிறகுதான் தெரிய வந்தது. ........அதிருக்கட்டும். மண்ணெண்ணை வாங்குவதற்கு சீட்டு வேண்டுமென்று சொன்னீர்களே அதைப் போய் எடுத்து வருகிறேன்" என்று அவரிட மிருந்து மெதுவாக நழுவி விட்டான் ரங்கு. அதற்கு மேல் அவரோடு பேசிக் கொண்டிருப்பது சரியல்ல வென்று அவனுக்குத் தெரியும்.

வேதாந்தமையங்கார் நாகப்பட்டினத்திற் குக் குடிவந்து ஒரு மாதமாயிற்று. குளத்தங்கரை, கச்சேரி, சினிமாக் கொட்டகை, ஹோட்டல், மார்க்

கெட் முதலான இடங்களில் அவரையும் ரங்குவை யும் ஒன்ருகவே பார்த்து வந்த ஜனங்கள் அவர் ரங்குவின் நெருங்கிய பந்துவாக இருக்க வேண்டு மென்றே நினைத்தார்கள். ரங்கு அவரை ஒரு பாலி ஸிதாரராக ஆக்குவதற்காகவே கண்ணி வைத் திருக்கிருன் என்று ஒருவரும் நம்பவில்லை. ஏனென் ருல் அவன் சேர்த்துக் கொண்ட வேறு எந்த பாலிஸிதாரரையும் இந்த மாதிரி விட்டுப் பிரியாமல் பின்தொடர்ந்ததே இல்லை.

இதைப் பற்றி ரங்குவே ஒரு சமயம் மனம் வருந்தி தன் தகப்பனுரிடம் "அப்பா, இவரைப் போல கொடாக்கண்டனை நான் பார்த் ததே இல்லை. கொஞ்சமாவது பிடி கொடுக்க மாட்டேனென்கிருர். தெய்வம்தான் துணை செய்ய வேண்டும்" என்ருன். தன் மகன் பசி, தாகம், மழை, வெய்யில் இவைகளைப் பாராமல் வேதாந்த மைய்யங்கார் வீட்டுக்குத் தொண்டு செய்வதைப் பார்த்த அவனுடைய தகப்பனுர் "ரங்கு, அவர் வெறும் சரட்டுப் பேர்வழியாக இருந்தால் விட்டுத் தொலைக்கிறது தானே? வீணுக ஏன் சிரமப்பட்டுக் கொள்கிருய்?" என்று கேட்டார். "அப்பா, இப் படிப்பட்ட கொடாக்கண்டர்களை வழிக்குத் திருப்பு வதுதான் எங்கள் தொழிலின் ரகசியம்" என்று சொல்லிவிட்டுத் தன் முயற்சியை மேலும் தொடர்ந்து நடத்தி வந்தான்.

ரங்கு ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டு என்று தெரிந்தது முதல் வேதாந்தமைய்யங்கார் அவனை வெறுக்க, ரங்கு அவர்மீது அபாரப் பிரியம் காட்டி

வந்தான். அவருடைய காலில் தைத்த முள்ளைத் தன் கண்களில் பாய்ந்த ஆணியாகவே பாவித்து வருந்துவான் ரங்கு. அவருடைய வசவுகளாகிய கொடியவைகளை யெல்லாம் இவன் புன்சிரிப்பு என்ற கேடயத்தினல் பயனற்றதாக ஆக்கிவிட்டான். ஆகையால் வேதாந்தமையங்கார் அவனை வெறுக்கவும் முடியாமல் விரும்பவும் முடியாமல் இருதலைக்கொள்ளி எறும்புபோல் தவித்தார்-"ஓய்! இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டை மற்றவர்களின் உயிருக்கு உலை வைக்கும் ஒரு கொலைபாதகனுகவே நான் எண்ணுகிறேன். உமக்கு மானம், வெட்கம் லவலேசமாவது இருக்குமானல் இனிமேல் என் வீட்டுக்கு வராதேயும்" என்று கூடச் சொல்லிப் பார்த்து விட்டார். அதற்கு ரங்கு என்ன பதில் சொன்னுன் தெரியுமா? சிரித்துக்கொண்டே "நீங்கள் இதற்கு மேலே ஆயிரம் மடங்கு கேவலமாகப் பேசினுலும் எனக்கு உங்கள் மீது உள்ள அன்பு குறையப் போவதில்லை, அண்ணு!" என்ருன். இப்படி பதில் சொல்லும் ஒருவனை அவர் என்ன தான் செய்வார்?

கருடன் இரையைச் சுற்றிச்சுற்றி வட்டமிடுவதுபோல ரங்கு இன்ஷ்யூரன்ஸ் புஸ்தகங்களோடு வேதாந்தமையங்காரைச் சுற்றி வளைய வளைய வந்து கொண்டிருந்தான். நாள் ஆக ஆக அவனுடைய உறுதியும் பலப்பட்டு வந்தது. "இவரை நான் ஒரு பாலிஸிதாரராக ஆக்கிவிடாமல் போனல் இந்தக் காதையே அறுத்துக் கொள்வேன்" என்று தனக்குள் சபதம் பண்ணிக் கொண்டான்.

வேதாந்தமையங்கார் தன் மீது அளவு கடந்த மகிழ்ச்சி அடையக்கூடிய ஒரு அரிய சமயத்தை உண்டாக்க ரங்கு பல தடவை முயற்சி பண்ணினன். சர்க்கரை மூட்டை மூட்டையாக வாங்கிக் கொண்டு வந்து அவர் வீட்டில் கொட்டினன். விறகு மலைமலையாகக் கொண்டு வந்து குவித்தான். முதல் தரமான அரிசி அவருக்குத் தாராளமாகக் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்தான். இந்த யுத்தகாலத்தில் ஒரு பொருளுக்காவது கவலையின்றி வாழ்ந்து வந்த பிரகிருதி வேதாந்தமையங்கார் ஒருவர் தான் என்று சொல்லும்படி ரங்கு சகல வசதிகளையும் அவருக்குச் செய்து கொடுத்தான். இதனலெல்லாம் அவர் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி எடுத்துக் கொள்ளும் அளவுக்கு மகிழ்ந்து விடவில்லை.

சண்டை சச்சரவே இல்லாமலிருந்த வேதாந்தமையங்கார் குடும்பத்தில் ஒருநாள் அவருடைய மகள் சாமளவல்லியின் கலியாணத்தை சீக்கிரம் முடித்து விடவேண்டு மென்பதைப்பற்றி தம்பதிகளுக்குள் பெரிய சண்டை ஆரம்பித்தது. நேரம் ஆக ஆக இருவருக்கும் வார்த்தைகள் தடித்தன.

"கருங்கோட்டான் மாதிரி உருவமும் ஆந்தை மாதிரி குரலும் படைச்சிருக்கிற உன் மகளை எவன் வந்து கலியாணம் பண்ணிக் கொள்வான்?" என்று ஆத்திரம் தீரக் கொட்டி யளந்தார் வேதாந்தமையங்கார். அவருடைய வர்ணிப்பில் அணுவளவும் குறையாத சொரூபத்துடன் சாமளவல்லி தன் அம்மாவுக்கு அருகில் நின்று முணுமுணுத்துக்

கொண்டிருந்தாள். சாமளவல்லி தன்னுடைய சொந்த மகளாக இருந்த ஒரே காரணத்தினுல் அவர் அவளுடைய ரூபலாவண்யங்களை உண்மை யானபடி வர்ணிக்காமல் பல இடங்களில் வரன் தேடி அலைந்தார்.

சாமளவல்லியைப் பார்க்க வந்த வரன்களெல்லாம் "லக்ஷ லக்ஷமாய்க் கொடுத்தாலும், இவளைக் கல்யாணம் செய்து கொள்வதில்லை" என்ற ஒரே முடிவுடன் திரும்பிப் போய் விட்டார்களென்ருல் அதற்கு வேதாந்தமையங்கார் என்ன செய்வார்! தன் புருஷன் தன்னுடைய சொந்த மகளையே கருங்கோட்டான் மாதிரி வர்ணித்தவுடன் அவருடைய மனைவிக்குப் பொறுக்க முடியவில்லை. "கையாலே ஆகாதவா இப்படித்தான் பேசுவா" என்ருள். தன்னைக் கையாலாகாதவன் என்று அவள் சொன்னவுடன் வேதாந்தமையங்காருக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. "ஆமாம். நான் கையாலாகாதவன்தான். கையாலானதைச் செய்கிறேன் பார்" என்று தன் கையால் ஆன இரண்டு அடிகளையும் அவள் முதுகில் கொடுத்து விட்டார். அடிக்காமலே அழ வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்த அவருடைய மனைவி, அடி விழுந்தவுடன் தொண்டை கிழிய கூக்குரலிட்டு அழ ஆரம்பித்து விட்டாள். "இனிமேல் நான் இந்த வீட்டிற்குள்ளே நுழையப் போவதில்லை" என்ற சபதத்தோடு வேதாந்தமையங்கார் ஆபீஸிற்குக் கிளம்பி விட்டார். அவருடைய மனைவி அவருக்குக் கொஞ்சமாவது இளைத்தவளல்ல. "நீங்கள் இங்கே

நுழைந்தாலும் நான் சாதம் போடப் போற தில்லே'' என்று பதிலுக்குப் பதில் சபதம் பண்ணி விட்டாள்.

இந்தச் சண்டை முழுவதையும் ரங்கு அவருடைய வீட்டுக்கு வெளியே ஒளிந்து நின்று கவனித்துக்கொண்டிருந்தான். இந்த சந்தர்ப்பத்தை தனக்கு அனுகூலமாக்கிக் கொள்ள அவன் தீர்மானித்தான். அன்று மத்தியானம் இரண்டு மணி இருக்கும். ரங்கு ஒரு பனாரஸ் புடவையுடன் வேதாந்தமைய்யங்கார் வீட்டினுள் நுழைந்தான். அவருடைய மனைவி தலைவிரிகோலமாக ஒரு மூலையில் படுத்திருந்தாள். சாமளவல்லியும் அருகில் உட்கார்ந்தாள். "மன்னி, மன்னி!" என்று கூப்பிட்டான் ரங்கு. வேதாந்தமைய்யங்காரின் மனைவிக்கு ரங்குவின் மேல் அபாரமான அன்பு. தன் சொந்தத் தம்பியைப்போலவே நினைத்துத் தன் குறைகளை அவனிடம் சொல்வதுண்டு. ரங்கு கூப்பிட்டவுடனேயே அவனுடைய அண்ணாவாகிய வேதாந்தமைய்யங்காரின் மீதுள்ள குற்றங்கள் அத்தனையும் அவனிடம் சொல்லி விடவேண்டும் என்ற ஆத்திரத்தோடு எழுந்து வந்தாள். அதனால் அவள் பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே ரங்கு "மன்னி, நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்களென்று எனக்குத் தெரியும். அண்ணா கோபத்தோடு ஆபீசுக்குப் போகிறார்போலிருக்கு. அதனாலே நான் அவர் கிட்ட ஒன்றும் விசாரிக்கல்லே! உங்களுக்குப் பிரியமான புடவைன்னு இதை போற வழியிலே வாங்கினோம். என் கிட்டக்

கொடுத்தனுப்பிச்சார்" என்ருன். வேதாந்தமைய்யங்காருடைய மனேவியின் தலை சுழன்றது.

உச்சி குளிர்ந்தது. தன் புருஷன் எவ்வளவு தான் கோபக்காரராஞலும் தன்மேல் உள்ள அன்பு மட்டும் குறையவே குறையாது என்று மனம் மகிழ்ந்தாள். அவளுடைய முகத்தில் ஒரு புன்முறுவல் தவழ்ந்தது. புடவையை வாங்கிக் கொண்டாள்.

ரங்கு, "நான் போய் வருகிறேன் மன்னி" என்று அவளிடம் விடை பெற்றுக் கொண்டு ஒரு ஹோட்டலை நோக்கி நடந்தான். அங்கு பக்ஷணங்களும் காபியும் வாங்கிக் கொண்டு வேதாந்தமைய்யங்காரின் ஆபீசுக்குச் சென்ருன். இவனைக் கண்டதும் வேதாந்தமைய்யங்கார் எழுந்து வெளியே வந்தார். உடனே ரங்கு "என்ன அண்ணு, வீட்டிலே கோவிச்சிண்டு வந்துட்டேள் போலேருக்கு. உங்கள் வீட்டுக்குப் போயிருந்தேன். நீங்கள் டிபன் கூட எடுத்துண்டுப் போகலேன்னு மன்னி ரொம்ப வருத்தப்பட்டு உடனே டிபன் தயார் பண்ணி என்கிட்டக் குடுத்தனுப்பிச்சா" என்று டிபனையும் காபியையும் அவர் கையில் கொடுத்தான். தன் மனைவி கோபத்தை யெல்லாம் மறந்துவிட்டு எவ்வளவு அன்போடு டிபனை அனுப்பி யிருக்கிருள் என்று அவருக்கு ஒரே ஆனந்தம். ரங்கு மகிழ்ச்சி பொங்கும் அவருடைய முகத்தை ஒரு தடவை உற்றுப் பார்த்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டான்.

***

அன்று மாலை வேதாந்தமைய்யங்கார் வீட்டில் நடக்கவிருக்கும் வேடிக்கையைப் பார்ப்பதற்காக ரங்கு அங்கு போனான். அவன் போகும் போது தம்பதிகள் குதூகலமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். " இந்த ரங்கு எமகாதகப் பேர்வழியா இருக்கானே. ரூபாயைக்கூட லக்ஷியம் பண்ணாமல் என்ன வேடிக்கை பண்ணிட்டான் பார்த்தியா! இப்படி வேடிக்கை நடக்கலையானா, நான் இன்னிக்கி இங்கே வந்தே இருக்க மாட்டேன். உன் கூடப் பேசியும் இருக்க மாட்டேன் " என்று வேதாந்தமைய்யங்கார் தன் மனைவியிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

அதே சமயத்தில் ரங்கு உள்ளே நுழைந்து " மன்னிக்கணும் அண்ணா. நீங்க மன்னியோட 'டூ' விட்டது எனக்குப் பிடிக்கவே இல்லை. அதற்காகத்தான் இப்படிச் செய்தேன் அண்ணா! " என்று ஒரு புன்சிரிப்பை வரவழைத்தான். பின்பு மூவரும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். "ரங்கு, இப்படிப்பட்ட சிநேகிதர்கள்தான் எனக்கு வேண்டும்!" என்று கூறி முடித்தார் வேதாந்தமைய்யங்கார்.

ரங்கு இது சமயம் தவறினால் மறு சமயம் வாய்ப்பதரிது என்று மெதுவாகத் தன் தொழிலைப் பற்றிய பேச்சை ஆரம்பித்தான். " அண்ணா, நான் வெகுகாலமாக உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன் " என்றான்.

“ அதென்ன விஷயம் ? சொல்லேன் ” என்று உற்சாகத்தோடு கேட்டார் வேதாந்தமையங்கார்.

“ ஒன்றுமில்லை. நீங்கள் எங்கள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் 5000 ரூபாய்க்கு ஒரு பாலிஸி ........” என்று ரங்கு கூறி முடிப்பதற்குள்ளாக வேதாந்தமைய்யங்காரின் புருவங்கள் நெற்றிக்கேறி விட்டன. “ ரங்கு இன்ஷ்யூரன்ஸ் விஷயத்தைப் பற்றி மட்டிலும் நீ என்னிடம் பேசவே கூடாது. என் ஆயுளில் நான் ஒருக்காலும் இன்ஷ்யூர் பண்ணிக் கொள்ளப் போவதே இல்லை ” என்றார்.

இப்படிச் சொன்னால் ரங்கு விட்டு விடுவானா? ஒரு அசட்டுச் சிரிப்புடன் ஆரம்பித்தான் பேச்சை. “ அண்ணா, நீங்கள் இன்ஷ்யூர் பண்ணிக் கொண்டாலும் பண்ணிக் கொள்ளாவிட்டாலும் சரி, எங்கள் கம்பெனி மகிமைகளைப் பற்றி நான் சொல்லி விடுகிறேன். அப்புறம் உங்கள் இஷ்டம்போலச் செய்யுங்கள் ” என்றான்.

“ என்னது ! செய்யுங்களா ? இங்கே பார் ரங்கு, உங்கள் கம்பெனியில் பாலிஸி எடுப்பவர்கள் உடனே இறந்து போய், உடனே பணத்தைப் பெற்று, உடனே வீடு கட்டி வாழ்ந்து வருவதாகச் சொன்னாலும் சரி, அல்லது நீயே தலை கீழாக நின்று உயிரை விட்டாலும் சரி. நான் இன்ஷ்யூர் செய்து கொள்ளப் போவதில்லை. வீணாக மூச்சைப் போட்டு உடையாதே ! இதில் என் பிடிவாத குணத்தை நீ இன்னும் அறியவில்லை ” என்றார்.

“ அதற்கென்ன அண்ணா ! இப்பொழுது இல்லாவிட்டாலும், என்றைக்காவது ஒரு நாள் நீங்கள்

நிச்சயமாக என்னிடம் இன்ஷ்யூர் பண்ணிக்கொள் ளத்தான் போகிறீர்கள். செய்வதைச் சீக்கிரமே செய்து விடலாமென்றுதான் சொல்ல வந்தேன்.''

"என்னது? நிச்சயமாக உன்னிடம் இன்ஷ் யூர் பண்ணிக்கொள்ளப் போகிறேனு? ஏது அவ்வ ளவு நிச்சயமாகச் சொல்கிருய்? ஏதாவது மாயமந் திரம் போடப் போகிருயா?''

"அண்ணு, மந்திரம் மாயமெல்லாம் எனக் கெதற்கு? நீங்கள் இந்த ஊரில் என்னைப் பற்றிக் கேட்டுப் பார்த்தால் தெரியுமே! இந்த ரங்கு ஒரு ஆளை இன்ஷ்யூர் பண்ணுவதற் கென்று குறி வைத்து விட்டால், அப்புறம் அந்த ஆள் நிச்சய மாக என்னிடம் இன்ஷ்யூர் பண்ணிக் கொண்டான் என்று தான் அர்த்தம், அண்ணு! இதுவரை தவ றினதே கிடையாது. உங்களை மாதிரி எதற்கும் அசையாத பாராங்கல் ஆசாமிகள் எத்தனையோ பேரை நான் மசிய வைத்திருக்கிறேன் அண்ணு!''

"இருக்கலாம் ரங்கு! ஆனல் இந்த ஒரு இடத் தில் மட்டிலும் நீ தவருக முன் கூட்டியே நிச்சயம் செய்துகொண்டு விட்டாய். அதுதான் வருத்தப் பட வேண்டிய காரியம். என்னை மாதிரி எத்த னையோ பேரை ஜெயித்து விட்டதாக வல்லவா நீ சொல்கிருய். நான் எப்படித் தெரியுமா? உன்னை விடக் குள்ளநரித்தனம் பண்ணிய எத்தனையோ இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகளைப் 'பீட்' அடித்து வெற்றிக் கொடியை நாட்டி யிருக்கிறேனப்பா! உனக்கு நிதர்சனமாக ஆதாரங்கள் காட்டுகிறேன்

பார்" என்று உள்ளே போய் மூன்று உத்திர வாத ஒப்பந்தப் பத்திரங்களைக் கொண்டு வந்து ரங்குவின் கையில் கொடுத்தார்.

ரங்கு அவைகளை வாங்கி வாசித்துப் பார்த்தான். ஒன்றில் "இன்ஷ்யூர் செய்து கொள்ளும்படி நான் தங்களை என் ஆயுள் உள்ளவரையிலும் கேட்கவே மாட்டேன். இது சத்தியம்" என்று எழுதி அதனடியில் 'கந்தசாமிதாஸ்' என்ற ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டு கையெழுத்திட்டிருந்தார். இது போலவே மற்ற இரண்டு பத்திரங்களிலும் இரண்டு வெவ்வேறு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இதே போல எழுதிக் கையெழுத்துப் போட்டிருந்தார்கள். இவற்றைக் கண்டதும் ரங்கு பிரமிப்படைந்தான்.

" ரங்கு பிரமிப்படையாதே! நீ முதலில் பார்த்தாயே கந்தசாமிதாஸ் பத்திரம் அந்தக் கந்தசாமி எனக்கு வேஷ்டிகூடத் துவைத்துப் போடுவார். ஒரு முறை வேண்டுமென்றே பார்க்காதது போல அவர் மேல் எச்சில் துப்பிவிட்டேன். அதையும் பொருட்படுத்தாமல் 'ஒரு பாலிஸி' என்று அவர் ஆரம்பிக்கவே எனக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் என் வீட்டில் திருடவந்ததாக உடனே ஒரு பொய்கேஸ் ஜோடித்து போலீசுக்குக் கொண்டு போகும் சமயத்தில் தான் அவர் இம்மாதிரி எழுதிக் கொடுத்துவிட்டு விலகினார்" என்று தன் பிரதாபங்களைச் சொல்லிக்கொண்டே போனார்.

ரங்குவின் மனதில் 'பகீர் பகீர்' என்றது. ஆனால் அவன் அதைவெளிக் காட்டிக் கொள்ளாமல்

சாவதானமாக, “அண்ணா, என்னை வேண்டு மானால் அப்படிக் கேஸில் மாட்டிவிடுங்கள். நீங்கள் பார்த்து என்னை ஜெயிலுக்கு அனுப்பும்போது நான் போகத் தயாராக இருக்கிறேன்” என்றான்.

“கேள், ரங்கு, மற்ற இரண்டு ஏஜெண்டுகளின் கதையையும். அவர்கள் இருவரும் தங்கள் காரியத் தைச் சாதிப்பதற்காக என்னிடம் தாசானுதாசர் களாய்த்தான் நடந்துகொண்டார்கள். ஆனால் எவ் வளவு சொன்னாலும் என்னைவிட்டு நீங்காமல் பிடி வாதம் பண்ணினார்கள். கடைசியாக ஒருவனை எனக்கு வந்த கோபத்தில் மென்னியைப் பிடித் துக்கொண்டு ‘இந்த மாதிரி எழுதிக்கொடுக்கிறாயா? அல்லது உன்னை இப்படியே கொன்றுவிட்டு ஜெயி லுக்குப் போகட்டுமா?’ என்று கேட்டேன்” என் றார்.

“அண்ணா, நீங்கள் அவனைக் கொன்றிருந்தால் அவனுடைய இன்ஷ்யூரன்ஸ் தொகை அவனுக்கு உடனே கிடைத்திருக்குமே” என்றான் ரங்கு!

“கேலி இருக்கட்டும், ரங்கு; நடந்ததைக் கேள். உடனே அவன் இதை எழுதிக்கொடுத்து விட்டுத் தப்பினேம் பிழைத்தோமென்று ஓடியே போய்விட்டான். இன்னொரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டை என்ன செய்தேன் தெரியுமா? ஏழா யிரம் ரூபாய்க்குக் கடன் பத்திரம் எழுதி அவன் அறியாமலே அதில் அவன் கையெழுத்தை வாங்கி வைத்துக்கொண்டு அவனை மிரட்டினேன். உடனே அவன் வழிக்கு வந்து இதேபோல் எழுதிக்

கொடுத்துவிட்டு ஓடியே போய்விட்டான். ரங்கு, இன்னும் உனக்கு நம்பிக்கை இருக்கிறதா நான் இன்ஷ்யூர் பண்ணிக் கொள்வேனென்று?" என்று தலைகுனிந்து கொண்டிருந்த ரங்குவிடம் கேட்டார்.

"நம்பிக்கையே எங்கள் கம்பெனியின் மூல பலம், அண்ணா. இதை நீங்கள்........." என்று ஏதோ சொல்லவந்தான் ரங்கு. "எழுந்து வெளியே போறியா கல்தாக் குடுக்கணுமா?" என்று அவன் பிடரியில் கைவைத்துவிட்டார் வேதாந்தமையங் கார்.

அவர் தன் மென்னியையும் பிடித்து விடு வாரோ என்று பயந்துவிட்ட ரங்கு எழுந்து வெளியே ஓடிப்போய்விட்டான். ஆனால் வழக்கம் போல மறுநாள் முதல் அவர் வீட்டில் ஒழுங்காக ஆஜராகி வந்தான் ரங்கு. ஆனால் அவன் இன்ஷ் யூரன்ஸ் விஷயத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாமலே அவரிடம் பழகிவந்தான். இவ் வாறு ஒரு மாதம் கழிந்தது. அன்று நடந்த விவா தத்தை இருவருமே மறந்து விட்டார்கள். ரங்கு நல்லவழிக்குத் திரும்பி விட்டானென்று வேதாந்த மையங்கார் எண்ணிக்கொண்டார்.

ஒரு நாள் வேதாந்தமையங்கார் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கையில் கால் நழுவி உள்ளே விழுந்துவிட்டார். அவர் வீட்டு வாச லில் விறகு பிளந்துகொண்டிருந்த ரங்குவின் காது களில் 'தடால்' என்று சத்தம் கேட்டது. உடனே

அவன் கிணற்றண்டை ஓடிவந்து பார்த்தான். முன் பின் யோசிக்காமல் வாளிக் கயிற்றை விட்டத்தில் கட்டிவிட்டு அந்தக் கயிற்றின் வழியாகக் கிணற்றினுள் இறங்கிவிட்டான். வெகு சிரமப்பட்டு அவரைத் தூக்கி வெளியிலுள்ளவர்களின் உதவியினுல் மேலே கொண்டுவந்து விட்டான். பிறகு அவருக்கு மூர்ச்சை தெளிவித்துக் காபி கொடுத்து அருகிலிருந்து விசிறிக்கொண்டிருந்தான் ரங்கு.

மூர்ச்சை தெளிந்தவுடன் வேதாந்தமையயங்கார், ரங்குவைப் பார்த்து "அப்பா ரங்கு நீ மட்டும் சமயத்தில் வரவில்லையானுல் இதற்குள் என் உயிர் போயே இருக்கும். பகவானைப் போல என்னைக் காப்பாற்றினுய். இதற்கு நான் எந்த விதத்தில் கைம்மாறு செய்யமுடியும்!" என்று தன் நன்றியைத் தெரிவித்தார்.

"'எந்த விதத்தில் கைம்மாறு செய்ய முடியும்' என்று கவலைப்படுகிறீர்களே, அண்ணு! நான் வெகு நாட்களாகக் கேட்டுவரும் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியை எடுத்துக்கொண்டால் அதுவே போதுமானது" என்ருன் ரங்கு.

பலஹீனமாக இருந்த வேதாந்தமையங்கார் இதைக் கேட்டவுடன் குபீரென்று எழுந்து ஆங்காரத்தோடு "நீ அதைப்பற்றிப் பேசாமலிருக்கிருயா அல்லது உன்னை இந்தக் கிணற்றில் தள்ளிவிடட்டுமா?" என்று வலது கையை ஓங்கிவிட்டார். "கோபித்துக்கொள்ளாதீர்கள், அண்ணு. அப்புறம் உங்களை சாவகாசமாக வந்து பார்க்கிறேன்"

என்று நடையைக் கட்டினுன் ரங்கு. வேதாந்த மையங்கார் தனக்கு அவன் செய்த அரிய உதவி யையும் மறந்துவிட்டு "டே ரங்கு, நீ வராமலே ஒழிந்துபோய் விடு" என்று கத்திஞர்.

தான் சொல்லிவிட்டுப்போன படியே ரங்கு மறு நாள் சாவகாசமாக வந்து வேதாந்தமையங் காரை க்ஷேமம் விசாரித்தான். அவர் வேண்டா வெறுப்பாக "நீ இங்கே வராமலிருந்தால் நான் சௌக்கியமாகவே இருப்பேன்" என்ருர். இதற்கு மேல் ஒருவனை என்ன சொல்வதென்றே அவருக் குத் தோன்றவில்லை. வெகுநேரம் யோசித்த பிறகு அவருக்கு ஒரு வழி தோன்றியது. அவன் வரும் போதெல்லாம் ஏதாவது மிகக் கடுமையான வேலை களைக் கொடுத்து விரட்டுவது என்று தீர்மானித் தார்.

ஒரு நாள் அவன் வந்தவுடன் "ரங்கு, என் மோதிரம் நம்மூர் குளத்தினுள் விழுந்துவிட்டது, அதைத்தேடி எடுத்துவரவேண்டும்" என்ருர். ரங்கு நேராகக் குளத்திற்குச் சென்று அவர் குறிப்பிட்ட இடத்திலுள்ள சகதி முழுவதையும் நாலுமணிநேர மாக பிசைந்து பிசைந்து பார்த்தான். குளமே கலங்கிப் போய்விட்டது. ஆனல் மோதிரம் அகப்பட வில்லை. "அகப்படவில்லை" என்று அவரிடம் போய்ச் சொல்ல அவனுக்கு வெட்கமாகஇருந்தது. கடைசியாக மோதிரத்தோடுதான் ரங்கு அவரிடம் சென்ருன். அவர் மோதிரத்தை வாங்கிப் பார்த்து விட்டு "ரங்கு என் மோதிரம் மேஜைக்குள்ளேயே

இருக்கிறதே! இது யாருடையதோ தெரியவில்லை. அதை நீயே வைத்துக்கொள்'' என்றார். தான் விலை கொடுத்து வாங்கிய மோதிரம் தனக்கே பரிசாகக் கிடைத்ததை நினைத்து ரங்கு தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான்.

இன்னொரு சமயம் இரவு பன்னிரண்டு மணிக்கு ரங்குவைக் கூப்பிட்டனுப்பினார் வேதாந்தமையங்கார். அவன் வந்தவுடன், பயங்கரமான ஒரு காட்டுப் பாதை வழியாகப் போய் அப்பொழுதே ஒரு பச்சிலை பறித்துக் கொண்டு வர வேண்டுமென்று அவனுக்கு உத்திரவிட்டார். அந்த க்ஷணமே புறப்பட்டு விட்டான் ரங்கு. வரும் வழியில் திருடர்களிடம் அடி, உதைகளைப் பெற்றுக்கொண்டு பச்சிலையுடன் திரும்பிவந்தான் ரங்கு.

புலிப்பால் கொண்டுவரச் சொல்வதைத் தவிர வேறு எல்லாவிதமான கடின பரீக்ஷைகளையும் செய்து பார்த்து விட்டார் வேதாந்தமையங்கார். ரங்குவோ, எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு "பாலிஸி'' என்று அவரிடம் முழங்கையைச் சொறிந்துகொண்டு நின்றான். வேதாந்தமையங்காருக்கு அடக்கமுடியாத கோபம் வந்துவிட்டது. பக்கத்தில் கிடந்த விறகுக் கட்டையினால் அந்த இடத்திலேயே அவன் மண்டையைப் பிளந்துவிடலாமா என்று நினைத்தார் அவர். அவருடைய நினைப்பைக் குறிப்பால் உணர்ந்துகொண்ட ரங்கு அங்கிருந்து மெதுவாக நகர்ந்து விட்டான்.

மறுநாள் அவன் வேதாந்தமையங்கார் வீட்டுக்குப் போனபோது அவர் கவலைக் கடலில் ஆழ்ந்

திருந்தார். ரங்கு அதைக் காண சகிக்காதவனாய் "அண்ணா, நீங்கள் ஏது இப்படித் துக்க சாகரத்தில் அமிழ்ந்திருக்கிறீர்கள்!" என்று அன்போடு விசாரித்தான். "உன்னிடம் சொல்லி என்ன பயன்? சாமளவல்லிக்கு என்னால் வரன் தேடிக் கொண்டு வர முடியவில்லையே என்று உன் மன்னி என்னை இவ்வளவு நேரமும் திட்டினாள். நானும் அலையாத இடம் பாக்கியில்லை. இதற்கு மேல் நான் என்ன செய்வது சொல்" ன்று அழாத குறையாகச் சொன்னார்.

"என்ன அண்ணா, இதை நீங்கள் முன்னமே சொல்லி யிருந்தால் இதற்குள்ளாகக் கலியாணம் நடந்திருக்குமே" என்றான் ரங்கு. தன்னால் செய்ய முடியாத காரியத்தையா இவன் செய்துவிடப் போகிறான் என்று அலக்ஷியமாய் எண்ணிய வேதாந்தலமையங்கார் "ஏது உனக்குத் தெரிந்த வரன் எங்கேயாவது இருக்கிறானா?" என்று கேட்டார்.

"இருக்கிறதோ இல்லையோ. இந்த ரங்கு முயற்சி எடுத்தால் எதுதான் முடியாது!" என்று ஒரு போடு போட்டான் ரங்கு.

"ரங்கு, அப்படியானால் உனக்குக் கோடி புண்ணியமுண்டு. சாமளவல்லிக்கு இந்த மாதமே கலியாணம் நடத்திவைக்க வேண்டும். இது உன் பொறுப்பு" என்று மிகவும் வாஞ்சையோடு சொன்னார்.

ஆசாமி தன்னிடம் சரியானபடி சிக்கிக் கொண்டு விட்டார் என்று ரங்கு தெரிந்து கொண்டான். வேதாந்தமையங்காரின் குடுமி தன் கைக்குள் அகப்பட்டுக் கொண்டது போலவே அவன் அதிலிருந்து மிகவும் தைரியமாகவே அவரிடம் பேசினான். "அண்ணா, நீங்கள் சொல்கிற படியே நான் எப்படியாவது ஒரு வரனைப்பார்த்துக் கலியாணத்தை இந்த மாதத்திலேயே முடித்து விடுகிறேன். ஆனால்........ஆனால்......அண்ணா, சொல்லவும் பயமாக இருக்கிறதே........அதற்குப் பிரதியுபகாரமாக...." என்று ரங்கு பழையபடி தயங்கினான்.

"எது வேண்டுமானாலும் செய்யத் தயார்" என்று துணிந்து சொல்லி விட்டார் வேதாந்தமையங்கார். அவர் இவ்வளவு சொன்னால் போதாதா! "நான் இதை முடித்து விட்டால் நீங்கள் எங்கள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் உடனே ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு பாலிஸி எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வளவு தான்" என்று பேச்சைச் சுருக்கினான் ரங்கு. "சாமளவல்லிக்குச் கலியாணம் ஆகிவிடுமென்றால் நான் பத்தாயிரம் ரூபாய்க்கு வேண்டுமானாலும் இன்ஷ்யூர் செய்து கொள்ளுகிறேன்" என்றார் ஊக்கமாக.

ரங்கு தேன் குடித்த நரிபோல ஆகி விட்டான். "அண்ணா, பத்தாயிரத்துக்கு பேச்சு மாறவே கூடாது. நீங்கள் வரனுக்காக எங்கேயும் போக வேண்டாம். இதோ நானே இருக்கிறேன். நீங்கள்

இன்ஷ்யூரன்ஸ் பாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியது. உடனே முகூர்த்தத்திற்கு நாள் பார்க்க வேண்டியதுதான். வரதக்ஷிணை அது இது ஒன்றுமே வேண்டியதில்லை எனக்கு!" என்றான்.

"நிஜம்மாகவா ரங்கு? எடு பாரத்தை" என்றார். பூர்த்தி செய்து கொடுத்தார். முகூர்த்தத்திற்கும் நாள் பார்க்க ஆரம்பித்தார்கள். திடீரென்று வேதாந்தமையங்கார் "அப்பா ரங்கு எல்லாம் மங்களமாக முடியப்போகிறது. ஆனால் ஒரு நிபந்தனை ஒன்று நான் சொல்ல வேண்டி இருக்கிறது. என் மருமகனாகை ஆவதற்கு நீ இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிலிருந்து விலகி விட வேண்டும்" என்றார்.

"அண்ணா—இல்லை, மாமா, நீங்கள் சொல்வதற்கு முன்பே நான் விலகிக் கொண்டேன். இதோ பாருங்கள் நீங்கள் பூர்த்தி செய்த பாரமும், என்னுடைய ராஜீனாமாக் கடிதமும் ஒன்றாகவே கம்பெனிக்கு அனுப்பப் போகிறேன். உங்களிடம் பட்ட அவஸ்தைகளுக்கு அப்புறம் ஒருவன் இந்த வேலையில் இருக்க முடியுமா?" என்றான் ரங்கு.

"அப்படியானால் நீ எனக்கேற்ற மருமகன்தான் ரங்கு. நீயும் கடைசியில் வெற்றியடைந்தாய். நானும் சாமளாவல்லிக்கு வரன் தேடி விட்டதனால் ஒரு வெற்றியடைந்து விட்டேன்" என்றார் வேதாந்தமையங்கார்.

ரங்கு தன் அப்பாவிடம் தன் கலியாண விஷயத்தைப் பற்றிச் சொன்ன போது அவர் "அடபாவி, ஒரு இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி தேடுவதற்காக

உன் வாழ்க்கையையே தியாகம் பண்ணிக் கொண் டாயே" என்று வருந்தினர். மூன்று தீவிரமான இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகளைத் தோற்கடித்து வெற் றிக் கொடி நாட்டிய வேதாந்தமையங்காரையே ஜெயித்து மகத்தான வெற்றியை நிலை நாட்டி விட் டதில் பெருமை கொள்ளும் ரங்குவிற்கு தான் அனுப விக்கப் போகும் அழகற்ற இல்லற வாழ்க்கை ஒரு பிரமாதமான கஷ்டமாகத் தோன்றவில்லை. அவர் களுடைய ஒப்பந்தப்படி, சிரஞ்சீவி மாஜி இன்ஷ் யூரன்ஸ் டி. எம். ரெங்கசாமிக்கும், செளபாக்கியவதி சாமளவல்லிக்கும் சுபயோக சுபதினத்தில் மணம் நடந்தேறியது. ரங்குவின் வெற்றியை விடத் தன் வெற்றியே மேலானது என்று வேதாந்தமைய் யங்கார் தன் மனைவியிடம் அடிக்கடி பெருமை யடித்துக்கொள்வார்.

# வசீகரண மோதிரம்

ஒருநாள் எனக்கு முன்பின் தெரியாத ஆசாமி ஒருவர் என்னிடம் வந்தார். அவர் உலக விவகாரங்களைப்பற்றி சுமார் இரண்டுமணி நேரம்வரை பேசிக்கொண்டிருந்தார். என்னிடம் அவர் வர வேண்டிய காரணத்தை யறியாமல் நான் திகைத்துக் கொண்டிருக்கையில் அவர் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு மோதிரத்தை எடுத்தார். அப்பொழுதே எனக்கு விஷயம் விளங்கிவிட்டது. 'சார்!' என்றார் அவர். 'என்ன?' என்றேன் ஆச்சரியத்தோடு. 'இது ரொம்ப அதிசயமான மோதிரம். இதற்கு வசீகரண சக்தி யிருக்கிறது. இதை நான் கல்கத்தாவில் வாங்கினேன். இது என்னிடம் வந்ததுமுதல் எனக்கு வெற்றிமேல் வெற்றிதான். உங்களைப் போன்றவர்களுக்கு அவசியமானது என்று தெரிந்துதான் இதை நான் உங்களிடம் கொண்டுவந்தேன். ஆகையால் மறுத்துப் பேசாமல் வாங்கிக் கொள்ளுங்கள். விலை ரூபாய் பத்துத்தான்' என்று சொல்லிக்கொண்டே மோதிரத்தைக் கையில் கொடுத்தார்.

மோதிரத்தை வாங்கிப் பார்த்தேன். தங்க முலாம் பூசியதுதான். பத்தணா பெறும். மோதிரம்

வேண்டாமென்று சொல்லி விடலாமா என்று யோசித்தேன். ஆனால் அந்த மனுஷர் என்னைக் கௌரவமாக நினைத்து என்னிடம் அதைக் கொடுக்கையில் நான் அந்த மதிப்பைக் கெடுத்துக்கொள்ளலாமா? 'என்னமோ சார்! எனக்கு இவைகளில் நம்பிக்கையே கிடையாது. இருந்தாலும் உங்களுடைய சொல்லுக்காக இதை வாங்கிக் கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டு ரூபாயையும் கொடுத்துவிட்டேன்.

வந்த ஆசாமி ரூபாயுடன் சந்தோஷமாகப் போய்விட்டார். அந்த மோதிரம் ஒருவேளை அவர் சொல்லியபடி செய்தாலும் செய்யலாம் என்று நானும் சந்தோஷமடைந்தேன். அந்த ஆசாமி மோதிரத்தை வைத்துக்கொண்டு என்னுடன் பேசியதனால் தானே அவர் என்னிடம் வெற்றி பெற முடிந்தது! மோதிரத்தின் சக்தியை விளக்க வேறு அத்தாக்ஷி என்ன வேண்டும்? மோதிரத்தை நடுவிரலில் போட்டுக்கொண்டேன். அந்த நிமிஷம் முதலே வெற்றி என்னை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் என்று எண்ணினேன். சுமார் ஒரு மாதமாகியும் ஒரு வெற்றியாவது வந்து சேர்ந்தபாடில்லை. பெரிய வெற்றியாயிருந்தால் நடந்துவர நாளாகுமென்று என் மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டேன்.

தாமிரவர்ணி நதிக்குத் தங்க நகைகளில் மோகம் அதிகம். இதையறிந்துதான் நமது முன்னோர்கள் நதிகளைப் பெண்களாகப் பாவித்து வந்தி

ருக்கிறார்களென்று தோன்றுகிறது. ஆனால் நான் போட்டிருந்தது தங்கப்பூச்சு மோதிரம் என்று தெரிந்து கொள்ளாமலே ஒருநாள் நான் குளிக்கையில் அதை என்னிடமிருந்து அபகரித்துக் கொண்டது. ஆற்றில் விழுந்த மோதிரம் அழுதாலும் வருமா? ஆற்றினிடமல்லவா மோதிரம் இருக்கிறது! அதனால் அது என்னிடம் வெற்றியடைந்து விட்டதில் ஆச்சரியமில்லை. அச்சமயத்தில் தான் அதற்காக நான் கொடுத்த ரூபாயின் மதிப்புத் தெரிந்தது. ஆனால் ஒருவிதத்தில் மகிழ்ச்சி. மோதிரம் என் கையிலேயே கிடந்தால் அதைப்பற்றி அநேகரிடம் பிரஸ்தாபிக்க வேண்டிவரும். அவர்கள் கேட்கும் ஒவ்வொரு அனாவசியமான கேள்விகளுக்கும் பதில் சொல்லி ஆகவேண்டும். அந்தத் தொல்லை இந்தத் தோல்வியினால் ஒழிந்தது. சில மாதங்களில் மோதிரத்தைப் பற்றிய விஷயம் மறந்து விட்டது.

அன்று தைப்பூசத்திற்கு வந்திருந்தவர்கள் கூட்டம் கூட்டமாய் தங்கள் தங்கள் ஊருக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். நான் ஆற்றைக் கடந்துகொண்டிருக்கையில் என் பின்பக்கம் 'அத்தே, இன்னை பாருங்க!' என்றது ஒரு குரல். திரும்பிப் பார்த்தேன். அவ்வாறு சொன்னது ஒரு பெண்தான். ஆனால் அவளுடைய குரலிலேயே லயித்துவிட்டது என் மனம். அவளும் என்னைப் பார்த்துவிட்டுத் தலையைக் கவிழ்ந்துகொண்டாள். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போய் விட்டேன்.

மேற்படி சம்பவம் நடந்து ஒரு வருஷமாயிற்று. எனக்கு விவாக ஏற்பாடுகள் நடந்தது. காதல் மணம்தான் நான் விரும்பியது. இந்தக் காலத்தில் 'காதல் மணம்! காதல் மணம்!!' என்று கதறிக் கொண்டிருந்தால் நித்தியப் பிரமச்சாரியா யிருக்க வேண்டியதுதான். நான் மணக்க விரும்பியது தைப்பூசத்தன்று கண்ட கன்னியைத்தான். அவளுக்கு எந்த ஊரோ? யார் கண்டது? ஆகவே அந்த எண்ணத்தை விட்டுவிட்டுக் கட்டாய மணமே செய்துகொள்ளும்படி நேரிட்டது.

கலியாணம் முடிந்தது. கட்டாய மணம் முன்னைப்போல் எனக்கு அவ்வளவு வெறுப்பாகத் தோன்றவில்லை.

ஒருநாள் நான் ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டு தினசரி ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தேன். சுந்தரா (என் மனைவி) காய்கறி நறுக்கிக்கொண்டே என்னோடு இடையிடையே சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று ஒரு காரணமுமில்லாமல் 'கல கல' வென்று சிரித்தாள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

'என்ன! அவ்வளவு அதிசயம்?'

'இல்லே, இந்த மோதிரத்தைப் பார்த்தேன். உடனே அத்தை சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. அவள் சொன்னது சரியாப்போச்சுன்னு தான் சிரித்தேன்.'

'அது யார் அத்தை? அவள் என்ன அப்படிச் சொல்லி விட்டாள்?'

'எங்க ஊரிலே எனக்கு ஒரு அத்தை யிருந்தா. அவகூட நான் தைப்பூசம் பார்க்க வந்திருந்தேன். அப்போ ஆத்துக்குள்ளே இந்த மோதிரத்தை நான் கண்டெடுத்தேன். உடனே அவ 'தைப் பூசமுமா தங்கம் கெடச்சிருக்கு. ஒனக்கு மனசுக்குப் புடிச்ச மாப்பிள்ளேக்கே நீ வாழ்க்கைப்படுவாய்' என்ருள். அவ வாய்க்கு முத்துக்கள்தான் போட வேண்டும்'.

'எங்கே, மோதிரத்தைக் கொண்டுவா பார்க்கட் டும்' என்றேன். சுந்தரா மோதிரத்தை என் கை யில் கொடுத்தாள். என்ன ஆச்சரியம்! நான் ஆற் றில் தொலேத்த அதே மோதிரம்தான்!

'அடடா! தைப்பூசத்தன்று 'அத்தே, இன்ஞெ பாருங்க' என்று சொன்ன அந்தச் சுந்தராவா நீ? இது என்னுடைய சொந்த மோதிரம்தான். இதைத் தாஞெ நீ அன்று கண்டெடுத்தது?'

'இதைத்தான் நான் அன்று கண்டெடுத் தேன். அப்போது நீங்கள் சற்றுதூரத்தில் நின்று கொண்டிருந்தீர்களல்லவா? உடனே நான் இந்த மோதிரத்தையும் என்னேயும் உரிமையாக்கிக் கொள்வதற்கு நீங்கள்தான் தகுதியுள்ளவர்க ளென்று நிச்சயித்துவிட்டேன். ஆனல் அதை வெளியிடமுடியாமல் போயிற்று. இப்போது என் விருப்பப்படியே காரியம் முடிந்துவிட்டது. இனி மேல் மோதிரமும் நானும் உங்களுக்குத்தான் சொந் தம். இதில் சந்தேகமென்ன?'

'அட பைத்தியக்காரி, இது என்னுடைய சொந்த மோதிரம்?'

'இல்லையென்று யார் சொன்னார்கள்?'

'நீ சொல்வது சரி. அந்தவித பாத்தியதையும் இருக்கிறது. மேலும் இதே மோதிரத்தை நான் இரண்டு வருஷத்துக்கு முன்பு ஆற்றில் தொலைத்து விட்டேன். அதையல்லவா சொல்கிறேன்'

'நிஜம்மாகவா?'

'பொய்யா சொல்கிறேன்?' என்று சொல்லி விட்டு மோதிரத்தின் விருத்தாந்தத்தையும் எடுத்துச் சொன்னேன். அவ்வளவுதான்! மோதிரம் பட்ட பாட்டைச் சொல்லமுடியாது. 'நான் தைப்பூசத் துக்கு வருவேனென்று தெரிந்தே வசீகரண மோதி ரத்தைத் தூதாக ஆற்றினுள் போட்டு என்னை மயக் கிப் பிடித்துக் கொண்டுவரும்படி செய்தீர்களோ?' என்றாள் சுந்தரா.

மோதிரத்தின் மகிமை இவ்வாறிருக்குமென்று நான் கனவிலும் கருதவில்லை. அதை என்னிடம் விற்ற மனிதரை வாயார வாழ்த்தினேன். அவருக் குப் பதினயிரம் ரூபாய் கூடக் கொடுத்திருக்கலா மென்று தோன்றிற்று. நான் விரும்பிய அதே பெண்ணைத் தேடிப் பிடித்து, அவள் என்மீது ஆசைகொள்ளும்படி செய்தது மல்லாமல் கலியாண மும் நடந்தேறும்படிசெய்த அந்த மோதிரத்தைத் தெய்வமாகவே பாவித்தோம். மோதிரத்தின் மகி மையைத் தெரிந்து கொண்டபின் சுந்தரா அதைக் கொடுக்கமாட்டேனென்று வாதாடினாள். எனக்கும்

அதை ஒரு நிமிஷம் விட்டுப்பிரிய மனமில்லை. அது பழையபடி தொலைந்துபோய்விடக் கூடாதென்ற பயத்தினால்தான் நான் அதை போட்டுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினேன். பகலில் நானும் இரவு முழுதும் சுந்தராவும் மோதிரத்தை அணிந்து கொள்வதென்ற தீர்மானத்துடன் அந்தக் குட்டிக் கலகம் ஓய்ந்தது.

சிலநாளைக்குப் பின் நான் தற்செயலாக ஒரு பத்திரிகாசிரியரிடம் என் வசீகரண மோதிரத்தின் பெருமையையும், அதனால் ஏற்பட்ட எதிர்பாராத நன்மையையும்எடுத்துச்சொன்னேன்.நான்சொன்னதை ஆசிரியர் வெகு சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். பின்பு அவர், 'சார், நான் நடத்தி வரும் மாதப் பத்திரிகைக்கு கதை, கட்டுரைகள் எழுதுவதற்குச் சரியான உதவி ஆசிரியர் அகப் படாமல் திண்டாடினேன். நீங்கள்தான் அந்த வேலைக்குத் தகுதியுள்ளவர்களென்று நான் தெரிந்துகொண்டேன். ஆகவே தயவுசெய்து உதவி ஆசிரியர் பதவியைத் தாங்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என வேண்டினார்.

வேலை கிடையாமல்தானே நான் இவ்வளவு காலமாக வருத்தப் பட்டுக்கொண்டிருந்தேன். ஆசிரியரே விரும்பிக்கூப்பிடுகையில் மாட்டேனென்று சொல்வேன்? மறுநாள் முதலே நான் அந்த வேலையை ஒப்புக்கொண்டேன். இது என் வசீகரண மோதிரத்தால் ஏற்பட்ட வெற்றியில்லையென்று யார்தான் சொல்லமுடியும்?

முதல்முதலில்என்னிடம்மோதிரத்தைவிலைக்கு விற்ற ஆசாமியை நான் இதுவரை பார்க்கவே யில்லை. அவர் ஏதோ ஓர் உயர்ந்த பதவியிலிருந்தா ரென்று கேள்விப்பட்டேன். அவர் அந்த மோதி ரத்தை என்னிடம் விற்ற மறுநாள்தான் அவருக்கு அந்தப் பதவி கிடைத்ததாம். அதற்கு முன்னல் அவர் அந்தப் பதவிக்காக எவ்வளவோ முயன்றும் கிடைக்கவில்லையாம்.

# சாந்தசாமியின் ஜாதகம்

மாஜி சைகிள் ரிப்பேரர் சாந்தசாமி, எதிரே யிருந்த கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே தன் அறையில் உட்கார்ந்திருந்தான். "கணீர், கணீர்" என்று மணி பன்னிரண்டு அடித்தது. சாந்த சாமியும் "படார், படார்" என்று பன்னிரண்டு தடவை தன் தலையில் அடித்துக் கொண்டான். தனக்கு முப்பதாவது வயசு ஆரம்பிக்கும் நேரத்தை மணி அடித்துக் காட்டிய அந்தக் கடிகாரத்தை உடைத் துத் தூளாக்கி விடலாமா என்று யோசித்தான். அந்தக் கடிகாரம் தன்னிடம் ரிப்பேருக்கு வந்தது என்பது ஞாபகத்துக்கு வரவே அவன் தன் ஓங்கிய கையை மேஜையின் மீது குத்தினான். உடனே மே ஜையின் மேலிருந்த அவனுடைய ஜாதகம் ஒரு துள்ளுத்துள்ளி அவன் மடியில் வந்து விழுந்தது. "சை" என்று சொல்லி விட்டு யோசனையில் ஆழ்ந் தான். அவனுடைய முப்பதாம் வயதின் ஆரம்பம் அவனுக்கு அவ்வளவு வெறுப்பைக் கொடுத்தது.

அவனுடைய ஜாதக விசேஷப்படி, முப்பதா வது வயதில் அவன் களவு செய்து, அதனால் ஜெயி லுக்குப் போக வேண்டி வருமென்று முன்னமே

நன்ருகத் தெரிந்து கொண்டிருந்தான். சோதிடத்தில் அவனுக்கு அபார நம்பிக்கை உண்டு. சில காலத்திற்கு முன் அவனே ஒரு ஜோசியனுக இருந்தான். அவன் நடத்தி வந்த தொழில்களில் இதுவும் ஒன்று. அவனுடைய ஜாதகத்திலுள்ள கிரகங்கள் இடம் விட்டு இடம் மாறும் போது, அவனும் தொழில்விட்டுத் தொழில் மாறிக் கொண்டே வந்து, கடைசியாக கடிகார ரிப்பேரராகி ஆறு நாள் தான் ஆயிற்று. அதற்குள்ளாக அவனுடைய முப்பதாம் வயதின் ஆரம்பமும் வந்து விட்டது.

கண்யமாகவே வாழ்க்கை நடத்திவரும் தனக்குச் சிறைவாசம் எந்த வகையில் வரக் கூடும் என்று சாந்தசாமி தனக்குள்ளேயே பல கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான். தான் எவ்வகையிலும் களவு செய்ய முடியாது என்ற ஒரே முடிவைத்தான் அவன் மூளை திரும்பத் திரும்பக் கூறியது. ஆனல் "களவு செய்து அதனுல் சிறைவாசம்" என்று உள்ளங்கை வெள்ளரிக்காய் போல, அவ்வளவு தெளிவாகச் சொல்லியது அவனுடைய ஜாதகம். களவுக்கும் அவனுக்கும் வெகு தூரம். பொய் சொல்லவோ தெரியவே தெரியாது. (இதனுலேயே அவன் ஜோசியத் தொழிலை விட்டு விட நேர்ந்தது. அவன் நல்லவனுக இருந்த ஒரு குற்றத்தைத் தவிர வேறு ஒரு குற்றமும் அவனிடம் கிடையாது.)

*　　　　*　　　　*

சாந்தசாமியின் பெற்ருேர்கள் வெகு காலத்திற்கு முன்னமேயே இறந்து விட்டார்கள். அவனுக்கு உறவு என்று சொல்லக் கூடியவர்கள், அவ

னுடைய அண்ணன் கைலாசம் ஒருவன் தான். கைலாசத்துக்கும் சாந்தசாமிக்கும் வயதில் ஐந்து நிமிஷங்கள் தான் வித்தியாசம். (இருவரும் இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்திருந்தார்கள்.) பெற்றோர்கள் இறந்தவுடன், அண்ணனும் தம்பியும் தங்கள் வீடு வாசலை விற்றதில் ரொக்கமாக ஆயிரம் ரூபாய் வந்தது. அதை ஆளுக்கு ஐநூருகப் பங்கு வைத்துக் கொண்டார்கள்.

கைலாசத்துக்கு ஏராளமாகப் பணம் திரட்ட வேண்டுமென்ற ஆசை. ஆகையால் தான் தம்பியிடம் விடைபெற்றுக் கொண்டு ரெங்கூனுக்குப் போய் விட்டான். சாமி, நாணயத்துடன் பல தொழில்களில் முயற்சி செய்ததன் பலனுகத் தன் ஆஸ்தி முழுவதையும் இழந்து விட்டான். அவன் ஜோசியத் தொழிலைக் கைவிட்ட பிறகு மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய ஜாதகத்தில் கண்டிருந்தபடியே எதிர்பாராத இடத்திலிருந்து சிறிது பண உதவி கிடைத்து வந்தது. அதாவது இதுவரை தகவலே தெரிவிக்காமலிருந்த அவனுடைய அண்ணன் கைலாசம் யார் மூலமாகவோ தன் தம்பியின் கஷ்ட நிலைமையை அறிந்து, ரெங்கூனிலிருந்து இருபது ரூபாய் மணியார்டர் அனுப்பியிருந்தான். அதன் பின்னல் அவனிடமிருந்து ஒரு கடிதமும் வந்தது. தான் ஒரு பெரிய கடையில், மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்து வருவதாகவும், அவனுக்கு மாதா மாதம் பத்து ரூபாய் அனுப்புவதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான்.

அண்ணன் அனுப்பி வந்த ரூபாயைக் கொண்டும், சில சில்லறை ரிப்பேர்கள் செய்தும் ஒரு தினுசாகத் தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். இவ்வாறிருக்கையில் திடீரென்று ஆறுமாத காலமாக அண்ணனிடமிருந்து பணமோ கடிதமோ ஒன்றும் வரவில்லை. சாந்தநாயகம் (சாமிக்கு 'நாயகம்' என்றும் பெயர்) எழுதிய இரண்டு கடிதங்களுக்கும் பதிலில்லை.

இதற்கிடையே நாயகத்தின் வாழ்க்கையில் திடீரென்று காதலும் வந்து குறுக்கிட்டு விட்டது. அவன் படங்களுக்குச் சட்டம் போடும் தொழிலை நடத்தி வந்த போது சுந்தரி என்னும் கன்னிகை தன் போட்டோ படத்திற்குச் சட்டம் போடுவதற்காக அவனுடைய கடைக்கு வந்தாள். கடை வாசலிலுள்ள சாக்கடையின் மேல் போடப்பட்டிருந்த பலகையின் மேல் அவள் நின்று கொண்டிருந்த போது பலகை அவளுடைய பளுவைத் தாங்க முடியாமல் 'சடார்' என்று முறிந்து விடவே அவள் சாக்கடைக்குள் விழுந்து விடப் பார்த்தாள்.

ஆனல் தயாராகக் காத்துக் கொண்டிருந்த இரண்டு கைகள் சமய சஞ்சீவிகளாக உதவி, அவளைப் பிடித்து நிறுத்தி விட்டன. அக்கைகள் நாயகத்தின் கைகளாகவே இருந்தன. நாயகத்தின் கைகள் தன் மீது பட்டவுடன் சுந்தரிக்கு உடம்பு 'ஜில்' லென்று ஐஸ் கட்டி போலக் குளிர்ந்து விட்டது. ஆனல் காதல் பாணங்களோ சுந்தரியை நெருப்புப் போலத் தகிக்க ஆரம்பித்தன. உஷ்ணத்திற்கும் குளிர்ச்சிக்கும் நடுவே அகப்பட்டுக்

கொண்ட சுந்தரிக்கு, அந்த சீதோஷ்ண நிலைமை யிலிருந்து வெளியேறுவதற்கு சாந்தநாயகத்தைக் கணவனுக அடைவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகையால், தான் கொண்டு வந்த போட்டோவை தன் காதலனை நாயகத்திடமே கொடுத்துத் தன் னைக் காதலிக்கும் படி சொல்லி விட்டுப் போய் விட் டாள். சாந்தநாயகத்திற்குச் சுந்தரியின் மீது முன் னமே ஏற்பட்டிருந்த ஆசை இப்பொழுது காத லாக மலர்ந்து தவழ்ந்தது.

* * *

கடிகாரத்தின் எதிரே ஒரு மணி நேரமாக ஆழ்ந்த யோசனையிலிருந்த சாந்தநாயகத்திற்கு உலகத்தின் மீது அளவில்லாத வெறுப்பு ஏற்பட் டது. "யோக்கியமாக நடக்கும் போதே தண்டனை கிடைக்கப் போகிற தென்ருல், என்ன உலகம் இது!" அவனுடைய நிலைமையில் யார் இருந்திருந் தாலும் இப்படித்தான் சொல்லியிருப்பார்கள்.

நாயகம் தன்னிடமிருந்த கடிகாரங்களை யெல் லாம் அதனதன் சொந்தக்காரர்களிடம் கொண்டு போய்க் கொடுத்து அவர்களிடம் ரசீதும் பெற்றுக் கொண்டான். ஒரு வேளை அவர்களில் யாராவது நாயகம் தங்கள் கடிகாரத்தைக் கொடுக்கவே இல்லை யென்று வழக்குத் தொடர்ந்து தன்னைச் சிறைச் சாலைக்கு அனுப்பிவிடலாமல்லவா! அதற்காகவே அவன் மிகுந்த முன் எச்சரிக்கையோடு ஒவ்வொரு வரிடமும் ரசீது பெற்றுக் கொண்டான்.

காதல் பாதை முனிசிபல் ரோடுகள் போலக் கரடுமுரடானது என்றும் ரோஜாக் குச்சிபோல

மூள் நிறைந்தது என்றும் எங்கேயோ படித்ததாக அவனுக்கு ஞாபகம் வந்தது. காதலனுக்கு கொடிய துன்பங்கள் வருவது இயற்கை தானே! சிறை வாசத் துன்பமும் காதலனுக்கு வரலாமல்லவா! ஆதலால் நாயகம் தன்னைக் காதலன் பதவியிலிருந்து நீக்கிக் கொண்டதாக சுந்தரிக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிட்டான். துன்பம் வரப்போவதை முன் கூட்டியே அவன் அறிந்து கொண்டதனல் அவைகளை அணை போட்டுத் தடுத்து விடுவதற்காக இந்தக் காதல் தியாகத்திலும் அவன் துணிந்து நின்றான்.

பின்பு, தன் கடிகாரக் கடையை ஒரே பத்து ரூபாய் நோட்டாக மாற்றி இடுப்பில் சொருகிக் கொண்டான்! அங்கிருந்து நேரே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தான். டிக்கட் கொடுக்கப்படும் ஜன்னல் மூடியிருந்ததால் வண்டி வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறதென்று அவன் யூகித்துக் கொண்டான். 'சென்னை—திருச்சி, திருச்சி—சென்னை' என்று அவன் மனதில் ஒரு பெரிய போராட்டம் நடந்துகொண்டிருந்தது. கால்மணி நேரப் போராட்டத்திற்குப் பின் ஒரு முடிவுக்கு வந்தான். கீழே கிடந்த ஒரு காகிதத்தை எடுத்து இரு சம பாகமாகக் கிழித்தான்.

ஒன்றில் திருச்சி என்று எழுதினன். மற்றொன்றில் சென்னை என்று எழுதி, இரண்டையும் மடித்துக் குலுக்கித் தன் முன்னல் போட்டான். (தர்ம சங்கடமான நிலைமை ஏற்படும் போது நாயகம் இம்

மாதிரித் திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்து அதன்படி நடப்பது வழக்கம், அவன் திருச்சிக்குப் போவதா, சென்னைக்குப் போவதா என்ற பிரச்னையை அவன் எடுக்கப் போகும் ஒரு சீட்டே தீர்மானிக்க வேண்டும்.

சாந்தநாயகம் தன் கண்ணை மூடிக்கொண்டு இரண்டு சீட்டுகளில் ஒன்றை எடுக்கப் போன சமயத்தில் "பாண்டிச்சேரிக்குப் போனால் பயமில்லாமல் வாழலாம்" என்று பக்கத்தில் யாரோ சொன்னது அவன் காதில் விழுந்தது. உடனே நாயகம் சீட்டை எடுக்காமலே துள்ளிக்குதித்து எழுந்தான். (அவன் சீட்டை எடுக்க எண்ணியிருந்தாலும் அது அவன் கைக்கு அகப்பட்டிராது. ஏனென்றால் அவன் கண்ணைமூடிக் கொண்டபோது அடித்த காற்று அந்தச் சீட்டுகளை எங்கோ கொண்டு போய் விட்டது.) கடவுளே அசரீரியாக வந்து பிரயாணப் பிரச்சனையைத் தீர்த்துத் தனக்கு வழி விடுவதாக அவனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று. தன் மூளையில் பாண்டிச்சேரியின் ஞாபகம் இதுவரை வராமல் போனதிற்காகத் தன் தலையில் நாலைந்து அடி அடித்துக் கொண்டான்.

உற்சாகத்தோடு கூட்டத்தை நெருக்கித் தள்ளிக் கொண்டு பாண்டிச்சேரிக்கு ஒரு முழு டிக்கட் வாங்கினான் நாயகம். பின்பு அலட்சியமாக டிக்கட் பரிசோதகரிடம் அதைக் கொடுத்து வாங்கிக் கொண்டு "பிளாட் பார"த்தில் வந்து நின்றான். அப்பொழுது மலர்ந்த வெண் தாமரையை வென்றது அவன் முகம். அந்தச் சமயத்தில் ஒரு வண்டு

அல்லது தேனீ வழி தவறி அவன் பக்கத்தில் வந்திருந்தால் அவனுடைய உதடுகளைச் சும்மா விட்டு விடாது. அவன் மனதில் உதித்த உற்சாகம், கவி பாரதியின் "ஜெயமுண்டு பயமில்லை, மனமே" என்ற அடியை ஞாபக மூட்டியது. சாந்தநாயகத்தை வெகு சீக்கிரமாகப் பாண்டிச்சேரியில் கொண்டு சேர்ப்பதற் கென்றே ரயிலும் அன்று அரை நிமிஷம் முன்னதாக வந்து விட்டது. ரயிலில் ஏறிய வுடன் அவனால் பாடாமலிருக்க முடியவில்லை. அவன் பாடப்பாட அவனுக்கு ரயிலில் தாராளமாக இட வசதி கிடைத்தது. வழி முழுதும் பாட்டுத்தான்.

அவன் பாண்டிச்சேரி ஸ்டேஷனில் இறங்கிய துமே, அந்த நகரம் தன்னை ஒரு அடைக்கலப் பொருளாக ஏற்றுக் கொண்ட தென்று கற்பனை பண்ணிக் கொண்டான்.

தனக்குச் சிறைத் தண்டனை கிடைக்குமென்ற பயம் அவனை விட்டு விலகி விட்டது. ஆனால் அவ னுக்கு வயிறு என்று ஒன்று இருக்கிறதே! சாந்த நாயகம் தன் வயிற்றைப் பற்றி அதிகமாகக் கவலைப் படவில்லை. அவனுக்குத் தெரியாத தொழில் என்ன இருக்கிறது? பாண்டிச்சேரிக்கு என்ன தொழில் தேவையாக இருக்கிற தென்று கண்டு கொள்வதற் காக அவன் பாண்டிச்சேரிக் கடைத் தெருவை இரண்டு தடவை சுற்றிப் பார்த்தான்.

பாண்டிச்சேரிக்கு எத்தனையோ தொழில்கள் தேவையாக இருந்தாலும், நாயகம் தன் பொருளா தார நிலைமையை உத்தேசித்து சித்த வைத்தியம்

ஆரம்பிக்கலாமென்று தீர்மானித்துக் கொண்டான். தொழிலை நடத்துவதற்கு ஒரு இடம் வேண்டுமே! கடைத் தெருவில் இரண்டொரு காலிக் கடைகளைக் கேட்டுப்பார்த்தான். அவற்றின் வாடகை, அவன் எதிர் பார்க்கும் வருமானத்தை விட நாலைந்து மடங்காக இருந்ததால், மற்ற இடங்களில் போய் அலைந்து விசாரித்தான். அவனுடைய அதிர்ஷ்டம் அவனை வெகுதூரம் அலைய வைக்கவில்லை. ஊரின் வடக்கே மாதம் இரண்டு ரூபா வாடகையில் ஒரு சின்ன அறை வாடகைக்குக் கிடைத்தது. நாலே கேஸ்களில் தனக்கு நல்ல பெயர் கிடைத்து விடுமென்றும், பிரபலமடைந்த பின்பு, சித்த வைத்தியரான தான், எந்தப் பொந்துக்குள் பதுங்கி யிருந்தாலும் ஜனங்கள் தேடி வருவார்களென்றும் அவனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று. இருந்தாலும், ஆரம்பத்தில், தான் ஒரு சித்த வைத்தியர் என்பதைப் பாண்டிச்சேரி வாசிகளுக்கு எப்படித் தெரிவிப்பது? அதற்காக "நாயகம் பிரபல சித்த வைத்தியர்" என்று ஒரு பலகையில் எழுதினான். அதோடு தன்னைப் பற்றி நாலு பேரிடம் சொல்லி வைக்கும்படி அந்த அறையின் சொந்தக்காரரிடம் கேட்டுக் கொண்டான். எழுதி வைத்த போர்டு காய்வதற்குள் அவன் கடைத் தெருவுக்குப் போய் ஒரு டஜன் காலிப் புட்டிகளும், சில மூலிகைகளும் வாங்கிக் கொண்டு வந்தான். அரை மணி நேரத்திற்குள் புட்டிகளில் பச்சை, சிவப்புத் தண்ணி மருந்துகளும் வெள்ளை, கருப்புப் பவுடர்களும் நிறைந்து விட்டன. அவனுடைய தற்கால பொக்கிஷ நிலைமை, அந்த

அறையிலுள்ள ஒரு ஜன்னலையே கண்ணாடி அலமாரியாகப் பாவிக்கும்படி செய்தது. மருந்து பாட்டில்களை எல்லாம் அதிலேயே அழகாக அடுக்கிவைத்தான். மருந்து வேலை முடிந்தது. மருந்து வைக்கப் புட்டிகளும் வசதியாகக் கிடைத்தது. புட்டிகளை வைக்க அலமாரியில் தயார் பண்ணி விட்டான். இன்னும் என்ன வேண்டியிருக்கிறது? ஒன்றே ஒன்று தான் பாக்கி! அது தான் ஒரு சித்த வைத்தியருக்கு வேண்டிய முகவெட்டு! கையோடு கொண்டுவந்திருந்த சிறு மூட்டையை அவிழ்த்து, க்ஷவரக் கத்தியை எடுத்து தீட்ட ஆரம்பித்தான் சாந்தநாயகம். அதே சமயத்தில் அந்த அரையின் சொந்தக்காரர் அவனெதிரில் தோன்றினர்.

சாந்தநாயகம் மிகவும் சந்தோஷத்தோடு, "இப்போழுதே யாருக்காவது என்னுடைய உதவி தேவையாக இருக்கிறதா?" என்று கேட்டான். வந்தவர் சிரிப்பை அடக்கிக் கொண்டு, "இல்லை சார், என்னுடைய பணத்தேவையை உத்தேசித்துத் தான் உங்களிடம் வந்தேன்" என்றார். "ஓஹோ! வாடகையை முன் கூட்டியே கொடுத்து விட வேண்டுமோ!....ஆமாம்! நேற்றே சொன்னீர்களே!....சார்! இப்போ ஒரு ரூபா, பன்னிரண்டணாக் குறைவாக இருக்கிறது. நாளைக் காலையில் கண்டிப்பாகத் தந்து விடுகிறேன். அதுவரை பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி அவரை அனுப்பி விட்டான்.

சாந்தநாயகம் அவரிடம் மறுநாள் வாடகையைக் கொடுப்பதாகச் சொன்னது எக்கச்சக்க

மான அந்த நிலைமையைச் சமாளித்துக் கொள்ளத் தான். உண்மையில் மறுநாள் காலையில் தான் வாக்குறுதி செய்தபடி கொடுக்க முடியாதென்பது அவனுக்கு நன்ருகத் தெரியும். அவர் வெளியே போனவுடன் "நாளைக் காலையில் எப்படி வாடகை கொடுப்பது" என்ற கவலையில் மூழ்கி விட்டான். பாண்டிச்சேரி வழக்கப்படி வாடகையை முன் கூட்டியே கொடுத்துவிட வேண்டுமென்று வீட்டுக் காரர் சொல்லி யிருந்ததை நாயகம் மறந்தே போனுன். அதனுலேயே தன் கையிலிருந்த பணம் முழுவதையும் செலவழித்து மூலிகைப் பொருள் கள் வாங்கி விட்டான். மீதி யிருந்த நாலணு அவ னுடைய அன்றையச் சாப்பாட்டிற்கே போதாம லிருந்தது. மறுநாள் காலைக்குள், இரண்டு ரூபாய் வரும்படி வருவதென்பதும் நடக்காத காரியம். ஆகவே அவன் இந்த இக்கட்டான நிலைமையில் கிடந்து தத்தளித்துக் கொண்டே க்ஷவரத்தை ஆரம்பித்தான்.

அப்பொழுது தெருவில்,

"என்ன டாக்கீஸ்!"

"மாயா டாக்கீஸ்!"

"என்ன தார்?"

"பட்டணத்தார்!" என்று கிளம்பிய சினிமா விளம்பரச் சப்த அலைகள், க்ஷவரம் பண்ணிக் கொண்டிருந்த சாந்தநாயகத்தின் காதுகளில் போய் மோதின. உடனே பட்டினத்தாரின் வாழ்க்கை அவன் கண் முன் ஒரு திரைப்படச்

சுருள் போலத் தொங்கியது. அவன் படித்திருந்த பட்டினத்தார் பாட்டும் ஞாபகத்துக்கு வராமலிருக்க வில்லை. பாடினான்.

"மாடுண்டு, கன்றுண்டு, மக்களுண்டென்று
மகிழ்ந்ததெல்லாம்
கேடுண்டெனும் படிக் கேட்டு விட்டோமினிக்
கேள் மனமே (அட பாவி மனமே கேள் !)
ஓடுண்டு, கந்தையுண்டு, உள்ளெழுத்தைந்து
ஓத உண்டு (நிச்சயமாக உண்டு)
தோடுண்ட கண்டனடியார் நமக்குத்
துணையுமுண்டே"

(குறிப்பு: வளைவிற்குள் போட்டிருக்கும் வார்த்தைகள் பாட பேதங்கள் அல்ல. சாந்தநாயகம் தன் உற்சாகத்தினால் சேர்த்துப் பாடிய வார்த்தைகள் தான்.)

சாந்தநாயகம் பாட்டைப் பாடி முடித்ததும், சந்நியாசமே தன்னைச் சிறை வாசத்திலிருந்து காக்கக் கூடிய, மாபெரும் சாதனம் என்று உறுதி கொண்டான். மண், பெண், பொன் இவற்றில் பற்று வைத்திருந்தால் தானே இடைஞ்சல்! உண்ணவும், உடுக்கவும், படுக்கவும், அப்பன் பட்டினத்தார் கூறியபடி தீர்மானித்து விட்டால், என்னை யார் என்ன செய்ய முடியும்? முப்பதாவது வயது முடிந்த பிறகு வேண்டுமானால் துறவறத்தைத் துறந்து விட்டு இல்லறத்திற்குத் தாவிக் கொள்கிறது! இவ்வாறு அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் சுந்தரி அவனுடைய மனக் கண் முன் தோன்றினாள். உடனே ஆனந்த பரவசத்தால்

அவனுடைய உடம்பு குபீரென்று பூரிப்படைந்தது. ஆனால் அவன் கன்னங்களில் உலாவிக் கொண்டிருந்த க்ஷவரக் கத்தி, கன்னச் சதைகள் பூரித்து எழுவதை அறியாமல் அப்படியே நின்று விட்டது. மேலெழுந்த சதை கத்தியைத் தள்ளவே சாந்த நாயகத்தின் கன்னத்தில் சிறிது காயம் ஏற்பட்டது. தன்னிடமிருந்த மருந்துகளின் குணங்களை அவன் நன்ருக அறிந்திருந்ததால், நாயகம் வெட்டுக் காயத்தில் கொஞ்சம் மண்ணைத் தெள்ளிப் போட்டான்.

சிறிது திறந்து வைக்கப் பட்டிருந்த அந்த அறைக் கதவு முழுவதும் திறக்கப்பட்டது. கதவோடு ஒரு தாடியும், தாடியைத் தொடர்ந்து, அதை உடைய ஒரு சாமியாரும் அறைக்குள் நுழைந்தார். சாந்தநாயகம் தன்னுடைய ரண சிகிச்சை ஒருவருக்கும் தெரிந்து விடக் கூடாதென்பதற்காகக் கடைக் கண்களால் அவரைப் பார்த்து விட்டு "சாமியாரே! இது வைத்தியசாலை; வீடல்ல" என்ருன்.

சாமியார் சாவதானமாக, "அப்பனே! நான் உன்னிடம் பிச்சை கேட்க வரவில்லை. என்னுடைய காவி அங்கியையும் இந்த மூட்டையையும் இங்கே கொஞ்சம் வைத்திருக்க வேண்டும். பக்கத்திலுள்ள குளக் கரையில் போய் ஸ்நானம் பண்ணி விட்டு வந்து எடுத்துக் கொள்கிறேன்" என்ருர்.

சாந்தநாயகம் அவரை மறுபடி திரும்பிப் பார்க்காமலே "சரி, சரி. வைத்துவிட்டுப் போம்" என்ருன். சாமியார் தான் அணிந்திருந்த காவி அங்கி, யோக தண்டம், தலைப்பாகை, மூட்டை ஆகிய

ங்களை ஒரு மூலையில் வைத்து விட்டுப் பின் பக்கத்து வாசல் வழியாக ஒரு சந்திற்குள் போய், அங்கிருந்து அடுத்த தெருவிற்குப் போய்விட்டார்.

சுவாமியார் போன கால் மணி நேரத்திற்கெல்லாம் சாந்தநாயகத்தின் கண்கள் அவர் வைத்து விட்டுப்போன வஸ்துக்களைக் கூர்மையாகப் பார்த்தன. தன் தீர்மானத்திற் கேற்றபடியே சகல சாதனங்களும் அமைந்து வருவதைக் காண அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. சட்டென்று தன் மூட்டையை அவிழ்த்து, அதிலிருந்து தன் ஜாதகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு சாமியாரின் மூட்டைப் பக்கம் போனான். அதை அவிழ்த்துப் பார்த்தான். அதில் கொஞ்சம் சில்லறையும், சில காகிதங்களும், சில மூட்டைப் பூச்சிகளும் இருந்தன. நாயகம் அதோடு தன் ஜாதகத்தையும் வைத்துக் கட்டினான். சாமியாரின் தலைப்பாகையையும் அங்கியையும் எடுத்து அணிந்து கொண்டான்.

தன்னையே மேலும் கீழும் பார்த்துப் பரவசமடைந்தான். மூட்டையைக் கையில் வைத்துக் கொண்டு யோக தண்டத்தை முழங் கைக்கும் இடுப்பிற்கும் இடையில் வைத்தபடியே, அங்கு தொங்க விடப் பட்டிருந்த கையகலத் தகரக் கண்ணாடியின் முன் போய் நின்றான். ஒரு நிமிஷத்திற்கு முன் அதே கண்ணாடிக்குள் முக வெட்டுள்ள, ஒரு சித்த வைத்தியராகத் தோன்றிய சாந்தநாயகம் இப்பொழுது சாக்ஷாத் சாந்தநாயகானந்த அடிகளாகக் காக்ஷியளித்தார்! தன்னை விட்டுப் பிரிய இருக்கும், தனது ஆஸ்திகளான மருந்து பாட்டில்களையும்

க்ஷவரக் கத்தியையும் ஒரு முறை ஆசை தீரப் பார்ப்பதற்காகச் சிறிது கீழே உட்கார்ந்தார் சாந்த நாயக அடிகள். பாசம் பெரிதல்லவா? ஆசையை விட்டு விட்டு நாயகம் எழுந்தபோது தன் அறைக்குள் நான்கு போலீஸ்காரர்கள் நுழைவதைக் கண்டு திடுக்கிட்டான். "உலகத்தையே துறந்து விட்ட தனக்கு இனி இந்த மானிடப் பதர்களிடம் என்ன பயம்!" என்று எண்ணித் தன்னைத் தேற்றிக் கொண்டு அவர்களைப் பார்த்து "ஏது இங்கே வந்தது?" என்று சாவதானமாகக் கேட்டான்.

அதற்குள் ஒரு போலீஸ் அடுத்தவனைப் பார்த்து "அடேடே! சாமியார் அதுக்குள்ளே தாடியை மழுங்கச் சிறைச்சுட்டாரே!" என்றான். உடனே அடுத்தவன் நாயகானந்த அடிகளைப் பார்த்து ஏளனமாக, "சுவாமிகாள்! உங்களுடைய தாடி போய் விட்டால் உங்களை அடையாளம் கண்டு பிடிக்க முடியாதென்று எண்ணி விட்டீர்களோ?" என்றான். இன்னொரு போலீஸ் "சரி, சரி, வாரும் எங்களோடு. உம்மைக் கைது செய்திருக்கிறோம்" என்றான்.

சாந்தநாயகம் தைரியத்தைக் கைவிடாமல் "என்னையா கைது செய்யப் போகிறீர்கள்? நான் எந்தக் கேஸில் சம்பந்தப் பட்டிருக்கிறேன்?" என்று சரமாரியாகக் கேள்விகளை ஆரம்பித்தான்.

"அட இதுதானப்பா பூலோகம். நடக்கறயா; கல்தாக் குடுக்கணுமா? செட்டியார் கடையிலே பணத்தை அமுக்கிக்கிட்டுக் பாண்டிச்சேரியிலே

சாமியார் வேஷம் போடறியோ! வாப்பா கைலா சம்'' என்ருன் ஒரு போலீஸ். ''ஐயையோ! என் பேரு கைலாசம் இல்லேயே. எம் பேர் சாந்தநாய கம். செட்டியார் கடையே எனக்குத் தெரியா தப்பா!'' என்று பதறினன் நாயகம். ''ஏம்பா கதை விடறே? நீ இங்கே தான் வந்திருப்பேன்னு செட் டியார் தந்தி குடுத்திருக்காரப்பா! ரெங்கூனிலே இருந்து உன்னுடைய போட்டோவைக்கூட அனுப் பிச்சிருக்காரு. இதோபாரு! நீ மூந்தா நாளு கப் பலே விட்டு இறங்கறபோதே ஒரு மாதிரி ''திருதிரு'' ன்னு முழிச்சே! நாங்களும் உன்னேப் பார்த்தும் பாராதது போலே போயிட்டோம். நீ தாடி வளர்த் திருந்ததனுலே கொஞ்சம் சந்தேகமா இருந்தது. உன் மேலே ஒருகண்ணு வச்சுக்கிட்டே வந்தேன். இப்போ நீ தாடியையும் எடுத்துட்டே. அடையா ளம் கண்டு பிடிக்க ரொம்ப சௌகரியமாகப் போச்சு. நாங்க உன்னேத் தொடர்ந்து வருகிற சங் கதியை நீ எப்படியோ தெரிஞ்சுகிட்டு இங்கே வந்து தாடியை எடுத்துட்டே. எப்படியும் கைலாசம் கைலாசம் தானே. உன் படத்தை நல்லாப் பார்த்துக் கிட்டாயா! அதிலே இருக்கிறது நீதானு? வேறே யாரு சொல்லு, கைலாசம் இப்பவாவது ஒப் புக் கொள்றயா அல்லது இன்னும் பேரு ஏதாவது மாத்தப் போறயா கைலாசம்?'' என்று புரளியா கச் சிரித்தான் ஒரு போலீஸ்.

படத்தைப் பார்த்தவுடன் சாந்தநாயகம் திக் பிரமை பிடித்தவன் போல நின்று விட்டான். அவ னுக்கு எல்லா விஷயமும் விளங்கி விட்டது. ஆகை

யால் ஒன்றுமே பதில் பேசாமல் அவர்களோடு நடந்தான். கேஸ் விசாரணையின் போது உண்மையையே சொல்ல வேண்டுமென்று தீர்மானித்து விட்டான். ஆனால் கைலாசம் தன் அண்ணன் தானென்று சொல்லி அவனைக் காட்டிக் கொடுக்கவும் விரும்பவில்லை. அவன் அவ்வாறு சொல்லியிருந்தாலும் ஒருவரும் அதை நம்பியிருக்க மாட்டார்கள். ஏனென்றால் கேஸ் நடந்தபோது சாக்ஷியாக விசாரிக்கப்பட்ட செட்டியார் கடைக் கணக்குப்பிள்ளை நாயகத்தின் கன்னத்தைதை நன்றாக உற்றுப் பார்த்து விட்டு "கைலாசம் தன்னுடைய அடையாளத்தை மாற்றுவதற்காகத் தன் கன்னத்திலுள்ள நீள மருவைக்கூடக் கத்தியால் வெட்டி மறைந்திருக்கிறானே" என்றார். இவ்வளவு தெளிவாக அவனைக் கைலாசம்தான் என்று தீர்மானித்த பிறகு, அவன் என்ன சொல்லியும் பயனில்லையல்லவா! ஆனாலும் அவன் கடைசிவரை தன் பெயர் நாயகம் தானென்றே சாதித்து விட்டான்.அதில் அவனுக்கு ஒரு திருப்தி.

"குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொள்ளாததோடு தன் பெயரையும் மறைக்க முயன்றதால் ஒன்பது மாதம் சிறைவாசம்" என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

ஜெயிலில் இருந்த சாந்தநாயகம் ஒருநாள் தன்னோடு இருந்த சகாக் கைதி ஒருவனிடம் தன் ஜாதகப்படி நடந்த அத்தனை விவரத்தையும் அண்ணன் பெயரை மட்டும் மறைத்துச் சொல்லிவிட்டு, "அதில் கண்டிருந்தபடி சிறைவாசம் கிடைத்தது.

ஆனால் களவு செய்த பின் தண்டனை என்று ஜாதகம் சொல்லுகிறதே! நான் ஒரு இடத்திலும் களவு செய்யவில்லையே! அதுதான் எனக்குப் புரியவில்லை!" என்றான்.

உடனே அந்த நண்பன் "ஜோசியரே, நீர் அந்தச் சாமியாரின் மூட்டை முடிச்சுகளைத் திருடினது களவு இல்லாமல் என்னது? இது கூடத் தெரியவில்லையே ஜோசியருக்கு!" என்று அவனுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்து வைத்தான்.

ஒன்பது மாத சிறைவாசமும் முடிந்து சாந்த நாயகம் வெளியே வந்தான். ஜெயில் வாசலில் கைலாசமும் அவனுடைய மனைவி சுந்தரியும் ஒரு வண்டியோடு காத்துக் கொண்டிருந்தார்கள். நாயகத்தைக் கண்ட கைலாசம் ஓடியே போய் அவனைக் கட்டிக் கொண்டு "தம்பி என்னை மன்னிப்பாயா?" என்று கதறிவிட்டான்.

"அண்ணா இதற்காக நீங்கள் வருந்த வேண்டாம். எல்லாம் என் ஜாதகப்படி நடந்தது. அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று சிரித்தபடி வண்டியினுள் இருந்த சுந்தரியைக் கவனித்தான். "சொன்னது உண்மைதான். நான் மோசம் போனேன்!" என்று சுந்தரி கைலாசத்தைப் பார்த்துக் கூச்சலிட்டாள். அவள் சொன்னதன் அர்த்தம் புரியாமல் நாயகம் திகைத்துக் கொண்டிருக்கையில் கைலாசம் ஆரம்பித்தான். "தம்பி, என்னுடைய சாமியார் வேஷச் சாமான்களை நீ யென்று தெரியாமலே பாண்டிச்சேரியில்

வைத்து உன்னிடம் கொடுத்து விட்டு நேராக ஊர் போய்ச் சேர்ந்தேன், நமது வீட்டை யெல்லாம் பழையபடி வாங்கிவிட்டேன்".

"பின்பு எனக்குப் பதிலாக நீ அகப்பட்டுக் கொண்ட செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். அதன் பின்புதான் பாண்டிச்சேரியில் வைத்திய சாலை வைத்திருந்தது நீதானென்று தெரிய வந்தது. உடனே பாண்டிச்சேரிக்கு வந்து என் குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டனையை நானே ஏற்றுக் கொள்ளலாமென்று நினைத்தேன்.

"ஆனால் சுந்தரி என்னை விடவே இல்லை. நான் நாயகம் இல்லை என்று அவளிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவள் கேட்கவே இல்லை. அவள் என்னைக் கல்யாணம் செய்துகொண்டு விட்டாள்" என்று எல்லா விபரத்தையும் விளக்கினான்."

"அதைப் பற்றியும் நான் வருந்தவில்லை அண்ணா!" என்றான் நாயகம்.

"தம்பி நான் உனக்கு எவ்வளவோ தீங்கு செய்துவிட்டேன்" என்று கைலாசம் வருந்தினான்.

"அண்ணா, நீங்கள் ஒன்றுமே தீங்கு செய்ய வில்லை. எல்லாம் என்னுடைய முப்பதாம் வயது செய்த கொடுமைகள்! இன்னும் மூன்று மாதங்கள் தான் இதன் அட்டகாசம் நடக்கும் அதன் பின்பு கல்யாணமும் குபேர சம்பத்தும் கிட்டும் என்று ஜாதகம் சொல்லுகிறது அண்ணா."

"தம்பி! நீ சொல்லுவது மிகவும் உண்மை. சுந்தரியின் தங்கைக்கு, அவளுடைய பாட்டி ஒரு கிராமத்தையே ஆஸ்தியாகவிட்டிருக்கிறாள். அவள் உன்னையே கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அநேகமாகச் செய்து விட்டேன்." என்று சொல்லிக் கொண்டே மூவரும் வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள். "மூன்று மாதத்திற்குப் பின் தான் எனக்குக் கல்யாணம் நடத்தவேண்டும்" என்றான் சாந்தநாயகம். அவ்வாறே முப்பத்தோராவது வயதில் அவன் சுந்தரியின் தங்கையை மணந்து குபேர சம்பத்தைப் பெற்றான்.

# சைக்கிளின் காதை

எல்லோரும் சைக்கிள் வைத்திருக்கிறார்களே நமக்கும் ஒன்று இருக்கட்டுமே என்று நினைத்து எங்களூர் ராமன் கடையில் ஒரு பழைய சைக்கிளை ரூ. 4–6–6 க்கு வாங்கினேன். அதன் மேல் ஏறி சிறிது தூரம் ஓட்டிப் பார்த்தேன். கொஞ்சம் சேட்டை பண்ணிற்று. ஆனாலும் ரூபாய் கொடுத்ததற்குத் தகுந்தபடி தானே சைக்கிளும் இருக்கும் என்று ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டேன். வெகு சங்கடத்துடன் சைக்கிளில் சவாரி செய்து வீடு போய்ச் சேர்ந்தேன். சைக்கிளைக் கட்டிப்போடாமலிருந்தால் அது பிறர் கைக்கு ஓடிப்போய் விடுமோ என்று பயந்து வீட்டுத் தூணோடு கட்டிப் போட்டேன்.

போஜனத்தை முடித்துக்கொண்டு என் சைக்கிளில் கொஞ்சதூரம் 'குஷி' யாகப் போய்விட்டு வரலாமென்று எண்ணி சைக்கிளை எடுத்தேன். கல்லுப்போல இருந்த டயர்கள் துணி போலத் துவண்டிருந்தன. எனக்கு என்னவென்றே புரியவில்லை. அடுத்த வீட்டுக் கிச்சனிடம் இதைத் தெரிவித்தேன். சைக்கிள் நிறையக் காற்றுக் குடிக்கு

மென்றும் அதன் வயிற்றிலிருந்த காற்று முழுவதும் ஜீரணமாகிவிட்டதால், ஒரணுக் கொடுத்துத் திரும்பவும் காற்றுப்புகட்ட வேண்டுமென்றும் சொன்னன். சைக்கிளுக்குக் காற்றுப் புகட்டவேண்டிய விதம் எனக்குத் தெரியாததால் அவனிடமே ஒரணுவையும் சைக்கிளேயும் கொடுத்தனுப்பினேன். அவன் சிறிது நேரத்தில் உப்பிய டயர்களோடு என் சைக்கிளைக் கொண்டுவந்து கொடுத்தான்.

நான் சைக்கிளில் ஏறிப்புறப்பட்டேன். அரை மைல் தூரம் போவதற்குள் எனக்கு அலுப்பாகி விட்டது. இதற்குள்ளாக டயருக்குள்ளிருந்த காற்றும் ஜீரணமாகிவிட்டது. நான் சாப்பிட்ட சாதமும் ஜீரணமாகி விட்டது. நாமாவது சாப்பிடாமல் நடக்கலாம். பாவம். காற்றில்லாத சைக்கிளில் ஏறிச் சவாரி செய்யக்கூடாதென்று நினைத்து அதைத் தள்ளிக்கொண்டே வீடு வந்துசேர்ந்தேன்.

அரை மைல் தூரம் பிரயாணம் செய்வதற்கு ஒரணுக் காற்று வீதம் வாங்கிப் புகட்ட நமக்குக் கட்டிவராது என்று எனக்குப்பட்டது. இந்த அவதியைப்பற்றி என் நண்பன் கோபுவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். கோபு என் அறியாமையை விளக்கிப் பஞ்சர் ஒட்டும் விதத்தையும், இலவசமாகக் காற்றடைக்கும் விதத்தையும் கற்றுக் கொடுத்தான். அதிலிருந்து நான் சிறிது சிறிதாக சைக்கிளைப்பற்றிய பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். அப்படித் தெரிந்து கொண்ட காரணத்தால் நான் என் சைக்கிளுக்காக ரூ. 27-4-9 செலவழிக்க நேரிட்டது. இவ்வளவு பணம் செலவழித்

தும்கூட என் சைக்கிளை மற்றவர்கள் ஐந்தேகால் ரூபாய்க்குத்தான் மதிப்பிட்டார்கள். இதைக்காட்டி லும் கேவலம் வேறு என்ன வேண்டும்? சைக்கி ளில் ஏறிவிட்டால் எப்போது இறங்குவோமென் றிருந்தது. பெடலை இரண்டு தடவை சுற்றினல் சக் கரம் ஒரு தடவை சுற்றுகிறது. பிரேக் போட்டால் தான் வேகம் அதிகரிக்கிறது. சைக்கிள் புறப் பட்டுவிட்டால் சப்தம் காதடைத்து விடுகிறது. சில வேளைகளில் சைக்கிள் ஓடிக் கொண்டிருக்கும் போதே சக்கரங்கள் தனியாக ஓட ஆரம்பித்து விடுகின்றன. கைப்பிடியை வலது பக்கம் திருப்பி னல் முன் சக்கரம் இடது பக்கம் திரும்புகிறது.

ஒரு நாள் என்னை என் சைக்கிளோடு சந்தித்த சங்கரன் "அடபாவமே இந்த சைக்கிளை நீயா வாங் கினாய்? இது திருவனந்தபுரம் ரஸ்தாவில் துண்டு துண்டாகக் கிடந்ததாம். அந்த வழியாகப் வந்த பூனியாண்டியா பிள்ளை இதை ஒரு சாக்கில் போட் டுக் கட்டிக் கொண்டுவந்து அரை ரூபாய்க்கு சைக் கிள் கடையில் போட்டாராம். சைக்கிள் கடைக்கா ரன் இதை ஒட்டுப் போட்டு உன் தலையில் கட்டி விட்டான் போலிருக்கிறது." என்ருன்.

இன்னும் ஒரு நாள் ஒரு கடையில் என் சைக் கிளை வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு அறிமுகமில்லாத ஒரு மனி தன் என் சைக்கிளைத் தொட்டுத் தொட்டு முன் னும் பின்னும் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண் டிருந்தான். அவ்வளவு கூர்மையாக அவன் என்

சைக்கிளைப் பார்க்கவேண்டிய காரணம் என்ன வென்றே எனக்குத் தெரியவில்லை. "என்ன ஐயா, நீர் இந்த சைக்கிளை அரை மணி நேரமாக உற்றுப்பார்த்துச் சிரிக்கிறீரே. என்ன விஷயம்?" என்று கேட்டேன். அதற்கு அந்த மனிதன் "ஒன்றுமில்லை. இந்த சைக்கிளை தென் காசியி லுள்ள ஒரு வாத்தியார் வைத்திருந்தார். அவர் எனக்கு இரண்டுரூபாய்தரவேண்டியிருந்தது. அதற் குப் பதிலாக இந்த சைக்கிளை என்னிடம் கொடுத்து விட்டார். நான் அதை சில காலம் ஓட்டி விட்டு என் மருமானிடம் கொடுத்து விட்டேன். என் மருமான் ஒருநாள் இந்த சைக்கிளில் நாங்கு நேரியிலிருந்து பணகுடிக்குப் போகும் போது, திடீ ரென்று ஒரு கல்லில் மோதித் துண்டு துண்டாக நொருங்கிப் போய் விட்டதாம். அவைகளை பொறுக் கிக் கொண்டுவருவது கூடாத காரியமென்று நினைத்து அங்கேயே போட்டுவிட்டு வந்துவிட்டானும். அதே சைக்கிள்தான் இது. இதை நான் போட்டது எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது." என்று அதன் வரலாற்றின் ஒரு பாகத்தைக் கூறி முடித் தான்.

இந்த மாதிரியான வரலாறுகளைக் கேட்கக் கேட்க என் சைக்கிளில் ஏறிச் சவாரி செய்யவே எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. யாரிடமா வது அதை சகாய விலைக்குத் தள்ளிவிடலாமென் ருல் வாங்குவார் யாருமில்லை. ஒருவர் அதை இரண்டரை ரூபாய்க்குக் கேட்டார். (அந்த ஆசாமி பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பியோடி

வந்தவரென்ற விஷயம் பின்னால் தெரியவந்தது.) நானும் சரியென்று ஒப்புக்கொண்டேன். ஆனால் அந்த பேர்வழி இரண்டு நாள் கழித்து ரூபாய் தருவதாகச் சொன்னார். நான் அதற்கும் சம்மதித்து, சைக்கிளை அவரிடமே கொடுத்து விட்டேன்.

மறுநாள் காலையில் அவர் சைக்கிளோடு என் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். பணம்தான் கொண்டு வந்திருக்கிறாரென்று எண்ணி "என்ன? பணம் கொண்டு வந்தீர்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர் "இல்லை ஐயா, இந்த சைக்கிள் சும்மா கொடுத்தாலும் வேண்டாம். இதிலுள்ள ஒட்டுகளை எண்ணிப் பார்த்தவுடன் நீங்கியிருந்த பைத்தியம் எனக்கு பழையபடி திரும்பிவிட்டது போலிருந்தது. ஆகையால் இந்த சைக்கிள் எனக்கு வேண்டாம். தயவு செய்து வைத்துக்கொள்ளுங்கள்." என்று சொல்லிச் சைக்கிளை வைத்துவிட்டு ஓடியே போய்விட்டார்.

இனி நான் என்ன செய்வது? திடீரென எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அதை யாருக்காவது தானம் பண்ணிவிடத் தீர்மானித்தேன். எங்களூரிலுள்ள ஒரு ஏழைப் பையன் அடுத்த ஊரிலுள்ள பள்ளிக்கூடத்திற்குத் தினமும் நடந்தே போய்க்கொண்டிருந்தான். அந்த பையனைக் கூப்பிட்டு "மனமாற இனாமாக இந்த சைக்கிளை எடுத்துக் கொள்ளப்பா," என்று கொடுத்தேன். ஆனால் அவன் என் சைக்கிளைச் சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு "சார், சைக்கிளுக்கு லைசென்ஸ் எடுக்க வேண்டும் போலிருக்கிறதே.

அதற்கு என்னிடம் பணமில்லை. நீங்களே லைசென்ஸும் எடுத்துக் கொடுத்தீர்களானால், உங்கள் சைக்கிளை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன் " என்றான். எனக்குப் பிரமாதமாகக் கோபம் வந்து விட்டது. " அப்பனே, உனக்கு லைசென்ஸும் எடுத்துக் கொடுக்க வேண்டுமா? ரொம்ப அழகுதான் போ." என்று சொல்லி அவனை அனுப்பி விட்டு, சைக்கிளைத் தள்ளிவிட வேறு பல யோசனைகள் செய்து கொண்டிருந்தேன்.

என் மூளையில் இன்னொரு யுக்தி உதித்தது. சைக்கிளை வாங்கினதன் காரணமாக என் மூளை கூட அபாரமாகக் கூர்மையாகிக்கொண்டு வந்தது. புதிதாகத் தோன்றிய யுக்தியின்படி என் சைக்கிளைத் திருநெல்வேலி ஜங்ஷனில் அதிக ஜன நடமாட்டமுள்ள கடைத் தெருவின் ஓரத்தில் வைத்து விட்டுப் பேசாமல் வீட்டுக்கு வந்துவிட்டேன். அட பாவி சைக்கிளே! மறு நாளும் அதே இடத்தில் அப்படியே ஒரு கூடைத் தூசியுடன் இருந்தது. இன்னும் அப்படியே கிடக்கட்டும். யாராவது திருடிக்கொண்டு போனால் போகட்டும். இல்லையானால் அங்கேயே கிடந்து துருப் பிடிக்கட்டும் என்று நினைத்து அதை அங்கேயே விட்டு விட்டேன்.

அதற்கடுத்த நாள் காலையில் எங்களூர் முனிசிபல் சேவகன் எனது அருமைச் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு என் வீட்டுக்கு வந்தான். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏன்? எனது கியாதி பெற்ற சைக்கிளை அவனாவது ஏற்றுக் கொண்

டானே என்ற மகிழ்ச்சிதான். அதைத் தனக்கு எடுத்துக் கொள்ளலாமா என்று என்னிடம் கேட்கத்தான் வந்திருக்கிறான் என்று நான் எண்ணிக் கொண்டு "என்னப்பா சமாச்சாரம்?" என்றேன். அந்த ஈவிரக்கமற்ற சேவகன் நான் திடுக்கிடும்படியாக "ஐயா, இது உங்கள் சைக்கிள் என்று கேள்விப் பட்டேன். இதற்கு லைசென்ஸ் எடுக்க வேண்டும். இன்னும் பத்து நாட்களுக்குள் எடுக்காவிட்டால் முனிசிப்பாலிட்டியிலிருந்து நோட்டீஸ் வரும்" என்று சொன்னான். எனக்குக் கோபமும் சிரிப்பும் ஒன்றையொன்று முந்திக் கொண்டு வந்தது. இருந்தாலும் என் பொங்கி வரும் உணர்ச்சிகளைச் சமாளித்துக் கொண்டு "அப்பா, லைசென்ஸ் எடுக்காவிட்டால் முனிசிப்பாலிட்டியார் சைக்கிளைத் தானே எடுத்துக் கொள்ளுவார்கள்?" என்று கேட்டேன். அவன் "ஐயா, இது லைசென்ஸ் தொகை கூடப் பெறாது என்பதற்காகத் தான் உங்கள் வீட்டைத் தேடிச் சைக்கிளைக் கொண்டு வந்தேன். இல்லையானால் அப்போதே இதை முனிசிபல் ஆபீசுக்குக் கொண்டு போயிருப்பேன். லைசென்ஸுக்கு உண்டான தொகையை உங்களிடமிருந்து எவ்விதத்திலும் வசூலித்துவிடவே செய்வோம்" என்று அழுத்தமாகப் பன்மையில் பதில் சொன்னான். இதற்கு மேல் அவனிடம் நான் என்ன சொல்வது? "சரி. இரண்டு நாளில் லைசென்ஸ் எடுத்து விடுகிறேன்" என்று தயவாகச் சொல்லி அவனை அனுப்பிவிட்டு அன்றைய இரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன்.

இரவு மணி பன்னிரண்டடித்தது. சந்தடி செய்யாமல் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு போனேன். தாமிரபரணி யாற்றில் இரு கரையும் புரண்டோடிக் கொண்டிருந்தது. சைக்கிளைத் தூக்கிக்கொண்டு பாலத்துக் கைபிடிச் சுவரில் ஏறினேன். "ஏ புனித நதியே ஒருவரும் ஏற்றுக் கொள்ளாத எனது சைக்கிளை நீயாவது அன்போடு ஏற்றுக்கொள்." என்று சொல்லிக் கொண்டே சைக்கிளைத் தடாலென்று ஆற்றினுள் போட்டு விட்டு சந்தோஷமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

இரண்டு நாட்கள் கழிந்தன. லைசென்ஸ் ஆசாமியும் சண்டை பிடிப்பதற்காக வந்து சேர்ந்தான். நான் அவனிடம் "அப்பா என் சைக்கிளை ராமநாதபுரத்திலுள்ள ஒரு சிநேகிதருக்குக் கொடுத்தனுப்பிவிட்டேன். இனிமேல் அது என்னிடமிருந்தால் லைசென்ஸ் கட்டணத்தை வந்து வாங்கிக்கொள்." என்று சமாதானப் படுத்தினேன். அவனும் என் வீட்டினுள்ளெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, "உங்கள் சைக்கிள் ரோட்டில் எங்காவது கிடந்தால் உடனே இங்கே கொண்டுவந்து போட்டுவிட்டு லைசென்ஸ் தொகையை உங்களிடம் பிரித்துவிடுவேன்." என்று பயமுறுத்திவிட்டுச் சென்றான்.

நாலைந்து நாட்கள் கழிந்தன. எங்களூர் மாரிமுத்து ஒரு நாளிரவு எதையோ 'கடபுட' வென்று தள்ளிக்கொண்டு என் வீட்டிற்கு வந்தான். அவன் அவ்வாறு தள்ளிக்கொண்டு வந்தது என்ன

வென்று நினைக்கிறீர்கள்? நான் ஆற்றினுள் எறிந்த எனது அருமை சைக்கிள் தான். அதன் மேலெல்லாம் ஒரே சகதியாக இருந்தது. அதைச் சிரமப்பட்டுத் தள்ளிக்கொண்டு வந்த மாரிமுத்து "இது ஒங்க சூச்ச வண்டி தானுங்களே. எந்தப் பயலுகளோ இதைக் களவாண்டுக்கிட்டுப் போற போது, யாராச்சும் பார்த்துக்கிட்டாங்களோ என்னவோ. ஆத்துக்குள்ளர வீசிட்டுப் போயிருக்கான். நானு இன்னிக்கி ராவு பேட்டைக்கி போயிட்டு ஆத்துக்குள்ளற கூடி வந்தேனுங்க. தண்ணி சாஸ்தியா இருக்கேன்னு செத்த மேக்கே லாந்தி வந்தேனுங்க. அப்படி வர்றப்போ கால்லே சுறு மீனுட்டமா ஏதோ குத்துச்சுங்கோ. என்னடான்னு எடுத்துப் பார்க்கிறேன். ஒங்க பைஸ்கோல். உடனே தூக்கிக்கிட்டு ஒங்க வீட்டுக்கு ஒடியாறேனுங்க." என்று நடந்ததைச் சொன்னான்.

என் சைக்கிளின் மீது எனக்கு அபாரமான இரக்கம் வந்து விட்டது. எப்படித் தள்ளிவிட்டாலும் நமது பேர்போன சைக்கிள் நம்மைவிட்டுப் போக மாட்டேனென்கிறதே. ஆகையால் இதுக்கும் நமக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. என்று எண்ணி சைக்கிளை அவன் கையிலிருந்து வாங்கிக் கொண்டேன். அவனுக்கு காப்பிக்கு கொடுத்தேன். கொடுத்து மாரிமுத்து, இந்த சைக்கிளை ஆற்றில் கிடந்து எடுத்ததையும் என்னிடம் கொடுத்ததையும் யாரிடமாவது வெளியிட்டு விடாதே என்று அவனை எச்சரித்து அனுப்பிவிட்டேன். பின்பு சைக்கிளின்

மேலிருந்த சகதியெல்லாம் நன்ருகக் கழுவி என் வீட்டு மாடியிலுள்ள ஓர் அறையில் போட்டுப் பூட்டி வைத்தேன். அது அங்கு இருப்பது ஒருவருக்கும் தெரியாது. ஒரு வருஷம் கழிந்தது. எனக்கு மணம் முடிந்து இப்போது சுமார் மூன்று மாதங்கள் ஆகின்றன. சைக்கிளின் ஞாபகம் எனக்கு சற்றும் கிடையாது. அதை வைத்திருந்த அறையை திறக்கவேயில்லை. ஒரு நாள் வீட்டை வெள்ளை அடிக்க வேண்டியிருந்தது. அருமை சைக்கிளின் ஷெட்டாகிய அந்த அறையையும் சுத்தம் பண்ண வேண்டும் அல்லவா. எனது மனைவி சுந்தரி தற்செயலாக அறைக்குள் இருந்த சைக்கிளைப் பார்த்தாள். பார்த்தவுடன் அதன் அருகில் சென்று எதையோ கூர்ந்து பார்த்தாள். அவள் மிகவும் வியப்போடு "இந்த சைக்கிள் ஏது? இது எவ்வளவு காலமாக உங்களிடம இருக்கிறது?" இதை ஏன் நீங்கள் உபயோகிக்கவில்லை? என்று பலவிதமான கேள்விகள் கேட்டாள்.

"இவ்வளவு தானா! இன்னும் கேள்விகள் உண்டா? நான் இந்த சைக்கிளை நேராக லண்டனிலிருந்து வரவழைத்தேன். அது ஒடிந்து போய் விட்டதால் இந்தஅறையினுள், ஒடிந்த சாமான்களோடு போட்டு வைத்திருக்கிறேன்" என்று சொல்லி விட்டுச் சிரித்தேன்.

சுந்தரி இன்னும் அதிகமாகச் சிரித்து விட்டு "முழுப் பொய் சொல்லுகிறீர்கள்- இதோ பாருங்கள் என் பெயரின் முதலெழுத்து எஸ்." என்று

கைப்பிடியில் ஒரு இடத்தைக் கத்தியால் சுரண்டிக் காண்பித்தாள். "உன் பெயரா? இதில் எப்படி வந்தது"'' என்று ஆச்சரியப்பட்டேன். இது என் சைக்கிளாக்கும். முன்னால் இது 'லேடிஸ்' சைக்கிளாக இருந்தது. பள்ளிக்கூடத்திற்கு இதில் தான் போய் வருவேன். ரெம்பப் பழசாகப் போனதோடு இரண்டொரு இடங்களில் ஒடிந்தும் போய் விட்டதால், என் தம்பிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த, தென்காசி வாத்தியாருக்கு அப்பா இதை இனாமாகக் கொடுத்து விட்டார்கள். அந்த வாத்தியார் இதை ஒட்டுக் கிட்டுப் போட்டு இந்த மாதிரி ஆக்கி இதில் போய் வந்து கொண்டிருந்தாரென்று கேள்வி. அதன் பிறகு இந்த சைக்கிளைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அதிருக்கட்டும்? இந்த சைக்கிள் உங்களிடம் எப்படி வநதது. அதைச் சொல்லுங்கள்.'' என்றாள் சுந்தரி.

என் சைக்கிளைப் பற்றி நான் கேள்விப் பட்ட தொடர் கதையையும், அதைத் தள்ளிவிட நான் செய்த முயற்சிகளையும் சுந்தரியிடம் ஒப்புவித்து விட்டு, "இது என்னை விட்டுப் போக இஷ்டமில்லாதது போல் திரும்பத் திரும்ப என்னிடமே வந்து சேர்ந்ததால், இதற்கும் நமக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறதென்று எண்ணி அப்படியே வைத்திருக்கிறேன்'' என்றேன்.

"சம்பந்தமில்லாமலா அது உங்களிடம் வந்திருக்கிறது? நான் உங்கள் வீட்டிற்கு வரப்போகிறேன் என்பதை இது எப்படியோ தெரிந்து கொண்டு

அந்த விஷயத்தை முன் கூட்டியே தெரிவிப்பதற்காக உங்களிடம் தூதாக வந்திருக்கிறது. அப்படிப்பட்ட அருமையான சைக்கிள் தூதனை நீங்கள் விரட்டலாமோ?'' என்று தன் சைக்கிளைத் தட்டிக் கொடுத்தாள். அவளுடைய அன்பை ஏற்றுக் கொண்டது போல சைக்கிளும் 'சலசல' வென்று சப்தமிட்டது. அப்பொழுதே நாங்கள் ஒரு தீர்மானம் செய்து கொண்டோம். அந்தத் தீர்மானம் என்ன தெரியுமா? எங்கள் அன்பிற்குகந்த சைக்கிளை ஆயிரம் பொன் கொடுத்துக் கேட்டாலும், கொடுப்பதில்லை யென்பது தான்.

---

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்
மொழியியல் துறை.